திராவிடன்

ஆசிரியர் : என்.வி.என்.

12—10—63
28 பக்கங்கள்

வார இதழ்

50 காசு.

தலையங்கம்

மலர். 17. 12—10—63 மாலை 11

கடமையாற்ற வாரீர்!

இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்! எல்லோரும் வாருங்கள் தோழர்களே! என்ற இதய கீதத்தை நமது இயக்கம்—தென்னவர் பெரும்படை 1938-ம் ஆண்டிலிருந்தே எழுப்பிற்று! போர்க்கொடி உயர்த்திற்று. அறப்போர் புரிந்தது! 1938-ம் ஆண்டு மகத்தான வெற்றியும் பெற்றது; இதை நாடறியும். மீண்டும் 1948-ம் ஆண்டில் இந்தி ஆதிக்கம் தமிழகத்தில் கால் ஊன்ற முற்பட்டபோது தமிழ்ப் பெருங்குடி மக்கள், பொதுவாக தென்னக மக்கள் திரண்டெழுந்து இந்தி ஆதிக்கத்தைத் தகர்த்தெறிந்தனர். இந்த இரு அறப்போராட்டங்களில் நமது அண்ணா அவர்களும், பெரியார் அவர்கள் உள்ளிட்ட தலைவர்களும் அருந்தொண்டர்களும் ஆற்றிய மகத்தான கடமைகளை இந்தச் சிறப்பிதழில் பல தோழர்கள் தங்களது அரிய கட்டுரைகளின் வாயிலாக விவரித்திருக்கிறார்கள்.

மீண்டும் இந்தி ஆதிக்கத்தினர், குறிப்பாக இந்திய அரசினர் இந்தியைத் திணிக்க முற்பட்டபோதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் வன்மையாக எதிர்த்தும், அறப்போரிலீடுபட முனைந்தும் நின்றதையும், அதன் காரணமாக மதிப்பிற்குரிய பண்டித நேரு அவர்கள் இந்திய அரசின் சார்பில் உறுதிமொழி தந்ததையும் உலகம் அறியும்.

என்றாலும் இந்தியப் பிரதமர் தமக்குள்ள பெருமதிப்பையும் மறந்து வெளிப்படையாகவே தாம் தந்த உறுதிமொழியை மீறிவிட்டார்கள். அதாவது இந்தி வெறியர்களின் ஆசாபாசத்திற்கு பிறமொழி பேசும் மக்களை, குறிப்பாகத் தென்னக மக்களை அடிமைப்பட்டிருக்க வேண்டிய மக்களாக ஆக்கத் துணிந்துவிட்டார்.

பண்டித நேரு அவர்களின் துரோகத்தையும் இந்திய அரசின் எதேச்சாதிகாரத்தையும் திராவிட முன்னேற்றக் கழகமும், மற்ற கட்சிகளும், கல்வி நிபுணர்களும் அசைக்க முடியாத ஆதாரங்களைக் காட்டி இந்தி ஆதிக்கத்தைக் கண்டித்துங்கூட, பண்டித நேரு அவர்கள் நீதியின் வழி நின்று செயலாற்ற மறுத்துவிட்டார்.

எனவேதான் திராவிட முன்னேற்றக் கழகம் அறப்போராட்டத்தில் ஈடுபடவேண்டியதாயிற்று.

அதற்கு முன்னதாக பாராளுமன்ற மேலவையில் அறிஞர் அண்ணா அவர்களும் மற்றும் பாராளுமன்றத்திலும் தமிழக சட்டமன்றத்திலும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் இந்தியைத் திணிக்கும் அநீதிகளை எடுத்துக் கூறியுங்கூட அந்த நியாயமான வாதங்களை அரசினர் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த வாதங்களை அடிப்படையாகக் கொண்டு மறு யோசனை செய்கிறோம் என்ற அளவுக்குக்கூட உறுதிகூற முன்வரவில்லை. ஆதலின் அறப்போராட்டத்தில் ஈடுபடுவது மக்களின் நியாயமான கடமையாகிவிட்டது. இன்னும் சொல்லப்போனால் இந்தியை எதிர்த்துப் போராடவேண்டிய உணர்ச்சியை—நிலைமையை அரசினரின் பிடிவாதமான போக்கே உண்டாக்கிவிட்டது என்பதை நியாய புத்தியுடன் பிரச்சினையைச் சிந்திக்கும் எவரும் ஒப்புக்கொள்வார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் வலியசென்று போராட்டங்களை நடத்தி வளர்க்கவேண்டிய அளவுக்கு செல்வாக்கற்ற கட்சியாக இல்லையென்பதை நாடாள்வோரே அறிவர். இந்தித்திணிப்பை எதிர்த்து அறப்போராட்டத்தில் கழகம் ஈடுபடப்போகிறது என்பதை கடந்த பல திங்களாகச் சொல்லி வருவதைக் காங்கிரஸ்காரர்கள்கூட கேலி பேசிவருகின்றனர். ஆனால் தி. மு. கழகம் இவ்வளவு நிதானம் காட்டிவந்ததற்குக் காரணம், அரசினர் தங்களின் தவறுகளைத் திருத்திக் கொள்ளக்கூடும் என்பதற்காகத்தான். ஆனால் அந்த ஜனநாயக புத்தி இன்றைய ஆளும் வர்க்கத்திற்கு அறவே இல்லையென்பதை அவர்களே எடுத்துக்காட்டி வருகின்றனர். ஆதலின் தி. மு கழகம் இந்தித் திணிப்பை எதிர்த்து அறப்போராட்டத்தில் ஈடுபடுவது, எவ்வகையாலும் தவறல்ல என்பதும், போராட்டத்தில் ஈடுபடும் சூழ்நிலையை உருவாக்கிய குற்றம் இந்திய அரசினரையும் பிரதமர் நேருவையுமே சாரும் என்பதும் அரசியல் விவேகம் படைத்த ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளக் கூடியதாகும்.

நம் அண்ணாவின் வாழ்த்தும் சிறப்பு செய்தியும்

—o—

பல்லாண்டுகளாக 'திராவிடன்' ஆற்றி வரும் சீரிய தொண்டினைப் பாராட்டி வரும் அன்பர்களின் அகம் மகிழத்தக்க விதத்தில், இன்றையப் பிரச்சினையான இந்தி எதிர்ப்பு குறித்து ஓர் தனி மலர் 'திராவிடன்' வெளியிடுகிறது அறிந்து என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தி எதிர்ப்பு சம்பந்தமான கருத்துக்களை அனைவரும் உணரவும், நமது அறப்போரின் நியாயத்தை அறியவும் தனி மலர் வாய்ப்பளிக்கிறது என்பதில் ஐயமில்லை! கழகத் தோழர்கள் அனைவரிடமும் இந்த இதழ் இருக்க வேண்டும் என விரும்புகிறேன்.

சென்னை
10-10-63

அண்ணாதுரை

அறப்போராட்டத்தில் ஈடுபடும் கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் எவ்வாறு உறுதியுடனும், அதேசமயத்தில் அறவழி நின்றும் கடமையாற்ற வேண்டும் என்பதை அண்ணா அவர்கள் மாநாடுகள், கூட்டங்கள், ஏடுகள் வாயிலாகத் திட்டவட்டமாக விளக்கியிருக்கிறார்கள். அறவழியில் நின்று நமது எதிர்ப்பு உணர்ச்சியை எடுத்துக்காட்டியிருக்கிறோம் என்பதை நாம் இதுவரையில் மேற்கொண்ட அறப்போராட்டங்கள் நன்கு விளக்கிக் காட்டுவனவாக யிருக்கின்றன.

அதுபோன்றே இந்தி எதிர்ப்பு அறப்போராட்டத்திலும் கழகத் தோழர்கள் கடமையாற்றுவார்கள் என்பதில் ஐயமில்லை. அந்தத் தூயக்கடமை தான் நாம் நமது அண்ணா அவர்களுக்குச் செலுத்தும் மதிப்பும், மரியாதையும், அன்புக்காணிக்கையுமாகும்.

நாம் தலைகனம் கொண்டோ அல்லது வீம்புக்காகவோ போராட்டம் நடத்துபவர்கள் அல்ல. இன்னும் சொல்லப்போனால் அரசியலார்தான் தங்களின் எண்ணிக்கை பலத்தையும் அதிகார போதையையும் பெரிதாக நம்பி நாயகப் பாதையிலிருந்து தவறிப்போய் கண்டவாறு பேசிவருகின்றனர். அறப்போராட்டத்தை அடக்கி ஒடுக்கிவிடுவோம் என்று வம்பு பேசுகின்றனர். அந்தப் பேச்சுக்களையெல்லாம் ஆளும்வர்க்கத்தினருக்கே விட்டுவிடுவோம்.

கழகத் தோழர்களாகிய நாம் நமது அண்ணாவின் அன்புக்கட்டளைக்கேற்ப தளராத உறுதியுடனும் 1938-ம் ஆண்டு இந்தியை எதிர்த்துச் சிறை சென்று உயிர்நீத்த நடராசன், தாளமுத்து ஆகியோரின் தியாக உள்ளத்திற்கு வணக்கம் செலுத்தி இந்தி எதிர்ப்பு அறப்போராட்டத்தில் ஈடுபட்டு கடமையாற்ற அருமைத் தோழர்களே வாரீர் வாரீர் என்று பணிவன்புடன் அழைக்கிறோம்.

என். வி. நடராசன்

வியட்நாம் பாஞ்சாலி

ஃ

ஃ சேரன்தம்பி ஃ

O

கிளியோ பாத்ராவின் சாகசம் -காதரைன் ராணியின் ராஜநீதி— கத்தோலிக்க மதவெறி-பௌத்த மும், மார்க்சீயமும் ஒன்றே என்ற பைத்தியக்காரத்தனமான சித் தாந்தம் இவற்ருேடு அரசாளும் பெண் ஒருத்தி தென் வியட் நாமிலே பெரிய புயலையே கிளப்பி விட்டிருக்கிருள்.

திருமதி நூ என்று சுருக்கமாக அழைக்கப்படும் இவள் கண் மூடித்திறப்பதற்குள் தென்வியட் நாம் சரித்திரத்திலே பெரிய புள்ளி யாகி விட்டாள்!

அப்படி ஒன்றும் இவள் அரச பரம்பரை வழி வந்தவளல்ல! ஆண்டவனே தனக்கு இப்போ தைய பாக்கியத்தை அளித் திருப்பதாக நூ சொன்னுலும் எவ் வளவோ தொல்லைகளில் புடம் போடப்பட்ட பின்னரே இவ ளுக்கு ஒரு அரசையே ஆட்டி வைத்திடும் வாய்ப்புகிடைத்திருக் கிறது. இவளது இயற் பெயர் டிரான்லே சுவான் 'அழகியான வசந்தம்' என்பது இதன் பொரு ளாகும்!

முப்பத்தெட்டு வயதான இந்தப் ....க்கு அம்மா என்று அழைக்க நான்கு குழந்தைகள் உள்ளன. இவளைப் போலவே இவளைப் பெற்றவளும் ஒரு அழகி-கட்டுதிட்டமில்லாமல் வாழ்ந்த பெரிய பள்ளியறை வள் ளல்! இவளுக்கு காதலனுக வந்து வாய்த்தான், என்கோதின் நூ என்பவன். இந்தோசீன நூல் நிலையத்தில் இவனுக்கு வேலை. அப்போது சுவானுக்கு பதினுறு வயது. எட்டடிப்பாய்ந்த தாயைப் பார்த்ததும், பெண்ணுக்கு பதி னுறு அடி பாயவேண்டும் என்ற பதைப்பு. தாய் மயக்கியவனை தானே மயக்கிவிட நினைத்தாள் 'அழகியான வசந்தம்!' பெற்ற வள் தான் வள்ளலாயிற்றே! பெண்ணுக்கு என்கோ தின் நூவைக் கொடுத்துவிட்டாள்.

1943-ல் இவர்கள் திருமணம் நடந்தது. சுவான் பௌத்த மதம் துறந்து கணவனின் மதமான கத்தோலிக்க மதத்தில்சேர்ந்தாள் அப்போது துவங்கிய புத்தமதத் தவர்களின்போதாதகாலம் இன்ன மும் தீர்ந்த பாடில்லை! என்கோ தின்நூவோடு உடன் பிறந்தோர் என்கோதின்தாக், என்கோதின் காவ், என்கோதின் தியாய், என் கோதின்லூயென் எனும் நால்வர்.

கம்யூனிஸ எதிர்ப்புணர்ச்சி யோடு காலனி ஆதிக்க வெறுப் புணர்ச்சியோடுஅரசியலிலே உல விய இந்த அண்ணன் தம்பி களில் தியாம் தலை சிறந்தவனு யிருந்தான். 'அழகியான வசந்தத் திற்கு' திருமணம் முடிந்த மூன் ருவது ஆண்டில் இந்தோ சீன வில் போர் மேகங்கள் கருத்தன. இரண்டாம் உலகப்போரின்போது பிரெஞ்சுக்காரர்களோடு ஒத்துப் போக மனமில்லாமல் தியாம் அர சியல் துறவறம் பூண்டான்.

தியாமின் குடும்பம் முழுதும் கம்யூனிஸ்ட் விடுதலைப் படையை எதிர்த்தது. பிரெஞ்சுக்காரர் களின் கொலுபொம்மை ராஜா வான பாவோதாயியை அவர்கள் ஆதரிக்கவில்லை. இதனுல் பல தொல்லைகள் நேர்ந்தன. தியாமின் அண்ணனும், அவன் மகனும் கம்யூனிஸ்ட் விடுதலைப் படை யினரின் கையில் சிக்கி உயிரை விட்டார்கள்! தியாமும், நூவும், சுவானும், அவள் தாயும் சிறையி லடைக்கப்பட்டார்கள்! நூ எப் படியோ தப்பி ஓடினுன்! 'தியாமை கம்யூனிஸ்டுகளே 'பெரிய மனது பண்ணி' சில மாதங்களுக்குப்பின் விடுதலை செய்தார்கள்!

இறுதியில் பிரெஞ்சு படைகளை சமாளிக்க முடியாது போனதால், கம்யூனிஸ்டுகள் சுவானையும், அவள் தாயையும் விட்டுவிட்டுப் போனுர்கள்!

தியாமின் குடும்பத்தினர் காலனி ஆதிக்கத்தை எதிர்த்தால் பிரெஞ்சுக்காரர்கள் அவர்களை சந்தேகத்தோடு தான் கண் காணித்து வந்தார்கள். தலாக் என்ற உள்நாட்டு நகரத்தி லிருந்து கொண்டே நூவும், சுவா னும் அமெரிக்காவுக்கு நாடுகடத் தப்பட்ட தியாமை வியட்நாமுக்கு வரவழைக்க ஆர்ப்பாட்டங்களை நடத்திஞர்கள். இந்த நாட்களில் தான் நூவின் 'பேர்ஸனலிஸ்ட்' சித்தாந்தம் பிறப்பெடுத்தது. பாம ரர்களை வசீகரிக்க சுவான் எளிய வாழ்க்கை நடத்திஞள்.

தீன்பில்பாவில் கம்யூனிஸ்டு படைகளால் பிரெஞ்சுகாரர் களுக்கு ஏற்பட்ட படுதோல்வி, தியாமின் பாதார விந்தங்களில் அவர்களை விழவைத்தது. தியாம் வியட்நாமிற்கு வர அனுமதிக்கப் பட்டான். வந்த சில நாட்களில் தியாமை பிரதம அமைச்சராகக் கொண்ட வியட்நாம் சுதந்திர அரசு வடிவம் பெற்றது.

பதவியேற்பு, கோலாகலம் எல் லாம் முடிந்து, சிம்மாதனத்தில் உட்கார்ந்தபோதுதான், சிம்மாத னம் எரிமலையின் மேலிருப்பது தியாமிற்குத் தெரிந்தது.

வியட்நாம் முழுதும் உள்நாட்டு குழப்பப் புயல் உக்கிரமாக வீசிக் கொண்டிருந்த வேளை, ஜெனரல், என் ஹியூன்வான்ஹின் எனும் விசித்திரமான பேர் படைத்தவ னின் தயவிலே அரசு நடத்த வேண்டிய துர்பாக்கிய நிலை. இந்த ஜெனரலோ பிரஞ்சுகாரர் களின் கை நூலிலே ஆட்டம் போட்டான்! பட்டாளம் எந்த நேரமும் ஆட்சியைக் கைப்பற்றும் என்று வேறு வெளிப்படையா கவே சொல்லி பதற அடித்துக் கொண்டிருந்தான் !

ஒரு விருந்தில் கலந்துகொண்ட இந்த ஜெனரல் ஆர்ப்பாட்டமாக கூச்சல் போட்டான், தியாமின குடும்பத்தினர் எல்லோரையும் கைது செய்வேன், சுவானைத் தவிர என்று. உன்னை என் வெள் ளாட்டியாக வைத்திருப்பேன் என்று அவன் சுவானைப் பார்த்து சொன்னபோது சுவான் எழுந் திருந்து வார்த்தைகளை அள்ளி வீசிஞள்.

"இந்த அரசாங்கத்தை கவிழ்த்துவிட உன்னுல் முடி யாது. அதற்குரிய துணிச்சல் உனக்கில்லை. அப்படியே நடந் தாலும் நிச்சயமாக நான் உனக்கு கிடைக்கமாட்டேன்! உன் கழுத் தைக் கிழித்தெறிய என்னுல் முடியும்!"

செய்கோன் நகரம் அன்று தான் முதன்முதலாக சுவானை உன்னிப்பாக கவனித்தது.

அரசபீடம் இப்படி ஆடிக் கொண்டிருந்தபோது, சுவான் சிறிதுகாலம் ஹாங்ஹாங்கிலுள்ள கன்னிகா மடத்தில் வாழ்ந்தாள். இந்த 'அஞ்சாதவாசம்' அவளே மேற்கொண்டதென்றும், உறவி னர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட தென்றும் மாருன கருத்துக்கள் உண்டு. இறுதியில் தியாம் ஜென ரலை அடக்கிய பின்னரே சவான் வியட்நாம் வந்நாள். அதிகார போதை ஏற, ஏற தியாம் மக்களி டையே நின்று விலகி, விலகிச் சென்ருன். அரசியல் வெளிச்சத் திலே எவனுவது வளர்ந்துவந் தால், அச்சத்தோடும் கொதிப் போடும் அதனைப்பார்ப்பது தியா மிற்கு வாடிக்கையாகிவிட்டது!

அதிகார கயிற்றில் அச்சத் தோடு ஆடும் ஒற்றைபம்பரமான தியாம், பலமான பாதுகாப்பில்லா மல் செய்கோன் அரண்மனையை விட்டு வெளியே வருவதில்லை. 'சீன கத்தோலிக்க பிற்போக்கு பிரபுவான' தியாம், தெய்வத்தின் கட்டளைப்படியே தான் ஆட்சி நடத்துவதாக நினைத்துக் கொள் கிருன்.

தியாமின் சகோதரர்களில் ஒரு வனுன என்சோதின் தாக் ஒரு பாதிரி; அதே வேளையில் பெரிய நிலப்பிரபுவும் கூட. தாக்கின் சீடகோடிகளில் சிலர் தியாமின் மந்திரி சபையில் இடம் பெற்றி ருக்கிருர்கள். தியாம் இவனை செய்கோனின் ஆர்ச் பிஷப்பாக மாற்ற முயற்சித்தான் எனினும் தியாம் குடும்பத்தினரின் அதிகார வெறியையும், பிற்போக்கு பிரபுத் துவத்தையும் தெளிவாக உணர்ந்த வத்திக்காண் மதபீடம் இதற்கு ஒத்துக் கொள்ளவில்லை.

அடுத்த சகோதரனுன என் கோதின்கால், படிப்போ,பண்போ இல்லாதவன்; பெண்களை வேட் டையாடுவதில் பேர் பெற்றவன்! தியாமின் இளைய சகோதரனும், சுவானின் கணவனுமான என் கோதின் நூதியாமின் அரசியல் போதகாசிரியன், 'பேர்ஸனலி ஸம்' சித்தாந்தத்தின் ஞாஞசிரி யன், ரகசியப் போலீஸ் தலைவன், 70,000 உறுப்பினர்கள் இடம் பெற்றிருக்கும் புரட்சி தொழிலா ளர் கட்சியின் ஸ்தாபகன் என்ற நிலைகளில் அரசியல் மேய்ப் போனுக விளங்குகிருன் !

எல்லோர்க்கும் இளையவனுன என்கோதின்லூயென் அயல் நாட் டுத் தூதர் பதவியிலிருக்கிருன். சுவானுக்கு இவனிடம் மட்டும் தான் அதிகமாக ஈடுபாடு இல்லை, ஏனென்ருல், இவன் அந்த அழகியை அவ்வளவாக பொருட் படுத்தவில்லை; கணவனின் சகோ தார்களோடு சுவான் கொண்ட தொடர்பு வியட்நாமின் சுவர் இலக்கியங்களாகயிருக்கின்றன.

திருமணம் செய்து கொள்ளாத தியாம் எப்பேற்பட்ட நிலையிலும் சுவானுக்கு அடங்கியே போகி ருன். ஜனுதிபதியான தியாமை வெளிப்படையாக கண்டிக்கக்

(26-ம் பக்கம் பார்க்க)

1938ம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போர்

-:- சில குறிப்புகள் -:-

1938-39ம் ஆண்டுகளில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போரில் சென்னை பெத்துநாயக்கன் பேட்டை சிறப்பிடம் பெற்றிருந்தது. இன்றைக்கு 25, 26 என இரு இரு வட்டங்களாகப் பிரிந்திருக்கும் பெத்துநாயக்கன் பேட்டையில்தான் இந்தி எதிர்ப்புப் பாசறை வீரர்கள் கூடி போர் முழக்கம் செய்த காசி விசுவநாதர் கோயில் திடலும், சிவஞானம் பூங்காவும் உள்ளன. 1948-ம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போர் நிகழ்ச்சியிலும் இந்த இரு இடங்களும், மறியல் செய்யும் இடங்களாக தொண்டை மண்டலம் உயர்நிலைப் பள்ளியும் இந்து தியாலஜிகல் உயர்நிலைப் பள்ளியும் இருந்தன.

1938ம் ஆண்டு முதல் அறிஞர் அண்ணா அவர்கள் இந்தியை எதிர்த்து தமிழினத்தைப் பாதுகாத்து வரும் மாவீரராகத் திகழ்ந்து வருகிறார்.

1938 இந்தி எதிர்ப்பில் அறிஞர் அண்ணா அவர்களின் பிரச்சாரப் பணி மிகவும் குறிப்பிடத்தக்கது!

கடந்த 25 ஆண்டு காலங்களாக தமிழினம் தலைநிமிர்ந்து நடைபோட்டு வருகிறது என்றால் அதற்குக் காரணம் அண்ணா அவர்கள் 1938ம் ஆண்டிலிருந்து ஆற்றிவரும் பணியேயாகும். 1938ம் ஆண்டு இந்திப் போர் மகத்தான வெற்றி வாகை சூடியது.

அறிஞர் அண்ணா அவர்கள் பல குழுக்களிலும் பங்குகொண்டு பணியாற்றினார்.

சென்னையில் நிறுவப்பட்ட இந்தி எதிர்ப்புப் பிரச்சாரக் குழு:—

சாமி அருணகிரிநாதர்—தலைவர்.

என். வி. நடராசன்—அமைச்சர்

டி. சுப்ரமண்யம்—பொருளாளர்

உறுப்பினர்கள் :— அறிஞர் அண்ணா, ஆல்பர்ட் சேசுதாஸ், ஆலிஜனாப் தாவுத்ஷா. சிந்தாதிரிப்பேட்டை ராகவலு, அப்துல் அக்கீம், சூளை டி. பி. இராசகோபால், எ. கே. சாமுவேல், சி. ஆர். திருவேங்கடம், பி. சாமிநாதன், சி. ஆர். அமிர்தவாசகம், சூளை இராமலிங்கம், சி. பஞ்சாட்சரம், சி. கணேசன், பி. எம். வேணு கோபால் பாகவதர், பார்வதியம்மாள் முதலியோர்.

ஃ

நிதி வசூல் குழு

சி. டி. நாயகம், சி. பாசுதேவ், டி. சண்முகம் எம். தாமோதர மறை திருநாவுக்கரசு, கே. சிவஞானம், டி. வி. முருகேசம் (தலைவரும் அமைச்சரும் சேர்த்து நிதி வசூல் குழுவின் எண்ணிக்கை 9)

ஃ

கணக்குப் பரிசீலனைக் குழு

வி. பி, எஸ். மணியர், எஸ். பி. நாகரத்தினம், எஸ். பிரகாசம் என். ஜீவரத்தினம், மலர்முகத்தம்மையார் (சென்னை மாணவர் மன்றத் தலைவர் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்களின் தமக்கையார்) தலைவரும் அமைச்சரும் சேர்த்து குழுவின் எண்ணிக்கை 7)

1938ல் தீவிரப் பிரச்சாரப் பணி புரிந்த அண்ணா அவர்கள், 1948 இந்திப் போரில் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

இப்போது தென்னகக் குடும்பங்களின் தலைவராக—ஒளி விளக்காகத் திகழும் அறிஞர் அண்ணா அவர்கள்—கடந்த 25 ஆண்டுகளாக இந்தியைத் தமிழகத்தில் நுழைய விடாமல் தடுத்து வரும் பணியாற்றிவருவதற்காக—தென்னவர் அனைவரது நன்றிக்கும் உரிய மாபெரும் தலைவராகத் திகழ்கிறார்.

இந்தி எதிர்ப்பு முதற் போரில் வெற்றி முழக்கம்!

'கட்டாய இந்தியைக்குறித்து இம்மாகாணத்தில் இருந்த எதிர்ப்பையும் அதிருப்தியையும் சர்க்கார் உணர்ந்ததைக்கண்டு, இக்கமிட்டி அவர்களைப் பாராட்டுவதோடு, கட்டாய இந்தியை எதிர்த்து சகல தியாகங்களையும் செய்த ஆண்கள், பெண்கள் யாவரையும் இக்கமிட்டி பாராட்டுகிறது'

—மேற்கண்ட இந்தத் தீர்மானம், 1940ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானமாகும்.

1938ம் ஆண்டு திணிக்கப்பட்ட கட்டாய இந்தி ரத்து செய்யப்பட்டதின் வாயிலாக இந்தி எதிர்ப்புப் போர் வெற்றி பெற்றதையொட்டி தென் இந்திய நல உரிமைச் சங்க மத்திய நிர்வாகக் கமிட்டிக் (நீதிக்கட்சி) கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்திற்கு தந்தை பெரியார் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களின் விவரம்:—

பெரியார்
அறிஞர் அண்ணா
ராவ்பகதூர் என் ஆர் சாமியப்பா
குமார ராஜா மு.அ. முத்தைய (செட்டியார்)
டாக்டர் தருமாம்பாள்
அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி
அ. பொன்னம்பலனார்
என். வி. நடராசன்
டி. சண்முகம்
அ. க. தங்கவேலர்
பி. பாலசுப்ரமணியம்
டி. ஏ. வி. நாதன்
சி. பாசுதேவ்
ஆல்பர்ட் ஜேசுதாஸ்
எஸ். சுயம்பிரகாசம்
வி. பி. எஸ். மணியர்
ஜி. சாமி (நாயுடு)
டி. முனிகன்னையா
எம். தாமோதரம் (நாயுடு)
எஸ். ராசகோபால் (செட்டியார்)
டி. எஸ். நடராச (பிள்ளை)
என். சங்கரன்
என். சீவரத்தினம்
சி. ஜி. நெட்டோ
வி. பார்த்தசாரதி (நாயுடு)
கே. சி. சுப்பிரமணிய (செட்டியார்)
சி. டி. நாயகம்
வி. கனகசபாபதி (முதலியார்)
எம். ஆர். திருமலைசாமி
கே. முத்துலிங்க (ரெட்டியார்)
டி. வி. முருகேசம்
எ. வி. தியாராஜ (செட்டியார்)
பி. நாகேஸ்வர (அய்யர்)
கே. எம். துரைசாமி (ரெட்டியார்)

நான் கண்ட தமிழ் மேதைகள் !

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார்

சென்னை மணவழகர் மன்றச் சார்பில், தோழர் கூ.இர. இராசாமணி எல். ஈ. ஈ, தலைமையில் நடைபெற்ற மறைமலையடிகள், திரு. வி. க. ஆகியோரின் நினைவு நாள் விழாவில் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் எம். ஏ. எல்.டி. அவர்கள் பேசியதாவது :

ஆண்டுதோறும் இம்மன்றத்தில் பேசும் வாய்ப்பைப் பெறும் யான் முன்பு அறிஞர் அண்ணா அவர்களைப்பற்றிப் பேசினேன். இன்று மறைமலையடிகள், தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனார் ஆகிய பெருமக்களைப் பற்றிப் பேசும் வாய்ப்புப் பெற்றமை குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

சென்ற ஊழியைப்பற்றி — வரலாற்றுக் காலத்தைப்பற்றித் தெளிவாக நாம் அறிந்துகொள்ள வேண்டுமாயின், அவ்வூழியில் வாழ்ந்த பெருமக்களை நினைவு கூர்தல் வேண்டும்.

அவ்வண்ணம் நடைபெற்ற ஊழியின் சிறப்பை நாம் முழுதும் உணரவேண்டுமாயின், தவத்திரு மறைமலையடிகள், தமிழ்த் தென்றல் திரு. வி. க. ஆகியோரைப்பற்றி முதலில் நாம் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும்.

இற்றை நாளில் மலர்ந்திருக்கும் — மலர்ந்து வரும் தமிழ் உணர்ச்சிக்கு--தமிழ் ஆர்வத்துக்கு வித்தூன்றிய தனித்தமிழ் வீரர்கள் தவத்திரு மறைமலையடிகளும், தமிழ்த்தென்றல் திரு.வி.க அவர்களும் ஆவார்கள்.

அவர்கள், தமிழின் வளர்ச்சியிலும் தனித் தன்மையை நிலைநாட்டுவதிலும், காப்பதிலும், உடலும்—உயிரும்போல் இரண்டறக் கலந்து பணியாற்றியவர்கள்.

இவ்விரு பெரும் தமிழ் மேதைகளும் தோன்றியபோது தமிழ்ச் சமுதாயம் என்றுமில்லாத அளவுக்குத் தாய்மொழியை மறந்திருந்தது. ஏனெனில், அப்போதிருந்த மக்களின் ஆர்வம், 1907ல் தமிழ் நாட்டில் துவக்கப்பட்ட தமிழ்நாட்டுத் தேசியக் காங்கிரசு துவக்கப்பட்டு 'அகில இந்தியா' என்ற கொள்கையால் ஈர்க்கப்பட்டது. மற்றும் ஒரு சிலர் 'The osophicai society' என்ற அகில உலக அமைப்பை அன்னிபெசண்டு அம்மையாரின் தலைமையில் நிறுவி, மக்களின் கருத்தை 'அகில உலகம்' என்ற கொள்கையால் ஈர்த்தனர்.

இவ்விதம், 'அகில இந்தியா', 'அகில உலகம்' என்ற கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட அக்காலத் தமிழர்கள், தமிழ் மொழியையும், தமிழ் நாட்டையும் மறந்தனர். இவ்வித ஒரு மயக்க நிலை, 1905 1920 ஆகிய ஆண்டுகளிடை தமிழ் மக்களை மிகவும் ஆட்கொண்டது. இக்காலத்தில்தான் தவத்திரு மறைமலையடிகளும், திரு. வி. க. அவர்களும் மக்களிடையே தாய்மொழி உணர்ச்சியை—பற்றினை ஏற்படுத்தப் பாடுபட்டனர்.

இவ்விருவரும் ஒரு மலைபோன்று அக்காலத்தில் விளங்கினர்; மலையின் அடிபாகம் போன்று திரு. வி. க.வும், மலையுச்சியைப் போன்று அடிகளாரும் விளங்கினர் எனக் கூறின் அஃது மிகையன்று.

இவர்கள் ஒழுகிய 'தனித் தமிழ்க் கொள்கையில் ஆசிரியராக அடிகளாரும், அவரது மாணவராக திரு. வி. க. அவர்களும் விளங்கினர்.

மறைமலையடிகள் தமிழாராய்ச்சி நூல்கள், இலக்கிய நூல்கள், 'அம்பிகாபதி' என்ற நாடகம் போன்ற நூல்களை இன்றமிழில் இயற்றித் தமிழ்த் தொண்டாற்றியவர்; பாமர மக்கள் படித்து இன்புறும் அளவுக்குத் தமிழிலக்கியங்கள் தோன்றுதல் வேண்டும்' என எண்ணியவர் அடிகளார் ஆவார்கள்!

அவ்வண்ணமே திரு. வி. க. அவர்களும், எல்லாத் தலையாய பொருள்களைப் பற்றியும், மதங்களைப் பற்றியும், 'துறைகளைப்பற்றியும் தனித் தமிழில் எழுதியவர்—பேசி வெற்றி கண்டவர் — 'தமிழால் முடியும்' என்ற நிலையை ஏற்படுத்தியவர்.

தமிழ்ப் புலவர்கள் பேசுவது தமிழ் மக்களுக்குப் புரியும்—பாமர மக்களும் உணர்ந்துகொள்வர்; ஏனெனில், மற்றைய மொழிகளான தெலுங்கு, கர்நாடகம், ஆங்கிலம், இந்தி போன்ற மொழிகளில் பேச்சு நடைக்கும்—இலக்கிய நடைக்கும் ஆச்சரியப்படத் தக்க வேறுபாடு உள்ளது.

தூய தெலுங்கிலோ அல்லது ஆங்கிலத்திலோ அம்மொழியைச் சேர்ந்த புலவர்கள் பேசினால், அந்நாட்டுப் பாமர, பொதுமக்கள் அதைப் புரிந்துகொள்ள முடியாது; ஏனெனில், அந்நாடுகளில் இடத்திற்கு இடம் பேச்சு நடை மிகுந்த அளவு மாறுபடுகிறது.

ஆனால் அவ்வளவு மாறுபாடும் —வேறுபாடும் தமிழ் மொழியில் இல்லை: அதனால்தான் சொல்கிறேன்—'புலவர்களின் தமிழ் நடையை எல்லோராலும் புரிந்து கொள்ள முடியும்' என்று!

இதை மறுப்பவர்கள் எவராயினும் அவர்கள், குறிப்பிட்ட ஒருவரை வேண்டாம் என்று சொல்வதற்குப்பதில், அவருடையநடை புரியாதது என்று சொல்லி அவரைத் தட்டிக்கழிக்கப் பேசுகிறார்கள்—என என்னால் நிரூபிக்க முடியும்.

எப்படியெனில், திரு. வி. க. அவர்களின் தனித்தமிழ்நடையை அக்காலத் தொழிலாளர் உலகமும், பொதுமக்களும் எவ்வாறு புரிந்துகொண்டு—அவர் சொல்லிய கருத்தைத் தெரிந்துகொண்டு செயலாற்றினரோ, அவ்வண்ணமே முன்பைவிட இப்பொழுது தமிழறிவு ஓரளவு அதிகம் பெற்றுள்ள தமிழ்மக்கள், புலவர் நடையைப் புரிந்துகொள்ள இயலும் என்று யான் நிறுவுகின்றேன். மக்கள் அந்த அளவுக்குத் தமிழ்ப் புலமை அடைவதற்கு—மக்கள் தம் தாய்மொழிப் புலமையை அறிந்து அதற்கொப்ப இலக்கிய நடையினைக் கொண்டுள்ள எழுத்தோவியங்கள் தேவை.

இன்றைய உலகில், இரஷ்ய நாட்டில் வாழும் சாதாரண வண்டி ஓட்டும் வேலைசெய்யும் தொழிலாளி, அம்மொழியில் இயற்றப்பட்ட டால்ஸ்டாய் அவர்களின் இலக்கிய நடையைப் புரிந்து கொள்கிறான்; படித்து இன்புறுகிறான்.

இத்தகு நிலை தமிழகத்தில் ஏற்பட வேண்டுமென்று கனவு கண்டு அப்போதே தொழிலாளர்களிடையே செந்தமிழில் — தூய தமிழில் பேசிவைத்தார் திரு.வி.க. அவர்கள்; நவசக்தி, தேசபக்தன் போன்ற தமிழ் இதழ்களைத் தனித் தமிழில் நடத்தி'வாகை சூடியவர்; அவர் நடத்திவந்த அத்தகு தொண்டுகளை நாம் பரக்க ஆற்றி வந்தால் விரைவில் இலக்கிய நடையை எல்லாத் தமிழ் மக்களும் புரிந்துகொள்ள முடியும்!

தமிழ்நாட்டில் காங்கிரசு ஏற்படுவதற்குக் காரணமாயிருந்தர்கள் பெரியார் ஈ. வெ. ரா., இராசகோபாலாச்சாரியார், திரு. வி. க. ஆகிய மூவர் ஆவர்.

இவர்களில் திரு. வி. க. அவர்கள், காந்தீயத்தையும் நாட்டு விடுதலை உணர்வையும் மக்களுக்கு உணர்த்தத் தனித்தமிழில் நூல்களும், இதழ்களும் வெளியிட்டுக் காங்கிரசைப் பரப்பிய வீரர்; ஆயினும், அவர் காங்கிரசில் இருந்துகொண்டே அதைத் தூய்மைப்படுத்த முயன்றார்; ஆனால் அவர் அதில் வெற்றிபெற இயலவில்லை.

அதேபோன்று அவர், மார்க்சியத்தைத் தழுவியபோதும் அவர் அத்துடன் கடவுட் கொள்கையையும் இணைத்துக்கொண்டார்.

இவ்வகையில், திரு. வி. க. அவர்கள், தாம் ஈடுபாடுகொண்ட துறைகளில் பணியாற்றியதோடு நில்லாமல், தமிழ்ப்பற்றினைத் தனியாகக் கருதி வளர்த்து, எந்த நேரத்திலும் அதை விட்டுக் கொடுக்காமல் வாழ்ந்துவந்தார்.

இத்தகு பெரியார்களின் நினைவு நாளில் நாம் தமிழ் இலக்கியத் தொன்மையைப்பற்றியும், தமிழர் நாகரிகத்தைப்பற்றியும், தமிழிலக்கியச் சிறப்பைப்பற்றியும் தெரிந்து கொள்ளவேண்டும்.

மறைமலையடிகள் இருந்தபோது வடமொழி இலக்கியம் காலத்தால் பழையதா அல்லது தமிழிலக்கியம் தொன்மையானதா என்ற கேள்விக்கு உறுதியாகப் பதில் சொல்லக்கூடியவர்கள் அடிகளாரைத் தவிர ஒருவருமில்லை; ஆயின், தற்போது அந்நிலை இல்லை; 'தமிழிலக்கியங்கள், வடமொழி இலக்கியங்களை விடத் தொன்மையானது' என்று உறுதிபடுத்தப்பட்டுவிட்டது.

வடமொழியில் தோன்றிய மகாபாரதம், இராமாயணம் போன்றவைகள் இலக்கியங்கள் அல்ல; அவைகள் பல்வேறு காலங்களில் நடந்த நிகழ்ச்சிக் குறிப்புக்கள் ஆகும். இதை நாம் சொல்லவில்லை—அவர்களே சொல்கிறார்கள்.

சமஸ்கிருதத்தை மூன்று பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள்; அஃதாவது; தீர்வானம்—வேதங்கள் —சாஸ்திரம்--ஸ்மிருதிகள், சாகித்தியம், இலக்கியம் என்பனவாகும்; ஆகவே பாரதமும் இராமாயணமும் வேதங்களாகவும் மதத்துறை நூல்களாகவும் மாறிவிடுகின்றன.

அப்படிப் பார்த்தால், வடமொழியில் காளிதாசர் காலத்தில்

(அடுத்த பக்கம் பார்க்க)

மக்கள் மனதைக் கோயிலாகக் கொண்ட மக்கள் திலகம்
புரட்சி நடிகர்

"பத்தாண்டுகளுக்கு முன் எம்ஜியார்"

அண்ணன் எம்ஜியார் வண்ணப்பட முகப்பும்
பத்தாண்டுகளுக்கு முன் நடித்தபடங்களின் படங்கள் சிலவும்

விலை. காசு 0—75 (தபால் செலவு தனி)

விற்பனையாளர்களுக்கு தக்க கழிவு உண்டு.

விற்பனை உரிமை:
அன்னை பதிப்பகம்
கடம்பர்கோயில்
குளித்தலை (திருச்சி)

காமராசர் திட்டத்தால் காங்கிரஸ் கவலை !

தலைக்குத்தகுந்ததொப்பியைவாங்குவதா? தொப்பிக்குஏற்றபடி தலையைவெட்டுவதா?

○

காந்தியாரின் அன்புவழியால், ஆசாத்தின் அறவழியால், கொடிகாத்த திருப்பூர் குமரன் குருதியால், செக்கிழுத்த சிதம்பரத்தின் உழைப்பால், பாரதியின் கவிதையால், திரு. வி. க., பெரியார், ஆச்சாரியார் இவர்களது அறிவாற்றலால் வளர்ந்த காங்கிரஸ்—இடைக்காலத்தில் மோதிலால் மைந்தரின் புன்னகையால் பழைய நிலைதனை இழந்து தள்ளாடி வாழ்ந்து வந்தது!

காங்கிரஸ் தன்னை நம்பிய மக்களை வாழவைக்காமல் தன்னைச் சேர்ந்த தலைவர்களையும்—தொண்டரடிப்பொடியாழ்வார்களையும் மட்டுமே வாழவைத்த காரணத்தால் நாட்டு மக்களின் மதிப்பினை இழந்து வருகிறது.

இந்நிலையில்தான் விருதை வீரரும்-அலகாபாத் அருந்தவப்புதல்வரும் ஹைதராபாத்தில் சந்தித்து சிந்தித்தனர்! சிந்தனையின் விளைவு மூத்த முதலமைச்சர்கள் ராஜினாமா! வழிகாட்டி காமராஜர்! இழந்த காங்கிரசின் புகழ் மீள, வழிகாட்டி வாழவைத்த பெருந்தலைவன் எனப்பெருமை பேசினர் காங்சிரஸ் தலைவர்கள்! பாராட்டியது காங்கிரஸ் பத்திரிகைகள்!

வறுமையின் வாட்டம், விலைவாசி ஏற்றம், தங்கக் கட்டுப்பாடு, இந்தித் திணிப்புப் போன்ற பிரச்சினைகளை சீனத்துப்படை காட்டி, மறைத்தும், திருவண்ணாமலையில் திருவோடு ஏந்தியதையறிந்த அமைச்சர்கள் தங்கள் பதவி விலகல் திரையால் மறைக்கப்பார்க்கின்றனர்—என எண்ணினர் மக்கள் !

அறிஞர் அண்ணா அவர்கள் இத்திட்டத்தால் புதிய குழப்பம் ஏற்படும் என்றார் !

காட்கில் ‘பேனாவைப் புதுப்பிப்பதால் எழுத்துப்பிழை அகலுமா’ எனக்கேட்டார் !

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துரித வளர்ச்சியைக் கண்டு அஞ்சியே காமராஜ் திட்டம் உருவாக்கப்பட்டது என்று கல்கத்தாவில் கூறிய எஸ். கே. படீல், பாட்னாவில் நிர்வாகத்தை சீர்குலைத்துவிட்டது; காங்கிரஸ் ஸ்தாபனத்தைப் பலப்படுத்துவது காமராஜ் திட்டத்தின் நோக்கமல்ல எனக் கூறியிருக்கிறார்.

பதவியிலிருந்து விலக விரும்பாத அமைச்சர்கள்—நேருவிற்குப் பிடிக்காதவர்களை விலக்குவதற்கு ஏற்படுத்திய தந்திரம் என்றார்கள் !

நாட்டிலுள்ள பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், பொது மக்களும் எல்லையிலே தொல்லையுள்ள இந்த நேரத்தில் இத்தகைய திட்டத்திற்கு என்ன அவசர-அவசியம் வந்துள்ளது! நாட்டு மக்களின் அன்பளிப்பாக அளிக்கப்படுகின்ற பொருள்களும், அவர்களால் அக்கரையோடு கொடுக்கப்படுகின்ற கம்பளி ஆடைகளும் கல்கத்தா கள்ள மார்க்கட்டில் விற்பனை செய்யப்படுவதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அதுபற்றிய அக்கரை அமைச்சர்களுக்கு இல்லை!

தங்கள் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதிலேயே கவனம் செலுத்திவருகின்றனர் என்பதை விலகிய அமைச்சர்களுக்காக நடைபெற்ற ஐந்து மாநிலங்களின் தேர்தல் நமக்கு அறிவிக்கின்றது! உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், ஒரிசா, பீஹார், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் போட்டியின்றி தேர்தல் நடத்த முடியவில்லை என்பதை அறிந்த எல்லா மாநிலங்களிலும் இனிப் பதவிப் போட்டி அதிகரிக்கப் போகிறது என்பதற்கு அறிகுறி இது என்றும் பத்திரிகைகள் எழுதுகின்றன !

அறிஞர் அண்ணா அன்றே புதிய குழப்பம் ஏற்படும் என்ற பின்னும், காட்கில், எஸ். கே. படீல் போன்றவர்களும் காங்கிரஸ் தலைமையும் இத்திட்டத்தால் காங்கிரஸ் கவலைப்பட்டு கண்ணீர் வடிக்கிறது !

தமிழகத்தில் பக்தவத்சலத்தை எதிர்த்த ஆர். வி. சாமிநாதன், தோற்றபின் ஜனநாயகத்தை மக்களுக்குத் தெரிவிக்கவே போட்டியிட்டேன் என்கிறார். ஒரிஸாவில் விரோன் மித்ராவை எதிர்த்த பவித்ரமோகன்பிரதான் ‘காந்திஜியின் உன்னதக் கொள்கைகளை நிலைநாட்டவே தலைமைப் பதவிக்கு போட்டியிட்ட’தாகக் கூறுகிறார். உத்தரப் பிரதேசத்தில் சுசேதா கிருபளானியை தேர்ந்தெடுப்பதற்குள், ஒரு குறிப்பிட்ட வோட்டுக்கு ரூ. 5000 வரை விலை விற்பட்டு அதனால் அவர்கள் அனுபவித்த தொல்லைகளையும், காங்கிரஸ் அரசு நடக்கும் அண்ணாவின் கூற்றுப்படி புதிய குழப்பத்தையறிந்து கவலை தெரிவித்தபின்—மோதிலால் மைந்தர் லட்சுமணபுரியில், தமிழ் நாட்டுக்காகத் தயாரித்த காமராஜ் திட்டத்தை அமுலாக்குவதில் பல சிரமங்கள் ஏற்படும் என எனக்குத் தெரியும் என கவலைப்படுகிறார் !

தலைக்குத் தகுந்த குல்லாயை வாங்குவதற்கு பதிலாக, குல்லாய்க்குத் தகுந்தாற்போல தலையை வெட்டிக்கொள்ளும் விபரீத நிலைக்குத்தான் காமராஜ் திட்டம் காங்கிரசை அழைத்துச் செல்லுகிறது. அந்தோ பரிதாபம்!

-தென்னவன்

5-ம் பக்கத் தொடர்ச்சி

தான் முதல் இலக்கியம். ஏற்பட்டாத கூறமுடியும்.

அவ்வகையில் கி. பி. நான்காம் நூற்றாண்டில் வடமொழியில் முதன்முதலாக இலக்கியம் தோன்றியது.

ஆனால் நமது தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்கள், கி. பி. 2-ம் நூற்றாண்டுக்கும் முற்பட்டவையாகும்.

அதேபோன்று, தமிழர்தம் நாகரீகந்தான் உலக நாகரீகங்களுள் சிறந்தது என்பது ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டது.

இன்னும் சொல்லப்போனால் இந்தியத் தேசத்தின் கதாநாயகனாக விளங்கும் சிவாஜிக்குக்கூட அத்தகு தேசிய உணர்ச்சி ஏற்பட கருநாடக சாம்ராஜ்யங்கள் தாம் காரணம் ஆகும். ‘மகாராட்டிர தேசியம்’ பற்றி எழுதப் புகுந்த ஒரு பேராசிரியர் முதல் மூன்று பகுதிகளையும் கருநாடக சாம்ராஜ்யங்களை எழுதுவதில் செலவழித்தார். ஏனெனில் சிவாஜிக்கு தேசிய உணர்வு ஏற்பட கருநாடக சாம்ராஜ்யங்கள்தான் காரணம். என்று உறுதியாக அவர் நம்பினார்.

அது மட்டுமல்ல; இந்து மதம் நீடித்து நிலைக்கக் காரணம், கருநாடக சாம்ராஜ்யங்கள்தான்

கருநாடக சாம்ராஜ்யங்கள் ஏற்படவும், அத்தகைய தேசிய உணர்வு வளரவும் காரணம் சோழர்கள் சாம்ராஜ்யமாகும்.

அதேபோன்று, சோழர் தம் தேசியம் பாண்டியர்களுடைய தேசியத்தையும், பாண்டியனுடைய தேசியம் சேரனுடைய தேசியத்தையும் அடிப்படையாகக்கொண்டது.

ஆகவே, தேசிய உணர்வு நீடித்து நிலைக்கத் தமிழன் அன்று அமைத்த அரசியல் அமைப்புக் கட்டுக்கோப்புத்தான் காரணமாகும்.

அத்தகைய தமிழனை, ‘இந்திய தேசியத்தை’க் காட்டித் தற்போது அழிக்கப்பார்க்கிறார்கள்!

வளர்த்துவிட்டவனை — வாழக் கற்றுக்கொடுத்தவனை— பாராட்டுவதற்குப் பதில் வழிவாங்க நினைப்பது எவ்விதத் தேசிய உணர்வுக்கும் ஆக்கத்தை தேடித்தராது!

இன்னொரு அதிசயத்தையும் உங்களுக்குச் சொல்லுகிறேன்; இன்றுள்ள இந்தியத் துணைக் கண்டம், தற்போது இந்தியப் பேரரசு என்றழைக்கப்படும் நிலப்பரப்பு முழுவதும் பிரிந்து சென்ற பாக்கிஸ்தான் பகுதி நீங்கலாக ஒருகாலத்தில் நமது தமிழ் மன்னன் இராசேந்திரனால் புகழ் மணக்க ஆளப்பட்டு வந்தது. ஆகவே, தற்போது நிலைநிறுத்த முடியாமல் போய்விட்ட இந்திய தேசியத்தை தன்னுடைய ஆளுகையால் அப்போதே உலகுக்கு உணர்த்தியவன் இராசேந்திரன் !

இவ்வண்ணம் புகழ் மணக்கும் வரலாறு பெற்ற தமிழர்கள்; அடிகளாரும், தமிழ்த் தென்றலாரும் காட்டிய நெறிதனில் சென்று தமிழ் மொழி காத்து வாழ ஆவன செய்தல் நமது தலையாய கடனாகும் ’’

திராவிட விடுதலை மறவர்களுக்கு
கவசமாய்
கெட்ட வீணர் கும்பலுக்கோர்
பேரிடியாய்

அக்டோபர் 11ல்! வெளிவருகிறது!!
அரசியல் முற்போக்கு வார ஏடு

“பிறப்புரிமை”

ஆசிரியர்: கோமகன் (ஆர். ஜார்ஜ்)
விலை 16 காசுகள்

எல்லா ஊர்களுக்கும் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

விவரங்கட்கு:

நிர்வாகி “பிறப்புரிமை”
151, இராமகிருஷ்ண மடம் ரோடு
சென்னை4.

புதிய தலைமுறையின் புறநானூறு!

இந்திப் பேய் மீண்டும் இங்கு நுழைந்து ஆதிக்கத்திற்கு அலையத் தொடங்கிவிட்டது.

இருபத்தி மூன்று ஆண்டுகளுக்கு முன்னுல் இல்லாப் பசப்புகளைப் பேசி இளஞ்சிருர்கள் கழுத்தை நெறிக்க வந்த இந்த லம்பாடி இந்தி, தமிழ்க் குலத்தின் மூன்ருண்டு கால வாழ்வில் அமைதியழித்துப் பொல்லாங்கு புரிந்தது. வளர்ந்து வந்த தலைமுறையின் வாழ்வில் நஞ்சைக் கலந்து, வருங்காலச் சமுதாயத்தையே அடிமை மனேபாவம் கொண்டதாக மாற்றிவிட அது அப்போது முனைந்துப் பட்டபாட்டினை, ஒரே குரலாய், ஒரே மனதாய், ஒரே உருவாய் இணைந்து நின்று இந்தத் தமிழகம் எதிர்த்தது. எங்கோ உருவாகி என்று வெடிக்குமோ என்றிருந்த இரண்டாம் உலகப் போரை, 'எதற்காகவோ இந்தப் போரும் பூசலும் ?' என்று சொல்லிவந்த தமிழகத்தில், திடீரெனப் போராட்டத்தையும் பிணவாடையையும் கொண்டுசேர்த்தது இந்திமொழிச் சனியன்! பரம்பரை வீரமும் பண்பாட்டின் ஆழமும் சேர்ந்துத் தவழும் இந்தத் தமிழகத்தில், 'பொதியமலை பிறந்த மொழி' தவிர—போதிய அறிவும் விஞ்ஞான வித்தகமும் விளங்கும் மொழி தவிர—எதுவுமே கால் கொள்ள முடியாது; எதையுமே தமிழர்கள் கட்டாயத்திற்கொப்பார் என்று அன்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது தமிழர் சமுதாயம்.

பாரைக் குலுக்கிய பல புரட்சிக் காலங்களைப்போல, 1937-க்கும் 1940-க்கும் இடைப்பட்ட மூன்ருண்டு காலம் துணைக் கண்டத்தையே குலுக்கும் தமிழனது மொழிப் போராட்ட காலமாக விளங்கிற்று. எரிமலையென்பதையே இன்னதெனக் காணுத தமிழகத்தில் ஒவ்வொரு உடலிலும் அப்போது எரிமலை கனன்றது; உணர்ச்சிகள் குழம்பாகக் கொதித்தன; தசையும் நரம்பும் நோய்நொடிகளாலும் மூப்பாலும் தளர்வதற்கு மறுத்தன; மாக்கோலமும் மஞ்சள் வாடையும் மிகுந்திருந்த இல்லங்கள் பிணவீடுகளாக மாறுவதற்கும் தயாராயின; தமிழ் மொழியின் 'சீரிளமைத்திறம் வியந்து செயல் மறந்து' நுண்மாண்புலமெல்லாம் நுழைந்து நுகர்ந்துகொண்டிருந்த புலவர்கள்—'முலையிலோர் சிறு நூலும் புது நூலாயின் முடிதனிலே சுமந்து வந்து தமிழிற் சேர்க்கும் தமிழரறிஞர்கள்—போர்வீரர்களாகப் புத்துருக் கொண்டனர்; 'ஏதுஞ் சதமில்லை எதுவும் நமக்கில்லை' என்று வாழ்வை நடத்திவந்த துறவிகள், மொழி காக்கும் பெரும் போரில் தூக்குமேடைக்கும் தயாராகி நின்றனர்; சிலம்போடு சென்று பாண்டியன் அவையில் நியாயங் கேட்ட பழங்காலக் கண்ணகி இனம் பட்டுப் போகவில்லை என்று சொல்லித் தாய்மார்க் கூட்டம் குழந்தைகளோடு சிறைபுகத் தயாராகி, உலகத்தின் நியாயக் கண்களை நிறைகுளங்களாக ஆக்கிற்று.

வெயில் காலத்தில் இருக்கையில் இல்லாதுபோகும் எறும்புக் கூட்டத்தைப்போல, இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில் தமிழ்க்குலமே வேறு வேலைகளை எண்ணவில்லை; வேறு சிந்தனைகளைக் கொள்ளவில்லை. இருந்ததெல்லாம் மொழிப் பாதுகாப்புப் பணி; இந்திப் பேயை விரட்டுவதற்கான போராட்டம்.

1937-ஆம் ஆண்டு! ஆயிரமாண்டுக் காலத்தின் அழியாத தமிழ் உறுதி அப்போது தெள்ளெனத் தெரிந்தது. தமிழ் கூறு நல்லுலகத்தின் மறந்தும் மறைந்தும்போன வரலாற்றுப் புதையல்கள் நாடகக் காட்சி போல் மக்கள்முன் நிழலிட்டன. துன்பமும் தொல்லையும் சூழ்ந்து கொண்டிருந்த அந்த நாளில், தமிழினத்தின் சில்லறைப் பிணக்குகள் அழுந்தி ஆழத்தில் மறைந்துவிட்டன.

அந்த நாளிலும் துரோகிகள் இருந்தனர்; தொடைநடுங்கிகள் வாழ்ந்தனர்; அற்பமான பட்டம் பதவிகளுக்காகத் தாய்மொழி—தாய்நாடு—தனது இனம் ஆகிய அத்தனையையும் காட்டிக்கொடுக்கும் அற்பர்கள் வதிந்தனர்; காற்றடிக்கும் பக்கமெலாம் காற்ருேடு கலந்து பறக்கும் பதர்களும் இருந்தனர். எங்குதான் இத்தகைய கூட்டம் இல்லை? எப்போதுதான் இதுபோன்ற கூட்டம் இல்லாதொழிந்தது? அவர்கள் பாராட்டப்படக் கூடியவர்கள் அல்லர்; என்ருலும் மன்னிக்கத்தக்கவர்களே.

1937! இன்றைக்குச் சரியாக இருபத்தைந்து ஆண்டுகள்! இந்த இடைக்காலத்தில் எவ்வளவோ தலைகீழ் மாறுதல்கள் நடைபெற்றன. பாசிசமும் நாசிசமும் இருந்த வடு தெரியாமல் அடியோடு வீழ்ச்சியுற்றன. ஐம்பதுக்கு மேற்பட்ட நாடுகள் சுதந்திர அந்தஸ்துடன் ஐ. நா. சபையில் இடம் பெற்றன். 'சூரியனே மறையாத சாம்ராஜ்யம்' சுடர் விளக்கு கொண்டு தேடிப் பிடிக்க வேண்டிய அளவுக்குக் குறுகி விட்டது. ஆனல் இந்தி மொழி வெறியர்களின் ஆதிக்க ஆசை மட்டும் அன்று பிறந்த மேனியாக—என்றுஞ் ''சிரஞ்சீவியாக''இன்றைக்கும் குத்துக் கல்லாக நின்று கொக்கரிக்கிறது. இருபத்தைந்து ஆண்டுகால வளர்ச்சி — உலக மாறுதல்— நாகரிகம் — எதுவுமே இந்தி வெறிக் கூட்டத்தை அசைத்துக் கொடுக்கவில்லை. காங்கோக் காடுகளில் மனித மாமிசம் உண்போர் இன்றைக்கும் இருப்பதுபோல், இந்தி வெறியர்களின் ஆதிக்கக் கனவு நடுப் பகல் வெளிச்சத்திலும் கலையாததாக இருக்கிறது. ''யாவரும் இந்தி மனப்பான்மை உடையோராகச் செய்யவேண்டுவதே இந்திப் பிரச்சாரச் சபையின் நோக்கமாகும்'' என்று 1937 ஆகஸ்டு 20-ம். நாள் ''இந்து'' இதழில் தட்சணபாரத் இந்திப் பிரச்சாரச் சபையின் அமைப்பாளர் எழுதினுர். இதே கருத்தை கொஞ்சம் கூட மாறுதலின்றி — இருபத்தைந்து ஆண்டு காலம் இடையில் கழிந்திருப்பினும் — 1963 சூலை 21ல் ஐதராபாத் நிகழ்ச்சியொன்றில் லால்பகதூர் சாஸ்திரி பேசியிருக்கிருர். இந்திப் பிரச்சாரச் சபையின் பணி காரணமாக ''இந்தி மனப்பான்மை'' வளர்ந்து வருவதாக அவர் தன் முதுகில் தானே தட்டிக் கொடுத்துக் கொண்டார்.

நாம் இதனைத் தெளிவாக மனத்தில் கொள்ள வேண்டும். இந்தி மொழி அறிவை அல்ல, ''இந்தி மனப்பான்மையை'' உருவாக்குவதுதான் இந்தித் திணிப்பின் நோக்கமாக 25 ஆண்டுகளுக்கு முன் பேசப்பட்டது. இன்றும் அப்படித்தான் சொல்லப்படுகிறது. ''இந்தி மனப்பான்மை'' என்பதுதான் என்ன? இந்த மனப்பான்மை தமிழனுக்கு ஏற்புடையதுதானு? ஏற்றுக் கொள்வானு? ஏற்றுக்கொண்டானு?

இவைகளைத் தெளிவாக்கிக் கொள்ள வேண்டுமானுல், கடந்த தமிழ்த் தலைமுறையின் கடைசி கால வரலாற்றை நினைவு கூறல் வேண்டும். ஸ்டாலின் கிராட் போர் முனையை நினைவு கூர்வதையே இன்பமாகக் கருதும் ரஷ்யனைப் போல, 1937இல் தொடங்கிய இந்தி எதிர்ப்புப்

பாரைக் குலுக்கிய பல புரட்சிக் காலங்களைப்போல், 1937-க்கும் 1940-க்கும் இடைப்பட்ட மூன்ருண்டு காலம் இந்தத் துணைக்கண்டத்தையே குலுங்க வைத்த தமிழனது மொழிப் போராட்டக் காலமாக விளங்கிற்று. மூவாயிரமாண்டு காலத் தமிழனது மொழிஉணர்வு அந்த மூன்ருண்டு காலத்தில் சாதித்த சாதனைகள் அடுத்து வரும் ஆயிரமாண்டுகளுக்குப் புகழ் பாடப் போதுமானவையாகும். அத்தகு புகழ்மிக்க வீர வரலாற்றின் ஏடொன்றினைப் போன்றதே இந்தக் கட்டுரை.

கட்டுரையில் குறிப்பிட்டுள்ள சிறை பிடிக்கப்பட்டோர் எண்ணிக்கை அறிஞர் அண்ணு அவர்களது சொற்பொழிவு ஆகியவைகளுக்கு அடிப்படை தோழர் மா. இளஞ்செழியன் அவர்களது ''தமிழன் தொடுத்த போர்'' என்ற நூலாகும்.

இந்தி எதிர்ப்புப் போராட்ட நினைவுகள் !

எத்திசை வந்து புகுந்துவிடும் இந்தி ?

போர் முனையை நினைவுபடுத்துவது தமிழனுக்கு என்றைக்குமே இன்பத்தைக் கொடுப்பதாகும்; வீரத்தை விளைவிப்பதாகும்; தனி தன்மையை விடாதிருக்க எந்த விலை கொடுக்கவும் தூண்டுவதாகும்'

1937! இது உலகத்திற்கே துக்ககரமான ஒரு ஆண்டு. ஏகாதிபத்திய வெறியாலும் விஸ்தரிப்புக் கொள்கையாலும் தலைகனத்துத் திரியும் யதேச்சாதிகாரிகளே இனித் தோன்றக் கூடாது என்று உலகம் நினைத்திருந்ததை, 1937ஆம் ஆண்டு பொய்யாக்கியிருக்கிறது. விளையாட்டாகத் தெரிந்த ஆர்ப்பாட்டமெல்லாம், உலகையே குலுக்கிக் குமுறியழவைக்கவல்ல கொடூரங்களாக இந்த ஆண்டில் உருப்பெற்று உலா கிளம்பின. முசோலினியின் பாசிச அதிகாரம் முழுபலத்துடன் கொடிகட்டி பறந்தது. இரண்டாம் உலகப் போருக்கான இட்லரின் ஆயத்தங்கள் இரட்டிப்பு வேகத்தில் நடந்தேறின. உலகத்து முது பெருங் கூட்டமான யூதர்க் கூட்டத்தை பூண்டோடொழிக்கும் 'இறுதி வழி' அரும்பு விட்டது. **இந்தி ஏகாதிபத்தியமும் இந்த ஆண்டில்தான் தென்னகத்தில் காலூன்ற நாயாய்த் துடித்து பேயாய் அலைந்தது. இந்திப் பிரச்சாரச் சபைகள் இங்கு துவக்கப்பட்டதும் இந்த ஆண்டில் தான்.** நாஜிகளின் வளர்ச்சி—வீழ்ச்சியைப் படம் பிடித்துக் காட்டும் சரித்திரக்காரன் வில்லியம்ஷெரர், 1937-ஆம் ஆண்டு பற்றிக் குறிப்பிடுகையில், 'போர்த் தளவாடங்களைப் பெருக்கிக்குவிக்கவும், படைகளுக்குப் பயிற்சி அளிக்கவும், புதுப்படைக் கருவிகளைப் பரிசோதித்துக் காணவும், முசோலினி—இட்லர் நட்புறவை உறுதிப்படுத்திக் கொள்ளவும், பிரான்ஸ், இங்கிலாந்து, அஸ்திரியா போன்ற நாடுகளின் பலவீனமான பகுதிகளைக் கணிக்கவும் 1937-ஆம் ஆண்டைப் பாசிச வெறியர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள்' என்று எழுதுகிருன். இட்லர் — முசோலினிகளுக்கு மட்டும் இந்த ஆண்டு வழிவகுத்துக் கொடுக்கவில்லை; கிழக்கத்திய உலகத்தின் அவர்களுடைய மிகச் சரியான பதிப்பான இந்தி வெறியர்களுக்கும் புன்மைச் சபலத்தை உண்டாக்கிக் கொடுத்திருக்கிறது.

சிறுபிள்ளைத்தனமான எத்தனையோ விளையாட்டுக்களுக்குப் பிறகு—அதுவரையில் ஆங்கிலக் கவர்னரின் மேற்பார்வையில் மாகாண ஆட்சியை நடத்தி வந்தவர்களைத் தேசத் துரோகிகளாகவும், ஆங்கிலேயர் அடிவருடிகளாகவும் தூற்றித்திரிந்த ஒலிமங்காததற்கு முன்பே—வசதி வாய்ப்புள்ள மாகாணங்களில் தனது மந்திரி சபைகளை அமைக்கலாம் என்று காங்கிரஸ் 'மகாசபை' முடிவு செய்தது. இதன்படி, சென்னையில் அன்பர் இராசகோபாலாச்சாரியார் அவர்கள் தலைமையில் காங்கிரஸ் மந்திரி சபை, 1937 ஜூலைத் திங்களில் அமைந்தது.

சில வகைக் காளான்களும் பூண்டுகளும் முளைக்கும்போதே சுற்றிலும் நெடி நாற்றத்தைப் பரப்பிக்கொண்டு முளைப்பதைப்போல், 1937-இல் அமைந்த காங்கிரஸ் மந்திரிசபையும் தமிழகத்தில் நெடி நாற்றத்தைப் பரப்பிக் கொண்டே பிறந்ததாகவருணிப்பதில் தவறிருக்க முடியாது. அப்போது வீசத் தலைப்பட்ட ஆகாத நாற்றம், இன்றளவும் — விட்டுவிட்டு—நமது மூக்கைத் துளைத்து பிணியுணர்ச்சி கொள்ளச் செய்கிறது என்பதும் மிகைபடச்சொல்வதாகாது. 1937 ஜூலைத் திங்களில் அமைந்த மந்திரிசபையின் அவசரமான பணி, தமிழகத்தை, தமிழ்க் குலத்தை, தமிழ் மொழியை, தமிழ்ப் பண்பை வடநாட்டவருக்கு அடிமைப்படுத்துவதிலேயே—இந்தி மனப்பான்மையை உருவாக்குவதிலேயே — முதன்மையாகவும் முக்கியமானதாகவும் இருந்தது. ஜூலையில் மந்திரிசபை அமைத்து, செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் எத்தனை வாயில்கள் இருக்கின்றனவென்பதைக்கூட தெரிந்துகொள்ளமுடியாத அவ்வளவு விரைவான காலத்திலேயே—அதாவதுஇரண்டொரு வாரத்திலேயே—தமிழகத்தின் உயர்நிலைப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயமாகப் புகுத்துவதற்குத் தாம் முடிவுசெய்து விட்டதாகவும், அதனை அமுல்படுத்தியே தீரப்போவதாகவும் ஆச்சாரியார் அறிவித்தார்.

ஆங்கிலேயன் விரண்டோடுவதைத் துரிதப்படுத்துவதற்கல்லாமல், இந்தியைத் திணிப்பதற்கே அரசியல் அதிகாரம் பெறுவதற்குக் காங்கிரஸ் கட்சி துணிந்ததோ என்று நினைக்கும் வகையில், இந்தித் திணிப்பு வேலைகள் அவ்வளவு விரைவாகவும் துரித கதியிலும் இயங்கின. பதவியேற்ற சில நாட்களுக்குள்ளாகவே இந்தியைத் திணிக்கும் பாதகத் திட்டத்தை ஆச்சாரியார் வெளியிட்டார். 'மாநிலத்திலுள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் இந்தியைக் கட்டாய பாடமாகத் திணிக்கும் வகையில் அரசாங்க உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை, 10—9—37-இல் சென்னை இராமகிருஷ்ண மடத்தில் கூடிய பொதுக்கூட்டமொன்றில் முதன் முதலாக ஆச்சாரியார் வெளியிட்டார்.

மறைமலையடிகள்

சந்தேகத்திற்கே ஆட்படாத பாத்திரம் இறுதியில் கொலைகாரனென மர்மக் கதைகளில் முடிவதைப்போல் இருந்தது இது. மக்கள் நல்வாழ்வுக்காக சுதந்திரங்கோரி நின்ற காங்கிரஸ் கட்சியின் மந்திரிசபை தீட்டின முதலாவது திட்டமே, பதவி ஏற்றதும் இட்லர் பிறப்பித்த ஆணைகளை நினைவூட்டிற்று. இது கேட்ட தமிழுலகம் கொதித்துக் கொந்தளித்தது. ஆகாது கூடாது—ஒருக்காலும் முடியாது என ஆர்த்தெழுந்தனர் தமிழர். பிணக்காட்டின் பிலாக்கண ஒலி படைத்த இந்திக்கு, வயற்காட்டின் பசுமை வனப்பு வாய்ந்த தமிழகம் வேட்டைக்காடாக ஆக முடியாது எனச் சொல்லித் திரண்டனர் மக்கள்.

ஆச்சாரியாரின் இந்தித் திணிப்புத் திட்டத்தை ஆரியர் சூழ்ச்சி என்றது ஒரு பகுதி; 'இந்தி எதிர்ப்பு இயக்கம் ஒரு தனித்த—துண்டான இயக்கமல்ல. டலப் பல நூற்ருண்டுகளாகத் தமிழ் நாட்டின் பல்வேறு துறைகளிலும் தொடர்ந்து நடந்துவரும் அந்தப் பரந்துபட்ட ஆரிய—திராவிடப் போராட்டத்தின் ஒரு பகுதியே இந்தி எதிர்ப்பு இயக்கம்' என்பது அவர்கள் வாதம்.

'புதிதாகக் கால்கொள்ளும் ஏகாதிபத்திய அரசியல் அடிமைத் தனத்திற்கு வித்து இந்தித் திணிப்பு' என்றது மறுபகுதி;

'ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொள்ளப் பார்க்கும் இழிதகையாளர் முயற்சி' என்றது பிறிதோர் பகுதி;

'எல்லாமே தவறு. தனக்கு மூத்ததொரு நாகரிகம் தன்னைக் கேலி பேசும் வகையில் இந்தத் துணைக் கண்டத்தில் இருப்பதை வடக்கின் லம்பாடிகள் விரும்பவில்லை என்பதுதான் இந்தித் திணிப்புத் திட்டத்தின் அடிப்படை என்பது உங்களுக்கு விளங்கவில்லையா ?' என்றது பெரும் பகுதி.

யார் எப்படிச் சொல்லி இந்தித் திணிப்பின் சூதுத் திட்டத்தை வருணித்தபோதிலும், இந்தி கூடாது; அது தமிழகத்தில் கட்டாய பாடமாக்கப்படக் கூடாது; இளஞ்சிருர்களின் அடிவயிற்றுக் குடலை அது புரட்டிப் போடக் கூடாது என்பதில் எல்லாச் சாரரும் ஏகோபித்த முடிவுடன் எதிர்க்கத் தலைப்பட்டனர்.

அதே நேரத்தில் பெரும்புலவர் மறைமலை அடிகளார் அவர்கள் **'இந்திப் பொது மொழியா ?'** எனும் அரிய நூலொன்றை வெளியிட்டார். அரசாங்கக் கட்டளையைக் காட்டிலும், வேத நூல்களின் கட்டுத் திட்டங்களைக் காட்டிலும், மறைமலை அடிகள் போன்ற அறிஞர் பெருமக்கள் கருத்துக்களுக்கு அடங்கிச் செவிமடுத்தனர் மக்கள். மிக அண்மைக்காலத்தே எழுந்த ஒரு கலவை மொழிதான் இந்தி என்பதும், செத்தொழிந்து போன சமஸ்கிருதத்தின் வழி மொழியே இந்தி என்பதும், இலக்கண இலக்கியம் சிறிதும் வாய்க்கப் பெருதது அது என்பதும், பால் வேற்றுமைகள்கூட அதில் முறையோடு காணமுடியாது எனவும், அறிவு நூல்கள் ஒன்றுகூட அதில் இல்லை என்பதும், எவ்வகையாலும் தமிழொத்த மொழி வழங்கும் இடத்தில் பொது மொழியாவதற்கு அதற்குத் தகுதி இல்லை எனவும் அசைக்கமுடியாத ஆதாரங்களுடன், அறிவுலகம் வியக்கும் ஆராய்ச்சியின் அடிப்படையில் அந்த நூல் அமைந்தது. இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்கு இது 'பைபிள் வேதமாக'ப் பயன்பட்டது என்ருல் அது மிகையல்ல.

தனது இந்தித் திணிப்புத் திட்டத்தை 10—8—37-இல் ஆச்சாரியார் அறிவித்ததும் நாடு முழுவதும் அது கண்டிக்கப்பட்டது. தமிழகத்தின் பெரும் புலவர்களாகத் திகழ்ந்த மறைமலை அடிகளார், நாவலர் பாரதியார், கா. சுப்பிரமணியப் பிள்ளை, மறை. திருநாவுக்கரசு, காமக்கூர் சுந்தர முதலியார், சிவ. குப்புசாமிப்

விழியை விற்று சித்திரம் வாங்கோம்!

பிள்ளை, கவியரசு வெங்கடாசலம் பிள்ளை, இ. கோவிந்தசாமிப் பிள்ளை, ஜி. சோமசுந்தர தேசிகர், மயிலை சிவ. முத்துக்குமாரசாமி, பு. செல்வராஜ் ஆகியோரும், முற்றுந்துறந்த துறவிகளாக வாழ்ந்துவந்த சாமி. விபுலானந்தர், சாமி. விமலானந்தர், சாமி. அற்புதானந்தர், வள்ளல் சிவ ஞான தேசிகர், சாமி. அருணகிரிநாதர், ஈழத்து அடிகள், ஸ்ரீதர சாமிகள், சாமி. கைவல்யம் ஆகியோரும் இந்திக்கு எதிரான கண்டனக் குரல் எழுப்புவதில் முன் வரிசையில் நின்றனர். ஏராளமான பொதுக்கூட்டங்கள், மகத்தான ஊர்வலங்கள், அரியபெரிய மாநாடுகள், அறிஞர் பெருமக்களுடைய ஆராய்ச்சி உரைகள், தலைசிறந்த கல்விமான்களது கண்டனக் கணைகள் அத்தனையும் தமிழகத்து அன்றாட வாழ்வில் கலந்துவிட்ட நிகழ்ச்சிகளாயின.

இவைகள் எதையும் காங்கிரஸ் மந்திரி சபை பொருட்படுத்தவில்லை. இந்தித் திணிப்பு திட்டத்தில் தீவிரமாக மூழ்கி விட்டது. ஊர்தோறும் நடைபெற்ற கூட்டங்கள், வட்டாரந் தோறும் நடைபெற்ற ஊர்வலங்கள், மாவட்டந்தோறும் நடைபெற்ற மாநாடுகள் அத்தனையையும் மீறி, இந்தி அரசியலாரால் புகுத்தப்பட்டே தீரவிருக்கிறது என்றறிந்த தமிழர் 26--12--37-இல் திருச்சியில் கூடினர். அன்று சென்னை மாநிலத் தமிழர் மாநாடு திருச்சியில் நடைபெற்றது. மாநாட்டின் தலைவர் நாவலர் சோமசுந்தர பாரதியார். திறப்பாளர் கா. சுப்பிரமணியப் பிள்ளை. வரவேற்பாளர் த. வே. உமா மகேசுவரனார். இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படுவதால் தமிழர்களுக்கு ஏற்படும் தொல்லைகளை கவர்னரிடம் நேரில் எடுத்துரைக்க நாவலர் பாரதியார், பெரியார், உமாமகேசுவரனார் ஆகியோர் கொண்ட குழு ஒன்று இந்த மாநாட்டில் அமைக்கப்பட்டது.

ஆங்கிலச் சக்கரவர்த்திக்கு வாழ்த்துக்கள் கூறி ஆச்சாரியார் காங்கிரஸ் மந்திரிசபை அமைத்து இந்தித் திணிப்பு தடபுடல் நடத்திய அந்தநாளில் — 'வெள்ளையனே வெளியேறு' என்ற கோஷம் காங்கிரஸ்காரர்களின் கனவில்கூட தோற்றமளிக்காத அந்தநாளில்— சென்னை மாநில ஆங்கிலக் கவர்னர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றை இந்த மாநாட்டில் பெரியார் மூலமாக அறிஞர் அண்ணா அவர்கள் கொண்டுவந்தார்கள். வெள்ளையனுக்கு ஆதரவாக நின்றதாக அண்ணா அவர்களைப்பற்றி இப்போது நாவலிக்கப் பேசும் எத்தனைப் புதுக் காங்கிரஸ்காரர்களுக்கு இந்த விவரம் தெரிந்திருக்கிறது?

திருச்சிப் பாசறைத் தீர்மானத்தற்கும், அதில் அமைக்கப்பட்ட குழுவுக்கும் அரசாங்கத்தின் ஆணவமான போக்கே பதிலாகக் கிடைத்ததால், 23—2—38-இல் காஞ்சியில் மீண்டும் தமிழர் மாநாடு கூடிற்று. காஞ்சி மாநாட்டுத் தலைவர் முன்னாள் கவர்னரும் பிரபல ஆந்திரப் பெருமகனுருமான சர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்களாவார்.

"பொதுமக்கள் பணத்தைக் கொண்டு சர்க்கார் வரவு-செலவுத் திட்டத்தில் தேவையற்ற இந்திக்குப் பணம் செலவழிக்கக்கூடாதென இம்மாநாடு எச்சரிக்கிறது" என்ற தீர்மானத்தை அறிஞர் அண்ணா அவர்கள் முன்மொழிந்து, பொதுமக்கள் வரிப் பணத்தை அரசாங்கம் செலவழிக்க வேண்டிய பொறுப்புபற்றி அருமையான இலக்கணத்தையே வகுத்துக் கொடுத்தார்கள்.

அண்ணா அவர்களின் இந்தத் தீர்மானத்தை தமிழவேள் உமா மகேசுவரர் வழிமொழிந்து பேசி இந்தியின் அவலட்சணத்தையும் தமிழின் மேன்மையும் பறைசாற்றினார்.

அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி

இதுபோன்று பெருமக்களின் எதிர்ப்பினை நெடுநாட்களுக்குத் தாங்கிக்கொண்டிருக்க முடியாதென உணர்ந்த அரசாங்கம், 11-4-38ஆம் நாளன்று, இந்தியைக் கட்டாய பாடமாக்கும் கண்மூடித்தனமான உத்தரவை அதிகாரபூர்வமாகவே பிறப்பித்து விட்டது. தமிழகத்தில் 60 பள்ளிகளிலும், ஆந்திராவில் 54 பள்ளிகளிலும், கருநாடகப் பகுதியில் 4 பள்ளிகளிலும், கேரளப் பகுதியில் 7 பள்ளிகளிலும் பரீட்சார்த்தமாக இந்தியைப் புகுத்துவதென அரசாங்க உத்தரவு கூறிற்று. கடுமையான கண்டனத்திற்கும் அமைதியான எதிர்ப்புக்கும் உள்ளாகியிருந்த இந்தித் திணிப்பு பிரச்சினை, அரசாங்கச் சட்டமாகவே ஆகிவிட்ட நாளான 21-4-38 முதல் தமிழர்கள் போராடி எதிர்க்க வேண்டிய கொடுங்கோல் சட்டமாக உருவெடுத்து விட்டது; அகம்பாவம் மிகுந்த அரசாங்கச் சட்டத்தை அமைதியாக எதிர்த்து ஒழிக்க வேண்டுமென்று தமிழகம் முடிவெடுத்து விட்டது.

போராடி இந்தியைத் தொலைப்பது அல்லது போரிட்டே மடிவது என்ற முடிவில், தகுந்த திட்டங்கள் வகுத்துக்கொள்ளவும், வழிமுறைகளைக் கலந்து பேசவும் 28-5-38இல் மீண்டும் திருச்சியில் 'மந்திராலோசனைக் கூட்டம்' நாவலர் சோமசுந்தர பாரதி தலைமையில் தமிழர்கள் நடத்தினர். 'சத்தியாக்கிரகம்— அதில் வெற்றி கிடைக்கா விட்டால் சட்ட மறுப்பு' என்று தொடங்கி, 'இந்தி விருப்பப் பாடமாக வருவதைக்கூட ஒழிக்க வேண்டும்' என்ற வகையில் கூட்டத்தின் தீர்மானங்கள் அமைந்தன.

ஒரு வழிப்படை திரட்டிப் பல ஊர்களிலும் தமிழ் மக்களிடையே இந்தி எதிர்ப்புப் பிரச்சாரம் செய்தல், மாணவர்களை இந்தி உள்ள பள்ளிக் கூடங்களில் சேர்ந்து படிக்காமல் மறியல் செய்து தடுத்தல், என்பன போன்ற முடிவுகள் மந்திராலோசனைக் கூட்டத்தின் முக்கியமானவை. இந்தி எதிர்ப்புத் தலைமைக் குழுவொன்றும் இந்தக் கூட்டத்தில் அமைக்கப்பட்டு, நாவலர் பாரதியார் தலைவராகவும், பெரியார், உமாமகேசுவரனார், ஊ. பு. அ. சவுந்திரபாண்டியன் ஆகியோர் உறுப்பினர்களாகவும் அந்தக் குழுவில் இடம் பெற்றனர்.

திருச்சி மந்திராலோசனைக் கூட்டம் நடைபெற்றுச் சரியாக ஏழு நாட்களுக்குப் பின்னால், 3-6-1938இல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் துவங்கி விட்டது.

3-6-1938இல் சென்னை கோடம்பாக்கத்தில் மறைமலை அடிகள் தலைமையில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது' தியாகராய நகரிலுள்ள முதலமைச்சர் இல்லத்தின் முன்பு இரண்டு நாட்களாக 'இந்தி ஒழிய வேண்டும்' என்பதற்காக உண்ணாவிரதம் இருந்துவந்த தோழர் பல்லடம் பொன்னுசாமி அவர்கள் கைது செய்யப்பட்டார் என்ற சேதி மாநாட்டில் அறிவிக்கப்பட்டது. இந்தி எதிர்ப்புப் போரில் முதன் முதலாகக் கைது செய்யப்பட்டவர் தோழர் பல்லடம் பொன்னுசாமி அவர்களே ஆவார். அவரைத் தொடர்ந்து அன்றிரவே, போராட்டத்தின் முதல் சர்வாதிகாரியான தோழர் நாயகம் அவர்களும், சண்முகானந்த அடிகளும் சிறை பிடிக்கப்பட்டனர். தோழர் பொன்னுசாமி தண்டனையேற்று சிறைவாழ்வு தொடங்கியபோது, தான் ஓர் காங்கிரஸ்காரர் என்றும், தமிழன்னையைக் காப்பது தமிழனுன தனது கடமை என்றும் வாக்குமூலத்தில் குறிப்பிட்டார்.

குமுறிக்கொண்டிருந்த எரிமலை வெடித்துக் குழம்பு கக்கத் தொடங்கிவிட்டது.

முதலமைச்சர் வீட்டின் முன்னால் உண்ணாவிரதம் இருந்த தோழரைக் கைது செய்த காரணத்தைக் கொண்டே, போராட்டம் ஆச்சாரியார் வீட்டு முன்பாக மறியல் செய்வதாகவே துவங்கி விட்டது. காலக்கெடு கணிக்காமலே போராட்டம் துவக்கப்பட்டுவிட்டது. இந்தி வேண்டாம் என்று சொல்பவர்களை 3-6-38 முதற்கொண்டு சிறைபிடிக்கத் தொடங்கிய ஆட்சி 21-2-40ல் தான் ஓய்ந்தது; இந்தி தொலைந்த பின்தான் தமிழர்களும் ஓய்ந்தனர்:

முதலமைச்சர் வீட்டு முன் 3—6--38-இல் ஆரம்பித்த மறியல், மூன்று வாரம் கழித்து சென்னை சவுகார்ப் பேட்டையிலுள்ள இந்து தியலாஜிகல் உயர்நிலைப்பள்ளி எதிரிலும் மறியல் செய்வதென முடிவாகி போராட்ட முனை விரிவடைந்தது.

போராட்டம் துவங்கிவிட்டதும் பொதுமக்களிடம் இந்தி எதிர்ப்புப் பிரச்சாரத்தைத் தீவிரமாக்கவும், அரசாங்கத்தின் அடாத செயல்களை அவ்வப்போது கண்டிக்கவும் சென்னை நகரில் நாள்தோறும்— மூலைமுடுக்கெங்கிலும் இந்தி எதிர்ப்பியக்கத் தலைவர்கள் சூருவளியாகச் சுழன்றனர். இந்தச் சூருவளிப் பிரச்சாரத்தின்போதுதான் அறிஞர் அண்ணா அவர்களை யாரே

தமிழை அழித்து 'தேசியம்' பேசுவோம்!

னச் சரியாக இந்தத் தமிழகம் அடையாளங் கண்டு கொண்டது. அதுவரையில் இந்தி எதிர்ப்பு இயக்கத்திலும் நீதிக் கட்சி விவகாரங்களிலும் முக்கியப்பங்கேற்று வந்திருக்கிருர் என்ருலும், சாதாரணப் பொதுமக்களின் சராசரிக் கண்களுக்கு பலரைப் போலவே இவரும் ஒருவராகத் தெரிந்துவந்தார். தனது மேதையை—தனது தூய பண்பினை—எப்பேர்ப்பட்ட புயல் காற்றிலும் நிமிர்ந்து நிற்கக் கூடிய தனது நெஞ்சழுத்தத்தை —போராட்ட நேரத்தில்தான் பிறர் கண்டு வியக்கும் வகையில் தன்னையும் அறியாமல் வெளிப்படுத்தினுர். புரட்சிகளும்போராட்டங்களும் திறமையானவர்களை திடீரென உண்டாக்கிவிடுவதில்லை; ஆனுல் தகுதியும் திறமையும் நிரம்பப் பெற்றவர்கள் யார் என்பதை அந்தக் காலம் அழகாகக் காட்டிவிடுகிறது. இளமைக் காலத்திலும் இடர்பாடுற்ற நேரத்திலும் ஏற்படும் நட்பும் உறவும் என்றைக்கும் நிலைத்து துல்லியமானதாக இருக்கும் என்பதைப்போல், போராட்ட காலத்தில் அறிஞர் அண்ணு அவர்களுக்கும் தென்னகத்துச் சமுதாயத்திற்கும் ஏற்பட்ட பிணைப்பும் பாசமும் எதனுலும்—யாராலும் பிரிக்கமுடியாததாக இன்று நிலைத்துவிட்டது. உணர்ச்சிப் பிழம்பாகக் கொதிப்பேறிக்கிடந்த அன்றைய தமிழகத்தில், அடாதது நடவாமல், அறவழி மூலமே வெற்றி காண்பதற்கு ஒழுங்கான பாதை அமைத்துக் கொடுத்தது சுயமரியாதை இயக்கமும் அதன் மூளையாக நின்று இயக்கி வந்தவரான அறிஞர் அண்ணு அவர்களும்தான். இந்திப் போராட்ட காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட ஆத்திர உணர்ச்சியை அமைதி கெடத்தக்க வகையில் திருப்புவதற்கு யாரும் அனுமதிக்கப்படவில்லை. தமிழர்கள் பலாத்கார முறைகளைச் சிறப்பாகக் கற்பதற்கு அருமையான சந்தர்ப்பமாக அது இருந்தது என்ருலும், காந்தியத்தின் பிற்கால உண்மை வாரிசாகத் துலங்கப் போகும் அறிஞர் அண்ணு அவர்கள் அப்போது அந்த இயக்கத்தில் இருந்துத் தலைமை தாங்கினுர் என்பது சாத்வீக உலகத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்!

இந்தக் காலத்தில்தான், நாள் தோறும் நடைபெற்றுவந்த போர் முழக்கத்தின் ஒரு பகுதியாக 31—7—38-இல் சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் கூடிய கூட்டத்தில், கழகத்தின் இன்றைய அமைப்புச் செயலாளரும் அன்றைய தீவிர காங்கிரஸ்வாதியுமான தோழர் என். வி. நடராசன் அவர்கள், அண்ணு அவர்கள் ஏற்பாட்டின்படி கலந்து கொண்டார். தோழர் எஸ். சத்தியமூர்த்தி (அய்யர்) தலைமையில் நடைபெற்ற அன்றுதான் சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் தோழர் என். வி. நடராசன், கட்டாய இந்தியை எதிர்த்துத் தீர்மானம் கொண்டுசென்று அது தோல்வியுற்றது. ஆதலின் காங்கிரஸ் செயலாளர் பொறுப்பிலிருந்தும் காங்கிரசிலிருந்தும் விலகி அது முதல் திராவிட இயக்கத்தின் உறுப்பாகவே ஆகிவிட்டார்.

அடுத்தடுத்து அரசாங்கத்தின் கெடுபிடிகளும், அதை எதிர்த்து நிற்போரின் தீவிரமும் போட்டி போட்டுக்கொண்டு இறுதியில் வெல்லப் போவது யார் என்று ஒன்றுக்கொன்று அறைகூவல் விடுத்துக்கொண்டிருந்தன.

இரண்டாம் சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்ட ஈழத்து அடிகள் இரண்டு மாதகால பொறுப்புக்குப்பின் 28—7—38-இல் கைதாகி 9 மாதச் சிறைத் தண்டனை பெற்ருர். 6—8—38-ல் மூன்ரும் சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்ட தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் மூன்று நாட்களுக்குள்ளாகக் கைது செய்யப்பட்டார். அவருடன், மறைமலை அடிகளாரின் மகனுன மறை. திருநாவுக்கரசு அவர்களும் கைதாக்கப்பட்டு இருவருக்கும் ஆறு மாதச் சிறைத் தண்டனை வழங்கப் பெற்றது.

26—9—38.இல் இந்தி எதிர்ப்புப் போரின் முதுகெலும்பாக—சூருவளிப் பிரச்சாரத்தின் நடுமையமாக—'இந்த வாசாலகருக்கு முன்னுல் இந்தி தாக்குப் பிடிக்காமல் ஒழிந்தே தீரும்' என்று தமிழகமே அறுதியிட்டுக் கூறி ஆழ்ந்த நம்பிக்கை தெரிவித்து விட்ட—தமிழ்ப் பட்டாளத்தின் தளபதி அறிஞர் அண்ணு அவர்களுக்கு 4 மாதச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அண்ணு அவர்கள் கைது செய்யப்பட்டதும், ஆச்சாரியார் வீடு—இந்து தியலாஜிகல் உயர் நிலைப்பள்ளி ஆகிய இரண்டு இடங்களிலும் மறியல் செய்துவந்தது நிறுத்தப்பட்டு, தியலாஜிகல் பள்ளிமுன் மட்டுமே மறியல் செய்வதென போராட்டத்தில் ஒரு திருப்பம் ஏற்பட்டது.

சென்னையில் இந்தி எதிர்ப்பு மறியலும், அதனை அடக்குவதற்கு அரசாங்கத்தின் கண்மூடித்தனமான அடக்குமுறையும் நடந்து கொண்டிருக்கும்போதே தமிழ்க்குலம் திருச்சி உறையூரில் வேறொரு பட்டாளத்திற்கு வாழ்த்துக் கூறி, 'சென்று வாருங்கள்—வென்று வாருங்கள்' என்று ஆரத்தி எடுத்தது. 1938 ஆகஸ்டு 1-இல் தமிழர் பெரும் படை உறையூரிலிருந்து, நெடுகிலும் இந்தி எதிர்ப்புப் பிரச்சாரம் செய்துகொண்டு கால்நடையாகவே சென்னைக்கு வரத் தொடங்கிற்று. இந்தப் பெரும் படைக்கு அஞ்சாத நெஞ்சு படைத்தவரென அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பட்டுக்கோட்டை தோழர் அழகிரிசாமி தலைவர் ஆவார். பெருஞ்சோற்றுப்படைத் தலைவியாக அண்மையில் மறைந்த மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத் தம்மையார் அமர்த்தப்பட்டார்.



மூவாலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார்

ஆகஸ்டு 1-இல் புறப்பட்ட அந்தப் படை, வெயிலில் காய்ந்தும் மழையில் நனைந்தும், பனியால் வாடியும், காற்ருல் துவண்டும் 577 மைல்களைக் கால்நடையாகக் கடந்தது. 234 கிராமங்களைத் தாண்டி—60 முக்கிய ஊர்களில் தங்கி—87 பொதுக்கூட்டங்களில் படைமறவர்கள் பேசி ஆயிரக்கணக்கான மக்களுக்கு இந்தியின் கேடுபற்றி விளக்கி—செப்டம்பர் 11-இல் சென்னை வந்தடைந்தது. பெரும் படைக்கும் அதன் தலைவர்களுக்கும் மறைமலை அடிகளார் தலைமையில் சென்னை நகரம் என்றும் கண்டிராத வரவேற்பு அளித்தது. இந்த வரவேற்புக் கூட்டத்தில் தான், 'திராவிட நாடு திராவிடருக்கே' எனும் நமது தாரகமந்திரத்திற்குத் தோற்றுவாயான 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற சங்கநாதம் முதலில் முழங்கிற்று.

அப்போது தமிழர்க்குக் கேடையமாய்—தமிழ்நாட்டின் துன்ப துயரங்களை உலகுக்குணர்த்தும் ஒரே தின இதழாய் விளங்கி வந்தது 'விடுதலை' இதழ் ஆகும். அறிஞர் அண்ணு அவர்கள் சிறைமீண்டு வந்ததும் 'விடுதலை' ஆசிரியராகப் பொறுப்பேற்ருர். அறிஞர் அண்ணுவின் பேனுமுனை 'விடுதலை' மூலம் ஆட்சியாளரை நாள்தோறும் கூர்வாளாகக் குத்திக் கிழித்துக் கொண்டிருக்கிறது. 'விடுதலை'ச் சங்கு தன் நாதத்தைக் கிளப்பிக் கொண்டே இருந்தது. இந்திப் போர் முடியுமட்டும் அண்ணு அவர்களின் போர்ப்பரணி தமிழர்களை பழங்காலத் தமிழர்கள் வீரத்திற்கேற்ப பணியாற்றத் தூண்டி வந்தது.

'விடுதலை'யில் அண்ணு அவர்களின் எழுத்துக்கள் மக்களைத் தட்டி எழுப்பி நாள்தோறும் போராட்ட முனைக்கு இழுத்துக் கொண்டு வந்தனவென்ருல், சட்டமன்றத்தில் சர். ஏ. டி. பன்னீர்செல்வம் தனது கம்பீரக் குரலின் ஆவேசப் பேச்சுக்களால் ஆட்சியாளரை அவ்வப்போது திணற அடித்துக்கொண்டிருந்தார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் புதுப்புதுப் பாட்டுக்கள் போராட்டச் சூழ்நிலைக்கு மேலும் மெருகேற்றின.

அண்ணு அவர்கள் சிறைப்பட்டதை அடுத்து போராட்ட முனையில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சி தாய்மார்கள் கூட்டமும் இந்தி எதிர்ப்புப் போரில் கலந்துகொண்டு சிறை செல்லத் துணிந்ததுதான்.

13—11—38-இல் சென்னை ஒற்றவாடைக் கொட்டகையில் நடைபெற்ற தாய்மார்கள் மாநாடு, பெரும் புரட்சியையே இந்த நாட்டு அரசியல் துறையில் உண்டுபண்ணிவிட்டது. அந்த மாநாட்டுக்குத் தலைவி மறைமலை அடிகளாரின் மகள் திருமதி. நீலாம்பிகை அம்மை

(19-ம் பக்கம் பார்க்க)

அருந் தமிழும் ஆங்கிலமும் போதும்!

நாவலர் நெடுஞ்செழியன்

"இந்தியை பேசுவோர் 15 கோடி என்றும், அவர்கள் இந்திய மக்கட் தொகையில் 42 சதவிகிதத்தினரென்றும், மத்திய அரசினரால் புள்ளி விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த 15 கோடி பேரும் இந்தி பேசுபவர்களா என்ருல் இல்லை. இந்தி—இந்துஸ்தானி—உருது—பஞ்சாபி— 4 மொழிகளையும் சேர்த்துப் பேசுவோர் எண்ணிக்கையே 15 கோடி பேர். உருதும் இந்தியும் ஒன்ரு? ஒன்று என்ருல் பாக்கிஸ்தான் ஏற்படுவானேன்? இந்தியும் பஞ்சாபியும் ஒன்ரு? ஒன்று என்ருல் தாராசிங் பஞ்சாபி சுபா கேட்பானேன்? இந்தியும்—இந்துஸ்தானியும் ஒன்ரு? இந்துஸ்தானியில் உருதுச் சொற்கள் அதிகமிருக்கின்றன. இந்துஸ்தானி இந்தி பக்கம் சேருமா? உருது பக்கம் சேருமா என்ருல், உருது பக்கம்தான் சேரும். அப்படியிருக்கையில் 15 கோடி பேர் எப்படி இந்தி பேசுவோராவார்கள். அந்த 15 கோடி பேரும் பேசும் 81 மொழிகளையும் பேசுகிருர்கள்; இதுதான் இப்பெரும்பான்மை மக்கள்; பேசும் 42 சதவிகித மொழியின் லட்சணமா?"

மாணவர்களுக்கிடையே நடைபெறும் தேர்தல்களில், அவர்கள் போட்டி போடுகிற காலத்தில் போட்டி உணர்ச்சி இருக்கவேண்டுமே தவிர, பொருமை உணர்ச்சி ஏற்படக்கூடாது. போட்டி தேவை. ஆனுல் பொருமை உணர்ச்சி இல்லாமல், சனநாயக ரீதியில் மாணவர்கள் செயல்பட வேண்டிய உண்ர்வைப் பெற வேண்டும்.

மாணவர்கள் நடத்துகின்ற தேர்தல்களைப் பார்த்து அரசியல் கட்சிகள் தேர்தலை நடத்த வேண்டுமேயன்றி, அரசியல் கட்சிகளைப் பார்த்து மாணவர்கள் தேர்தலை நடத்தக்கூடாது.

சில கல்லூரிகளில் நடைபெறுகின்ற மாணவர் தேர்தல் அரசியல் கட்சிக்காரர்கள் நடத்தும் தேர்தலைப் போல் பணம் செலவழித்தும் வேறு சில முறைகளை கையாண்டும் நடத்தப்படுகிறது. இது தவருனமுறையாகும். மாணவர்களால் கல்லூரிகள் நடத்தும் தேர்தல், நாங்கள் நடத்துகின்ற தேர்தலுக்கு வழிகாட்டியாக - சனநாயகப் பண்பாட்டோடு இருக்க வேண்டும்.

நாடு எதிர்காலத்திலே சிறந்த சனநாயகத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அதற்கேற்ற நிலைக்களன்கள் இப்படிப் பட்ட கல்லூரிகளிலே தான் ஏற்பட வேண்டும்.

தமிழை வளர்க்க வேண்டிய பொறுப்பு, இத்தகைய மன்றத்தினர்களிடம்மட்டுமல்லாது, தமிழ் அறிஞர்கள்-புலவர்கள் - பேராசிரியர்கள் அனைவரும் தமிழ் ஆர்வத்தைப் பெருக்க முன் வர வேண்டும்.

இந்த நாட்டில், தாய்மொழி தமிழிலேயே எல்லா பணிகளும் நடைபெற வேண்டுமென்ற பொறுப்பு - ஆர்வம் - கடமை எழுச்சி-உணர்ச்சி ஆகியவற்றை நெசவாளர் தோழர்களிடமிருந்தோ-கைவண்டி இழுப்போருடமிருந்தோ - எதிர்பார்க்க முடியாது. மாணவர் சமுதாயத்தினிடம்தான் நாடு எதிர்பார்க்கிறது.

தமிழில் புது புதுச் சொற்களை, கட்டை உடைப்பவர்களோ மூட்டை சுமப்பவர்களோ கையாள்வார்கள் என்று எதிர்க்க முடியாது. மாணவர் சமுதாயம் தான் புதுச்சொற்களை நாட்டிற்கு அறிமுகப்படுத்த வேண்டிய பொறுப்பிலிருப்பவர்களாவார்கள்.

தமிழில் எல்லா பாடத்தையும் சொல்லித்தர முடியும் என்ற ஊக்கத்தை திறத்தை—மாணவர்கள் உண்டுபண்ண வேண்டும், அந்த நிறைவு-ஆர்வம் திறன்-மாணவர்களிடம் தான் உண்டு.

ஆட்சிபீடத்திலே இருக்கின்ற அதிகாரிகளிடம் இதை எதிர்பார்க்க முடியாது.

தமிழ் ஆட்சிமொழி என்று ஏற்பட்டு சில பல ஆண்டுகளாகிவிட்டது. தமிழில் கடிதம் எழுதினுல் தமிழில் பதிலும் ஆங்கிலத்தில் எழுதினுல் ஆங்கிலத்தில் பதிலும் எழுதும் நிலை ஏற்பட்டிருக்கிறிது.

பள்ளிக்கூடங்களிலே எடுத்த எடுப்பிலேயே டப்பா, டமார், டங்கா என்று கற்றுக்கொடுக்கப்படும் பாடத்தைப் படித்துவிட்டு வந்தவர்கள் இன்று மாவட்ட ஆட்சியாளராகவும், கல்வி அதிகாரிகளாகவும் இருக்கிருர்கள். இப்படிபட்டவர்களிடம், தமிழை ஆட்சிமொழியாக்கிவிட்டு, அவர்களால் புதுத் தமிழ்சொற்களை உருவாக்கித் தரமுடியும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? அவர்கள் படித்ததே டப்பா, டமார், டங்கா தானே!

ஒரு குறிப்பிட்ட பகுதியிலே உட்கார்ந்திருப்பவர்கள் தமிழ் படித்தவர்களாக இருந்தால் தான் தமிழ் மணம் கமழும். ஒரு துறையில் ஒரு அதிகாரியாவது தமிழ் படித்தவராக இருந்தால் தான், அவரின் கீழ் இயங்கும் துறை; ஓரளவாவது தமிழ் மணம் பரப்பும் துறையாக இருக்கும், கல்லூரிகளிலே தமிழ் மணம் பரப்புபவர்களால், எதிர்காலம் நல்ல தமிழ் மணம் கமழும்,

"தெருவெல்லாம் தமிழ் மணம் செழிக்கச் செய்வீர்" பாரதி கூறினுரென்ருல், தமிழ் படித்த மாணவர்களோ, அல்லது தமிழறிந்த ஆசிரியர்களோ, சிற்றுண்டி விடுதி வைப்பவராயிருந்தால் அவருக்குப் பயன்படும் வார்த்தைகளை வேறு அங்காடி வைப்பவர்களாயிருந்தால் அவர்களுக்குப் பயன்படும் வார்த்தைகளை-ஒரு பட்டியலாகத் தயாரித்து வழங்க வேண்டும். அப்போது தான் தெருவெல்லாம் தமிழ் மணம் கமழும்.

நான் ஒரு ஊரிலே பார்த்தேன். ரெடிமேட் ஜ்வல்லரி ஷாப் என்று ஒரு கடைக்குப் பெயர் வைக்கப்பட்டிருந்தது. அதை தமிழில் மாற்ற நினைத்த தோழர்கள் "ஆயத்த அணிகலன் அங்காடி" என்று உருவாக்கினர். இதை யார் உருவாக்கியது என்று பார்த்தால், தமிழ் மேதை ,கா. சுப்பிரமணியப் பிள்ளையின் மொழி பெயர்ப்பு என்று தெரிந்தது. மொழிபெயர்ப்பிலே கூட எதுகை மோனை தவழ்கிறது.

10, 20 ஆண்டுகட்கு முன்பு ரேடியோ என்று கூறினுர்கள். இப்போது வானொலி வானொலித் திடல், என்று கூறும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

15 ஆண்டுகட்கு முன்பு விவாக சுப முகூர்த்தம் என்றிருந்த நிலைமாறி இன்று, திருமணம், மண மடல் என்று அழைக்கப்படுகிறது. 10, 15 ஆண்டுகட்கு முன்பு எக்ஸ்கர்ஷன் என்ற வார்த்தைக்கு தமிழ் என்ன என்று கண்டுபிடிக்க முடியாத நிலை இருந்தது, தற்போது அது சுற்றுலாவாகக் காட்சியளிக்கிறது. பி. டபிள்யு. டி. என்ற துறைக்கு பொதுப் பணித்துறை என்று தமிழ்ப் பெயர் இடப்பட்டிருக்கிறது. இப்படி புதுப்புது சொற்களை தமிழில் கையாள்வதால்தான் தமிழ் மணம் கமழும்; இதை கையாள்பவர்கள் மாணவர் சமுதாயமாகத் திகழ வேண்டும்'

க்ஷேமம் க்ஷேமத்திற்கு பதில் என்று அஞ்சல் எழுதியவர்களெல்லாம் இன்று நலம் நலமறிய அவா என்று எழுதுகிருர்கள். செந்தமிழும் நாப்பழக்கமும் பழக பழகத் தான் நல்ல தமிழ் மணம் கமழும்.

இலக்கியங்களிலும்-கல்வெட்டுகளிலும் - செப்பேடுகளிலுமிருந்து நல்ல தமிழ் சொற்களை உருவாக்கும் திறம் நமக்கு வேண்டும்.

ஒலிபெருக்கி என்ற சொல் எந்த இலக்கியத்திலும்—செப்பேட்டிலும்—கல்வெட்டிலும் இல்லாத சொல்தமிழிலே வேர்ச் சொற்கள் அதிகமுண்டு. அதிலிருந்து புதுச் சொற்களை உருவாக்கி, காரண காரியத்கேற்ப

காரணப் பெயர்ச் சொல்லாகவும் பல சொற்களை உருவாக்கலாம்.

ஒலிபெருக்கி என்ற இந்தக் கருவி ஒலியை இழுத்து பெருத்கி வழங்குவதால் ஒலிபெருக்கி என்ற புதுச்சொல்லைக் கையாண்டோம்.

நமது முதல் பணி இருக்கும் சொற்களைக் கையாள்வது — இரண்டாவது பணி, புதுச் சொற்களைக் கண்டுபிடிப்பது மூன்றாவது பணி பிற மொழிகளால் இருக்கும் சொற்களை அப்படியே ஏற்பது.

பென்சிலின் என்று எந்த இலக்கியத்திலும் — செப்பேட்டிலும்—கல்வெட்டிலும் இல்லை. அதை தமிழ் ஒலிக் குறிப்புக்கேற்ப பென்சிலின் என்றே வழங்கலாம்.

தமிழை, ஆங்கிலேயன் அவனது மொழி ஒலிக் குறிப்புக்கேற்பவே, 'டெமிள்' என்றான். தமிழ் என்று கூற ஆசைப்பட்டான். முடியாததால் மாற்றிக் கொண்டான். தூத்துக்குடியை டூட்டிக் கொரின் என்றான். தரங்கம்பாடியை டிராங்கோபார் என்றான். திரிகோண மலையை டிரிகோன் மல்லி என்றான்' மட்டக்களப்பை மட்டக்கோளா என்றான்.

இதை யார் செய்வது? இதற்கேற்ற ஊக்கமும் ஆக்கமும் உடையவர்கள் மாணவர்கள் தான்.

கல்வெட்டுகளில் அழகான புதுப்புதுச் சொற்களை பயன்படுத்தி யிருக்கிறார்கள்' நிலத்தை இருவர் விற்று வாங்கும் சம்பவத்தை, காஞ்சிபுரம் வைகுண்ட பெருமாள் கோயிலுள்ள கல்வெட்டு அறிவிக்கிறது.

சொற்களைப் பயன்படுத்தும் வகை நோக்கிப் பயன்படுத்த வேண்டும். சொற்களை எடுத்துக் கையாளும் பொறுப்பு மாணவர்களிடம்தான் உள்ளது.

தமிழால் முடியாது என்று யாராவது கூறுவார்களேயானால், முடியும் என்று கூற மாணவர்கள் முன்வர வேண்டும். இந்தச் செயல் நாளை காலையே நடைபெற்று முடிவதல்ல.

இந்த தலைமுறையினர் தமிழில் 100-க்கு 80 சதவிகிதப் புதுச் சொற்களைக் கண்டு பிடித்து தந்து விட்டான், நமது பேரப்பிள்ளைகள் 100க்கு 85 சதவிகிதப் புதுச் சொற்களை ஆக்குவிப்பார்கள். பிறகு நமது கொள்ளுப் பேரப்பிள்ளைகள் 100-க்கு 95 சதவிகிதப் புதுச் சொற்களைக் கண்டு பிடித்துத் தருவார்கள்.

தமிழை நீங்கள் எந்த இடத்திலே கண்டுபிடித்து விட்டு விடுகிறீர்களோ, அந்த இடத்திலே இருந்து வருங்காலம் ஆரம்பிக்கும். இது அரசியல் பிரச்சினை. நாம் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை அல்ல என்று இருக்கக்கூடாது. அரசியல்காரர்களாலும் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினைதான். ஆனால், அவர்கள் மட்டுமே கவனிக்கப்பட வேண்டியது மட்டுமல்ல. பேராசிரியர்கள் — மாணவர்கள் — தமிழறிஞர்களும் கவனிக்கப்படவேண்டிய பிரச்சினையாகும்.

நமது மனைவியுடன் மகிழ்ச்சியோடு அளவளாவ தமிழ் போதுமானது—குழந்தையோடு கொஞ்சிப் பேசிட தமிழ் போதுமானது- உற்றார் உறவினரோடு உரையாடிட தமிழ் போதுமானது— கருத்துப் பரிமாற திருமணத்தை நடத்த — கடைக்குப் போய் சாமான்கள் வாங்கிவிர—வரி வசூலிக்க—வாங்க — ஊராட்சி மன்றத்தை நடத்த—ஊர் அலுவலை கவனிக்க—நகராட்சி மன்றத்தை நடத்த—பொதுமக்களிடம் அரசியல் கருத்தைப் பரப்ப—சட்ட மன்றத்தை நடத்த — நாமும் தமிழை இப்படிப் பரப்ப இப்போதிருக்கும் தமிழே போதுமானது. இது பொருளாதாரம்—வரலாறு—அறிவியல்—இவைகளை நடத்த தமிழ் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக இடம் பெற்று வருகிறது. இதை வளர்ச்சி பெற வைக்க தமிழில் புதுச்சொற்கள் மிகமிகத் தேவைப்படுகிறது. இவ்வளவிற்கும் நமது தாய்மொழி—தமிழ் பயன்பட்டுதான் வருகிறது. ஆனால், போதுமா என்றால் போதாது.

அகில — உலக அரசியல் தொடர்பைப் பெற—அறிவியல் வளர்ச்சிகளை அறிய — கென்னடியுடன் பேச—குருசேவுடன் உரையாட—பண்டார நாயகாவுடன் வாதிட — யூதாண்டுடன் தொடர்புகொள்ள—மாசேதுங்குடன் பிரச்சினைகளை அலச— தமிழ் பயன்படாது.

20 ஆண்டு காலத்தில், இந்த தலைமுறை மாணவர்களுக்கு ஊக்கமும்—ஆக்கமும் இருந்தால் தமிழால் முடியும்.

நம்மை வாழ வைப்பது தமிழ் மான உணர்ச்சியைத் தர பற்று பாசத்தை வழங்க மூன்றரை கோடி மக்களை ஆட்கொண்ட மொழி தமிழ்.

நானாகப் பார்த்து தமிழைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவில்லை. தமிழ் பார்த்து என்னை மகனாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டது.

நானே லால்பகதூர் சாஸ்திரி வீட்டிற்குப் பக்கத்து வீட்டிலிருந்தால் இந்தி என்னை ஏற்றுக் கொண்டிருக்கும்; குருசேவ் வீட்டிற்கு பக்கத்து வீட்டிலிருப்பேனேயானால், ரஷ்யமொழி என்னை ஆட்கொண்டிருக்கும். தமிழகத்திலே பிறந்ததால் தமிழ் என்னை ஆட்கொண்டுவிட்டது.

தமிழை, எழுச்சிபெறவைக்க உயர்த்த—அழகுபடுத்த — பெருமைப்படுத்த—புகழ்விக்க — நான் கடமைப்பட்டவன்.

ஆனால். நான் ஆட்கொள்ள வேண்டிய மொழி எந்த மொழி?

தமிழ் அதனால் பெருமைபெற, நேரத்தையும் — உழைப்பையும்- சிந்தனையும் செலவுசெய்து—ஆட்கொள்ளவேண்டியது எந்தமொழி மொழிக்கு ஆட்கொள்ள உரிமை தேவையில்லை. ஆனால், ஆட்கொள்ள வேண்டிய மொழிக்கு உரிமை உண்டு.

நம்மோடு தொடர்புகொள்ள எந்த நாட்டோடும் நாம் தொடர்பு கொள்ள—எந்த நாட்டு இலக்கியங்களை அறிய—அறிவியலை உணர-சமத்கிருத சாகுந்தலமானாலும் சரி — திருக்குறளை அறிய வேண்டுமா-அதை போப் மொழி பெயர்த்துள்ளார்-கே. எம். டால சுப்பிரமணியமும் மொழிபெயர்த்துள்ளார்—அலெக்சாந்தர் டுமாஸ் நாவலைப் படிக்க — வால்டேர் புரட்சிக் கருத்துக்களை அறிய- புஷ்கினைப் புரிந்துகொள்ள-துர்காவ் டால்ஸ்டாய் இலக்கியங்களைத் தெரிந்துகொள்ள கன்பூசியஸ் தத்துவத்தின் கருவூலத்தை உணர-ஹோமா - தாந்தே - காவியங்களைப் படிக்க - உலகத்திலே உள்ள அத்தனை மொழிகளின் அறிவை ஒரு மொழியாலே அறிய—ஆங்கிலம்தான் தகுதி பெற்ற மொழியாகும். பிடிப்பதும் பிடிக்கிறோம் புளியங்கொம்பாக பிடிக்க நினைக்கிறோம்.

தமிழ் — ஆங்கிலம், இந்த இரண்டு மொழி தரும் அறிவை வேறு எந்த மொழியால் தர இயலும்? இந்த மொழிகள் தராத அறிவை இந்தியால் மட்டும் எப்படித் தந்துவிட முடியும்?

ஆங்கிலத்தைப் பார்த்து, ஆங்கிலமே, நீ என் தாய்மொழியாக இரு; உன்னைத் தாய்மொழியாக நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று, தாய்மொழி இடத்திலே ஆங்கிலத்தை வைத்தால் அது அவமானம்-தாய்மொழிக்குப் புரியும் துரோகமாகும். மூன்றரை கோடி மக்களுககுரிய தேசிய எழுச்சியை-மான உணர்வை- நாட்டுப் பற்றைத் தர தமிழ் இருக்கிறது.

சஞ்சீவிரெட்டிக்கு தெலுங்கு எப்படியோ-சங்கருக்கு மலையாளம் எப்படியோ-மொரார்ஜிக்கு குஜராத் மொழி எப்படியோ- அப்படி நமக்குத் தமிழ் இருக்கிறது.

பண்டித நேருவுக்குப் பரம்பரை மொழி காஷ்மீரி, வீட்டு மொழி உருது இருக்கிறது. பல பேர் பண்டித நேருவுக்கு இந்திதான் வீட்டுமொழி என்று கருதியிருக்கிறார்கள். இல்லை, அவருக்கு உருதுமொழிதான் வீட்டு மொழி.

நரிக்குறவனுக்குக் கூட ஒரு மொழியிருக்கிறது. அவர்கள் தாய்மொழி உணர்ச்சிகொள்ள, ஏன் இதைக் கூறுகிறேன் என்றால், தமிழ் என்னுடைய தாய் மொழி என்பதுபோல் உலக அறிவியலை அறிய ஆங்கிலம்தான் என்பதை வலியுறுத்தவேதான்.

சிலர் "ஆங்கிலம் அன்னிய மொழி, எனவே கூடாது" என்கிறார்கள். நமக்கென்று ஒரு மொழி வேண்டாமா" என்கிறார்கள். நமக்கென்று எந்த மொழியில்லை ?

இந்தியாவிலே உள்ள 44 கோடி மக்களுக்கு 723 மொழிகள் உள்ளன. அதில் 544 இன மொழிகள்; அந்த மொழிகளிலே 17 'லாங்குவேஜ்' என்ற தலைப்பில் தேர்வு செய்யப்பட்டன. 179 மொழிகள், அவற்றில் அரசியல் மொழிகளாக்கி பொறுக்கி எடுக்கப்பட்ட மொழிகள் 14 தான். 44 கோடி மக்களுக்கும் அவரவர்களுக்கு ஒரு மொழி உள்ளது என்பதைக் காட்டவில்லையா இது ?

குழந்தை இல்லை என்றால் தத்து எடுக்கவேண்டும். நமக்கு அழகான குழந்தை இருக்கிறது. கன்னம் சுருக்கம் விழாமல்-அழகோடும் பொலிவோடும் காலிலே சிலம்பு ஒலிக்க, இடையிலே மேகலை துன்ன-கழுத்திலே 1330 அருங்குறள் மாணிக்கங்கள் தொங்கக் காதிலே குண்டலமாட நெற்றியிலே சிந்தாமணியிருக்க- உடலிலே-தேவாரம் திருவாசகம் அகம்-புறம்-பரி ,பாடல்கள் தவழ இத்தகைய அழகுக் குழந்தை நம்மிடமிருக்க, 'கியோபோல்தா' என்ற இந்திக் குழந்தையா? இது தேவையா?

இந்திக்கு இரண்டே இரண்டு வளர்ச்சி பெற்ற இலக்கியங்கள் தான் உள்ளன.

ஒன்று துளசிதாஸ் ராமாயணம் மற்றொன்று ஆல் இண்டியா ரெயில்வே கெய்டு. இந்த இரண்டும்தான் இரு பெரும் இலக்கியங்களாகத் திரும்பத் திரும்பத் திகழ்கின்றன.

துளசிதாஸ் ராமாயணம் என்ன இந்தியின் சொந்த இலக்கியமா? மொழி பெயர்ப்பு ஆயிற்றே. வால்மீகியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. மற்றொரு பெரிய இலக்கியம் ரயில்வே கைடு. எனவே இதற்கான காரணங்களை மாணவர் சமுதாயம்தான் ஆராய வேண்டும். மற்றவர்கள் இந்

(18-ம் பக்கம் பார்க்க)

மக்கள் மனதைக் கோயிலாகக் கொண்ட மக்கள் திலகம்
புரட்சி நடிகர்

"பத்தாண்டுகளுக்கு முன் எம்ஜியார்"

அண்ணன் எம்ஜியார் வண்ணப்பட முகப்பும்
பத்தாண்டுகளுக்கு முன் நடித்தபடங்களின் படங்கள் சிலவும்

விலை. காசு 0—75 (தபாற் செலவு தனி)

விற்பனையாளர்களுக்கு தக்க கழிவு உண்டு.

விற்பனை உரிமை:

அண்ணா பதிப்பகம்
கடம்பர்கோயில்
குளித்தலை (திருச்சி)

ஊரார் உரையாடல்

-ஒற்றன்

புது காங்கிரஸ் : இந்தி எதிர்ப்பு வருவது, நமக்குக் கொண்டாட்டமப்பா, தெரியுமா ?

பழைய காங்கிரஸ் : கொண்டாட்டமா? என்ன பைத்யக்காரத்தனமாகப் பேசுகிறாய். தி. மு. கழகத்தார்கள் சிறை செல்லப் போகிறார்கள்—தமிழ் காத்திட, இந்தி ஒழித்திட சிறை செல்பவர்களை நாடு பாராட்டுமே! கழகம் வளருமே! செல்வாக்கு பெருகுமே! புதிய வலிவு வருமே !!

புது : தப்புக்கணக்கு, ஐயா! தப்பான கணக்கு. ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்களைக் கூட்டிவைத்து, காங்கிரஸ் ஆட்சியைக் கண்டித்துப் பேசி வருகிறார்களே கழகத்து ஆசாமிகள், அந்தத் தொல்லை இருக்காதல்லவா, அதுகள் ஜெயிலிலே போய் அடைபட்டுப் போய்விட்டால். கழகத்துப் பேச்சை ஒவ்வொரு நாளும் கேட்டுக்கேட்டுத்தானே, மக்கள் மனது கெட்டு விடுகிறது; காங்கிரசுக்கு எதிர்ப்பு வருகிறது. இந்தி மீது உள்ள கோபத்தாலே கழகத்துக்காரர்கள், எதிர்ப்பு நடத்தி ஜெயிலுக்குப் போய்விட்டால், நாம் நிம்மதியாக இருக்கலாமே! காங்கிரசு ஆட்சியைக் குறைகூறி, எதிர்ப்புக்கிளப்ப ஆள் ஏது!!

பழைய : அல்ப ஆசை என்பார்களே அது இதுதானப்பா. ஜெயிலுக்குப் போனவன் போக, மிச்சம் இருக்கிறவன், சும்மா விட்டு வைப்பானா, நம்ம ஆட்சியை. தாக்குத்தாக்கு என்று தாக்கியபடிதான் இருப்பான், தெரிந்துகொள். அதிலும், ஜெயிலிலே தலைவர்களைப் போட்டுவிட்டார்களே என்ற ஆவேசத்தோடு பேசுவானுக; முன்பு இருந்ததைவிட வேகமாக; விறுவிறுப்பாகப் பிரசாரம் நடக்கும்.

புது : போப்பா! அண்ணாத்துரையைப் போட்டு மூடிடப்போறாங்க' கருணாநிதியும் கூண்டுக்குள்ளே! நெடுஞ்செழியன், நடராசன், மதியழகன், மனோகரன், இன்னும் இருக்கற முன்னணித் தலைவர்களை எல்லாம் நட! நட! என்று அழைத்துக்கொண்டு போய்த் தள்ளிவிடப்போறாங்க, ஜெயிலிலே—இதுகள் போய்விட்டா, பிறகு பேச, யார் ?

பழைய ; இவ்வளவுதானா, உனக்குத் தெரிந்த தகவல்! பைத்யமே, பைத்யமே! நீ, கழகப்பேச்சாளர் என்றால், ஒரு அரைடஜன், ஒரு டஜன் தலைவர்களோடு தீர்ந்தது என்று எண்ணிக்கொண்டாயா! பேச்சாளர் பட்டியல் கழகத்திலே, ரொம்பரொம்பப் பெரிசப்பா. இப்போது அதிகமா யார்யார் பிரச்சாரம் செய்கிறாங்களோ, அவங்களோடு பட்டியல் முடிந்துவிட்டதா எண்ணிக்கொள்ளாதே. இந்தத் தலைவர்கள் பிரச்சாரம் செய்கிறதிலே மும்முரமாக இருப்பதாலே, மற்ற பேச்சாளர்கள், அதிகமாகப் போறதில்லே பிரசாரத்துக்கு. அண்ணாதுரையையும் அதுபோன்றவங்களையும் ஜெயிலிலே போட்டாப்போதும், மளமளன்னு கிளம்பிவிடும், புதுபுதுப் பேச்சாளர்களோட படைவரிசை! திருச்செங்கோடு தேர்தலின்போது பார்க்கலியா? அண்ணாதுரை, அன்பழகன், கருணாநிதி, நாவலரு, இப்படிப்பட்டவங்க உள்ளே இருந்தாங்க; மற்றவர்களோட வேகத்தையும் வேலையையும் பார்த்தாயேல்லோ! அதனாலே, கழகத்திலே இருக்கிற முக்கியமானவங்கன்னு நாம; யாராரை எண்ணிக்கொண்டிருக்கறமோ, அவங்க ஜெயிலுக்குப் போய்விடுவதாலே கழகப் பிரசாரம், ஓய்ந்து போய்விடும், சாய்ந்து போய்விடும்னு மட்டும் தப்புக் கணக்குப் போடாதே! கழகத்து ஆசாமிக ஜெயிலுக்குப் போய் விட்டா, காங்கிரஸ் பாடு கொண்டாட்டம்னு எண்ணி ஏமாறாதே. மக்களோட கோபமும் வெறுப்பும் அதிகமாகும் காங்கிரசின் பேரிலே. அப்படிப்பட்ட விறுவிறுப்பான பிரசாரத்தை, பிடிபட்டவங்க போக மற்றவங்க செய்வானுங்க......

o

முழக்கம் கேட்கட்டும்!

மூடிவிட்டோம் சிறையில்தள்ளி
கழக முன்னணிக்காரர்களை !
பேசிட ஆட்கள் இல்லை!
பிரசாரம் அறவே இல்லை !
என்று
களிநடமிட
காங்கிரஸ் ஆட்சி எண்ணுகிறது-
கழகத்தோரே !
கழகம் காத்திடும் நாட்டினரே !
சிறைப்பட்டவர்கள் போக
மற்றவர்களைக் கொண்டு
ஒவ்வொருநாளும் பட்டிதொட்டிவிடாமல்
கழகக் கூட்டங்கள் நடத்திடவேண்டும் !
உள்ளே பூட்டிவைத்தீர்கள்
எமது தோழர்களை, ஆனால்
இதோ, வெளியே, ஒவ்வொரு நாளும்
முழக்கம்! விளக்கம்!
கேட்டிடுவீர்! கேட்டிடுவீர்!
என்று எடுத்துக்காட்டிட முனைவீர்!
கழகத்தோரே!

முகப்பு :

தமிழ்ப் பகையினை வென்றிடுவோம்!

——(ஃ)——

இந்திக்கு இந்நாட்டில் ஆதிக்கமாம்—அது
இங்குவந் தென்னதாஞ் சாதிக்குமாம் ?
வந்தவர் மொழிமுடி சூடுவதா ;—நம்
வண்டமிழ் அன்னைதாம் வாடுவதா !

என்றும்போ லன்னையைக் காத்திடவே—தம்
இன்னுயிர் தம்மையும் ஈந்திடவே ;
மன்னும் புகழண்ணன் நிற்றலைக்காண் !—உடன்
மாவீரர் தம்பியுந் துடித்தலைக்காண் !

புன்னகை முகத்துட னின்றவர்தாம்—இந்திப்
புன்மையை முன்னரே வென்றவர்தாம் ;
இன்றுந் தமிழ்காக்க வந்துவிட்டார் ;—தம்
இல்லத்தார்க் கும்விடை தந்துவிட்டார் !

கண்ணியத் தோடேநாம் போரிடுவோம்—தமிழ்க்
காத்திடப் பிணங்களாய் மாறிடுவோம் !
திண்ணிய உள்ளத்தைக் காட்டிடுவோம்—நந்
தேன்றமிழ்ப் புகழினை நாட்டிடுவோம் !

சட்டங்கள் ஆயிரம் வந்திடுமாம் ;—அது
சந்தித்துத் துன்பங்கள் தந்திடுமாம் !
தீட்டிய வாட்களாய்ச் சென்றிடுவோம் ;—நம்
தீந்தமிழ்ப் பகையினை வென்றிடுவோம் !

—கவிஞர். மயிலை-முத்தெழிலன்

திருச்சியில் எழுச்சி

"இந்தியத் துணைக்கண்டத்துப் பிரதமர் பண்டித நேரு அவர்கள், ஆட்சிமொழியைப் பற்றி 1960ல் தி. மு. கழகத்தின் மூலம் தென்னக மக்களுக்கு அளித்திருந்த வாக்குறுதியை மீறியதற்காக, இம்மாநாடு நேருவையும் அவரது அரசியலையும் கண்டிக்கிறது.

1963 ஏப்ரலில் டில்லி பாராளுமன்றத்தில் ஆட்சி மொழியைப் பற்றி சட்டம் நிறைவேற்றி இந்தியை ஆட்சிமொழியாகத் திணிப்பது, மொழி ஏகாதிபத்தியம், அரசியல் யதேச்சாதிகாரம் என்பதால் அதை எதிர்த்து நிற்பது ஜனநாயக மொழிகளின் தலையாய கடமை என்பதை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

திணிக்கப்படும் இந்தியைத் தடுக்கும் நியாயமான முயற்சிகளுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்பு நல்குவதோடு, தன்னுடைய ஒத்துழைப்பினையும் வழங்குவதென இம்மாநாடு தீர்மானிக்கிறது"

—என்ற மேற்கண்ட தீர்மானம் சென்ற கிழமை 5, 6 தேதிகளில் திருச்சி நகரில் கூடிய, திராவிட மாணவர் முன்னேற்றக் கழக இந்தி எதிர்ப்பு சிறப்பு மாநாட்டில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான பிரதிநிதிகளின்—தோழர்களின் கையொலிகளுக் கிடையே நிறைவேற்றப்பட்டது.

இந்தித் திணிப்பு என்பது மாணவர்களை நேரடியாகப் பாதிக்கும் பிரச்னையென்ருலும், மாணவர்கள் தங்கள் அன்புக்குரிய தலைவரின் கட்டளை வரும்வரை--களத்திலே இறங்க தாங்கள் கொண்டிருக்கும் ஆர்வத்தைக் கட்டுப் படுத்திக் — கொண்டு தங்கள் தலைவரின் தலைமையில் இயங்கும் தாய்க் கழகமான தி.மு. கழகம் நடத்தும் போராட்டத்திற்கு தார்மீக ஆதரவைத் தரும் அரசியல் நாகரிகத்தோடு, கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

இது தென்னக மாணவர்களின் தலைசிறந்த பண்பாடாகும்!

ஆனல் வடக்கே, கேவலம் வெளியே சொல்லக்கூடாத விஷயங்களுக்காகப் பெருத்த கலவரத்தை விளைவிப்பதும் அதன் விளைவாகப் பல்கலைக் கழகங்களை கால வரையின்றி மூடுவதும் அங்குள்ள மாணவர்களுக்குப் பழக்கமான செயலாகி விட்டது!

சென்ற கிழமை அலகாபாத் (பண்டிதர் நேருவின் சொந்தப் பிரதேசம்தான்) பல்கலைக் கழக மாணவர்கள் நடத்திய கீழ்த்தரமான செயல்களும், அதன் விளைவாகப் பல்கலைக் கழகம் மூடப்பட்டுள்ளதும் வடநாட்டு மாணவர்களின் பண்பாட்டை நன்கு படம் பிடித்துக் காட்டும்!

புதிய மாணவர்கள் பலரை, அறைக்கு வெளியே இழுத்து வந்து ஆடைகளைக் களைந்து, அடித்து, கீழ்த்தர வார்த்தைகளால் ஏசி வெளியாரின் உதவி கிடைக்காமல் உள்ளேயே அவர்கள் துன்புறுத்தப்பட்டனராம்.

இதன் விளைவாக எழுந்த சிக்கலில் மாணவர்கள் மிருகத்தனமான செயல்களில் ஈடுபட்டு பல்கலைக் கழகத்தை மூட வைத்து விட்டனர்.

அலகாபாத்தில் மட்டுமல்ல! காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகர் பொறியியல் கல்லூரியும், மாணவர்களின் "ரௌடியிசத்தினல்" சென்ற சனிக்கிழமை மூடப்பட்டதாகக் காஷ்மீர் முதலமைச்சர் பக்ஷிகுலாம் தெரிவித்துள்ளார். "ரௌடியிசத்தை" அடக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

சாதாரண பிரச்சினைகளுக்கெல்லாம் அமைதியிழந்து, கண்ணியக் குறைவான செயல்களில் ஈடுபடும் வடநாட்டு மாணவர்களையும், தங்களது உரிமைகள் பாதிக்கப்படும்போதுகூட அமைதியிழக்காமல் கண்ணியம் தவருமல், நாட்டுத் தலைவர்கள் காட்டும் வழி செல்லக் காத்துக் கிடக்கும் தென்னக மாணவர்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நிலைமை நன்கு தெளிவாகும்!

என்.வி.என்.சோமு.பி.ஏ.

கம்யூனல் ஜி. ஓ!
வடிகட்டும் முறை!
புதிய கல்வித் திட்டம்!

— போன்ற மாணவர்களையே நேரடியாகப் பாதிக்கும் பல பிரச்சினைகள் தென்னகத்திலேஎழுந்தபோதெல்லாம், தென்னக மாணவர்கள் அமைதி யிழக்காமல், கண்ணியம் தவருமல் ஜனநாயக முறையில் நீதி கேட்டனர்!

ஆனல் சில்லறை பிரச்சனைகளுக்கெல்லாம் சிறு பிள்ளைத்தனமான செயல்களில் வடக்குப் பகுதி மாணவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்; !

இப்போதும்கூட இந்தி பிரச்சினை தென்னகத்தில் கொழுந்து விட்டெரிகிறது. ஆனல் மாணவர்கள் அமைதியிழக்கவில்லை !

தென்னக மாணவர்கள் இன்றையதினம் அமைதி வழி செல்கிருர்களென்ருல் அதற்கு ஒரே காரணம், அவர்களது இதய ஒலியாகத் திகழும் பேரறிஞர் அண்ணு அவர்கள் தான்!

5, 6-ந் தேதிகளில் திருச்சியில் நடைபெற்ற தி.மா.மு.க. மாநாட்டில் பல மாணவர்கள், போராட்டத்தில் குதிக்க தோள் தட்டிக் கொண்டு முன்வந்தபோதும் அவர்களையெல்லாம் ஒதுங்கியிருக்கும்படி பணித்த அறிஞர் அண்ணு அவர்கள், அரசியல் நாகரிகத்தின் பேராசான் ஆவார்கள்!

திருச்சியிலே 5, 6 தேதிகளில் கூடிய மாணவர்கள் மாநாட்டில் பொங்கி வழிந்த ஆர்வத்தை எடுத்துச் சொல்ல தமிழ் மொழியில் வார்த்தைகள் இல்லை!

அழகுற அமைக்கப்பட்டிருந்த பந்தலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அமர்ந்து—கல்லூரி வகுப்பறைகளில் மாணவர்களாக அமர்ந்து பயில்வோர் — தங்களுக்கு என்ன கருத்தை எடுத்துரைக்கப் போகிருர்கள் என்ற ஆவலும், மகிழ்ச்சியும் பொங்க எதிர்பார்த்திருந்தனர்.

மாணவர்கள் கூறிய நற்கருத்துக்களைக் கேட்ட மக்கள், மகிழ்ச்சி மிகுதியால் கையொலி செய்து மாணவர்களை உற்சாகப் படுத்தினர்.

முதல் நாள்

5—10—63 சனிக்கிழமையன்று மாலை 4-மணிக்குத் துவங்கிய மாநாடு, துவக்கத்திலேயே களைகட்டிவிட்டது. மேடையிலே சுதந்தரக் கட்சித் தலைவர் ஆச்சாரியார் அவர்களும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், கழக அவைத் தலைவருமான நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும், சட்டமன்ற சுதந்திரக் கட்சித் தலைவரான சா. கணேசன், சுதந்திரக் கட்சிப் பிரமுகர் எஸ்.எஸ். மாரிசாமி ஆகியோரும், கழக முன்னணி வீரர்களான அன்பில் தர்மலிங்கம், எம். எஸ். மணி, குளித்தலை முத்துக் கிருஷ்ணன் ஆகியோரும் அமர்ந்திருந்தனர்.

அவர்களோடு மாநாட்டுத் தலைவர் உ. கணபதி எம்.ஏ. அவர்களும், திறப்பாளர் சின்னதுரை எம்.ஏ. அவர்களும், தி.மா.மு.க. பொதுச்செயலாளர் எஸ். டி. சோமசுந்தரம் பி.இ. அவர்களும் மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர்களும், மாணவப் பேச்சாளர்களும் அமர்ந்திருந்தனர்.

முதன்முதலாக மாநாட்டுச்செயலாளர்களில் ஒருவரான தோழர் க. அறிவன் அவர்கள் மாநாட்டின் குறிக்கோள்களைப்பற்றி எடுத்துரைத்து திரு. சின்னதுரை அவர்களை மாநாட்டைத் துவக்கிவைக்கும்படி கேட்டுக்கொண்டார்.

தோழர் சின்னதுரை அவர்கள் மாநாட்டைத் துவக்கிவைத்ததும் வரவேற்புக் குழுத் தலைவர் எம். எஸ். வெங்கடாசலம் எம்.ஏ.பி.எல். அவர்கள் அரியதோர் உரையாற்றி அனைவரையும் வரவேற்ருர்.

பின்னர் உ. கணபதி எம். ஏ. அவர்களைத் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்கும்படி முன்மொழிந்தார்.

அதனை வழிமொழிந்து மாணவத் தோழர்களான ஜே.எஸ். ராசு (எம்.ஏ) எஸ். வி. ராமசாமி எம். ஏ, பொன்பரப்பிகிருஷ்ணமூர்த்தி, இராமவளவன் ஆகியோர் பேசினர்.

தொடர்ந்து தோழர் அப்பர் சுந்தரம் எம்.ஏ.,பி.டி. அவர்கள் மாநாட்டுத் தலைவரின் சிறப்பியல்புகளை நகைச்சுவையுடன் எடுத்துக்காட்டி வழிமொழிந்தார்.

இறுதியாகத் தோழர் என். வி. என். சோமு பி. ஏ. அவர்கள் மாநாட்டுத் தலைவரின் சிறப்பியல்புகளையும், அவரது மாணவர் கழகப் பணிகளைப்பற்றியும், அவர் மீது ஏவப்பட்ட அடக்குமுறைகளைப் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறி வழிமொழிந்தார்.

பின்னர் மாநாட்டுத் தலைவர் உ. கணபதி எம்.ஏ. அவர்கள், தலைமையேற்று, 'இன்றைக்கு நம் முன் இருக்கின்ற சிக்கல் இந்தி வேண்டுமா, வேண்டாமா என்பதல்ல. இந்தியை 1937ல் கட்டாயமாகக் கொண்டுவந்தபோதே எதிர்த்துள்ளோம். மாணவர்களைப் பொறுத்தவரையில், இந்தித் திணிப்பை எதிர்க்கத் தயாராகி விட்டோம் என்பதை உணர்த்தவும், நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை முடிவு செய்யவுமே மாநாடு கூட்டியுள்ளோம். அதற்கேற்ற வகையில் நமது தலைவர்கள் தருகின்ற ஆலோசனையின்படி நடந்து மாணவர்கள் தங்கள் கடமையைச் செய்வார்கள்" என்று குறிப்பிட்டார்.

தலைமையுரையைத் தொடர்ந்து மாணத் தோழர்களின் சொற்பொழிவு துவங்கியது.

மாணவத் தோழர்கள் பெ. சீனிவாசன் எம். ஏ., திருநாவுக்கரசு (ஆங்கிலத்தில்) எல். கணேசன் பி. ஏ. ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த புருடோத்தமன் (தெலுங்கில்) பேசினர்.

அதனை அடுத்து தோழர் ஆலடி அருணு பி.ஏ.,பி.எல். உணர்ச்சி மிக்க சொற்பொழிவாற்றினுர்.

பின்னர் தலைவர்களது சிறப்புச் சொற்பொழிவு துவங்கியது.

முதன் முதலாக சுதந்திரக் கட்சி பிரமுகர் திரு. சா. கணேசன் அவர்கள் "இந்தியிலே துளசிதாஸ் இராமாயணம் மட்டும் இருக்கிறது என்று கூறுவதுகூட தவறு. அந்த துளசிதாஸ் இராமாயணம் வாரணுசி என்னுமிடத்தில் கம்பஇராமாயணம் வாசிக்கக் கேட்டு, அதை 'அவதி' மொழியிலே எழுதினுர்கள். இன்று அதை இந்தி இலக்-



கியமென்றால் அது பித்தலாட்டமல்லவா? இந்தி வந்தால் தமிழ் கெடும், தமிழர் வாழ்வு சிதையும், இதில் ஐயமே வேண்டாம். தாய்மொழியை இழந்த பின் நாமும் தமிழரென நாமமது சுமந்து வாழவும் வேண்டுமா?'' என்று உருக்கமாகப் பேசினார்.

பின்னர் சுதந்தரக் கட்சித் தலைவர் இராசகோபாலாச்சாரியார் அவர்கள் பேசுகையில்,

''அன்று இந்தி மொழியைக் கொண்டுவந்த நான், இன்று உங்களோடு இணைந்தது எவ்விதம் என்று கருதும் உங்களுக்கு ஓர் உதாரணத்தின் மூலம் ஒன்று கூறுவேன். மாம்பழம் நல்ல சிறந்த பழம். காயாக இருக்கும்போது மிகவும் புளிப்பாக இருக்கும். அது காயாக இருக்கும்போது எவ்வளவு புளிப்பாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு கனிந்ததும் இனிப்பாக இருக்கும். அதுபோலவேதான் நான் அன்று புளித்தேன்—இன்று நல்ல இனிப்பைத்தருகிறேன்.''

''எனவே படித்த சமுதாயமான நீங்கள் வீணான ஐயப்பாடுகளைக் கொள்ளவேண்டியதில்லை. மாணவர்களாகிய நீங்கள்செய்யவேண்டியதெல்லாம், இந்தி ஆட்சிமொழியாவதை வன்மையாக எதிர்க்கிறோம்; ஆங்கிலமே எப்போதும்போல் தொடர்ந்து இருக்கட்டும்' என்று நேருவுக்கு மகசர்கள் எழுதி உங்கள் தலைவர்கள் மூலம் அனுப்புங்கள். அப்படி நீங்கள் அனுப்பினால்—நீங்கள் அனுப்பும் அந்த உறுதிமொழி நேருவின் கரத்தைப் பலப்படுத்தும். நேருவுக்குப் பக்கபலமாக நீங்கள் நிற்பீர்கள். அப்பொழுது நேரு நம் பக்கம் இருப்பார்; இதை நான் பிரமாணம் செய்து உங்களிடம் கூறுகிறேன். நீங்கள் இந்த ஆர்வத்தைச் செயலில் காட்டத் தவறாதீர்கள்! தவறாதீர்கள்! வெற்றி உங்கள் பக்கம் தான்'' என்று குறிப்பிட்டார்.

இறுதியாக நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் வீரமுழக்கம் செய்தார்.

''மொழிப் பிரச்சினையை மாணவர்கள் மிகவும் அருமையாக—ஆணித்தரமாக—தக்க சான்றுகளுடன் எடுத்துக் கூறினார்கள். எங்களுக்குக்கூட தெரிந்திராத சில கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறினார்கள். 24 மணி நேர



மும் அரசியலிலே மூழ்கிக்கிடக்கும் எங்களுக்கு மாணவர்களாகிய நீங்கள் விஷயங்களைத் திரட்டித் தரலாம். அதேபோல் பொது மக்களுக்கும் விளக்கம் தரலாம். எதிர்கால சிற்பிகளாகிய நீங்கள் அறிஞர் அண்ணா அவர்கள் கூறியபடி தேவையானபோது அழைக்கப்படுவீர்கள்! உங்களுக்கு ஏற்ற பணியினை நீங்கள் செம்மையாக செய்து முடிக்க வேண்டும். நீங்கள் படிப்பு கெடாத வகையில் கலந்து கொள்ள வேண்டும். நீங்கள் நாட்டில் நல்லாட்சியை உருவாக்கும் நல்லவர்களாய்—வல்லவர்களாய்—நம்மவர்களாய் வளர வேண்டியவர்கள். உங்கள் விழுமிய பணிகள் இத்தகைய மாநாடுகள் மூலமும் வேறு பல வகையிலும் இந்தியின் தீமையை நாடு முழுவதும் விளக்கிடும் தன்மையிலும் அமைதல் வேண்டும்''— என்று அரியதோர் உரையாற்றினார்.

இத்துடன் மாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சிகள், முடிவுற்றன.

இரண்டாம் நாள்

6—10—63 ஞாயிறு பிற்பகல் மூன்று மணிக்கு இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் துவங்கின.

மாணவர்கள் சொற்பொழிவு தொடர்ந்து துவங்கியது.

வழக்கறிஞர் கா. வேழவேந்தன், உதயவீணன் (பி, ஏ.) கோவிந்தராசன், நெல்லை இரா. செழியன், மதுரை முத்துமாறன்,

முத்துசாமி பி. ஏ. தா. ந. டில்லிபாபு, சேலம் மதிவதனன் கபிலன், துரை, முருகன், இராமநாதன், ஆர்.பி. மாசிலாமணிபி.ஏ இளங்கோவன் பி. ஏ ச. அமுதன், பி. ஏ. திருச்சி மு. எழிலரசன், இராமநாதன் பி. ஏ. பி. எல்., மணவை தங்கவேலன், தென்னரசு, இளங்கோவன், இரா. இளவரசு எம். ஏ. புலவர் இளஞ்செழியன், புலவர் அருணா குடந்தை மதியரசன், கே. எ. ராமன், தோப்பூர் திருவேங்கடம் எம். எ, க. பெள்ளி, நாஞ்சில் மைக்கல்ராசு பி. எஸ். ஸி. உ. பில்லப்பன் எம். ஏ. ஆகியோர் அருமையான கருத்துக்களைக் கொண்டு சொற்பொழிவாற்றினர்.

பின்னர் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

தீர்மானங்களின் மீது தோழர்கள் டி. கே. பொன்னுவேலுபி ஏ. என். வி. என். சோமு பி. ஏ. மைனர் மோசசு பி.ஏ.,பி, எல். சா. அப்பர்சுந்தரம்,எம்.ஏ.,பி.டி. தீர்த்தாரப்பன் எம். எ. ராசாமணி, மாணவி ரஞ்சிதம் ஆகியோர் பேசினர்.

துவக்கத்திலே குறிப்பிட்டுள்ளபடி நேருபண்டிதர்வாக்குறுதியை மீறியதைக் கண்டித்து ஒரு தீர்மானமும், தட்சிணபாரத இந்தி பிரசாரசபா குறித்து,

'' தட்சணபாரத இந்தி பிரசாரசபா'' என்ற பெயரில் இயங்கிவரும் அமைப்பு, தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்று பாராளுமன்றத்தில் தீர்மானித்திருப்பது சட்டத்தின் துணைகொண்டு இந்தி மொழிக்குத் தனிச் சலுகை தருகின்ற வகையிலும், இந்தி மொழி ஏகாதிபத்தியத்திற்கு வலிவூட்டுகின்ற வகையிலும் அமைவதால், தென்னக மக்கள் அனைவரும் இந்த அமைப்புகளைப் புறக்கணிக்க வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

—என்ற தீர்மானமும் பலத்த கையொலிகளுக்கிடையே நிறைவேற்றப்பட்டது.

இந்தி மொழியைப் பரப்பவும், அதன் ஆதிக்கத்தை மெல்ல மெல்ல திணிக்கவும் வேலை செய்துவரும் தட்சிணபாரத இந்தி பிரச்சார சபா, சென்ற கிழமைதான் காந்தியார் பிறந்த நாளான அக்டோபர் 2ந் தேதி முதல் ஒரு வாரம் வரை இந்திப் பிரச்சார வாரமாககொண்டாடியது.

நாமும் தென்னகக் காந்தி அறிஞர் அண்ணா அவர்களது பிறந்த நாளை யொட்டி செப்டம்பர் 15 முதல் 22 வரை ஒரு வாரம் இந்தி எதிர்ப்பு வாரமாகக் கொண்டாடினோம்.

இதிலிருந்து தெளிவாகத் தெரிவது என்னவென்றால், இன்று இந்தியத் துணைக்கண்டத்தில் இருபெரும் சக்திகளுக்கிடையேதான் போராட்டம் நடைபெற்று வருகிறது என்பதுதான்.

மறைந்துவிட்ட காந்தியடிகளின் புனிதப் பெயரைப் பயன்படுத்திக்கொண்டு, பல ஜனநாயக விரோதச் செயல்களைப் புரிந்துவரும் காங்கிரஸ் கூடாரம் ஒரு பக்கம்.

மறு பக்கம், வாழ்கின்ற காந்தியும், வழிகாட்டும் ஞானியுமான அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் அணிவகுத்து நிற்கும் தென்னவர் பாசறை!

ஒன்று இந்தியைத் திணிக்கும் வெறி—மற்றொன்று இந்தியை



எதிர்க்கும் நெறி!

இதை மறைமுகமாக ஒப்புக்கொள்வதைப் போல்தான், அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவில் நாம் இந்தியை எதிர்த்தால், காந்தியார் பிறந்த நாளில் தட்சிண பாரத இந்தி பிரச்சார சபா இந்தியை ஆதரிக்கிறது!

அதனுடைய போக்கையும், அதனை ஆதரிக்கும் மத்திய சர்க்கார் போக்கையும் வன்மையாகக் கண்டித்து மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானங்களுக்குப் பிறகு தி. மா. மு. க. பொதுச் செயலாளர் எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் அரியதோர் உரையாற்றினர். மாணவர்கள் ஆற்றவேண்டிய கடமை குறித்து கட்டளையிடும்படி அண்ணா அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

பின்னர் அதனையடுத்து முஸ்லீம் லீக் தலைவர் காயிதேமில்லத் ஜனுப் முகம்மது இஸ்மாயில் சாகிப் எம்.பி. அவர்கள் பேருரையாற்றினர்.

'இந்தி எதிர்ப்பை முஸ்லிம் லீக் பாராளுமன்றத்தில் தெரிவித்து விட்டது. அதைத் தொடர்ந்து பொது மேடைகளிலும் பேசிவருகிறோம்; இன்னும் முஸ்லிம் லீக் கூட்டங்களில் முறையான முடிவுகளை எடுப்போம்.

மாணவர்களாகிய நீங்கள்—வஞ்சகத்தை அறியாத இளம் உள்ளம்கொண்ட நீங்கள்—அநீதியைக் கண்டு எவ்வாறு கொதித்தெழுகிறீர்கள் என்பதற்கு இம்மாநாடே சான்று!

உங்களது படிப்பு பாதிக்காத வகையில் நீங்கள் எடுக்கும் முடிவுகள் அமையட்டும்! உங்களுக்குக் கல்வி இன்றியமையாதது—உங்கள் பொருட்டு மட்டுமல்ல; எதிர்காலத்தை உருவாக்கும் பொருட்டும் கல்வி அவசியம்.

எனவே, நீங்கள் உலக நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்; உங்கள் ஆர்வத்தை அடக்கி முறைப்படுத்தி பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டும்.''

—என்று காயிதேமில்லத் அவர்கள் அரியதோர் உரையாற்றினர்கள்.

தலைவர் முடிவுரைக்குப் பின் இறுதியாக பலத்த ஆரவாரக் கையொலிகளுக்கிடையே அறிஞர் அண்ணா அவர்கள் பேருரையாற்றினர்கள்.

''மாணவத் தோழர்களுக்கு, ஆர்வம் ஆறுகப் பெருகவேண்டும், அது நாடு முழுவதும் பாயவேண்டும்'' என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தொடர்ந்து அண்ணா அவர்கள் பேசுகையில்,

''இரண்டு நாட்களாக நடைபெறுகின்ற இந்த மாநாடு, மிகப் பெரியதாகக் கருதப்படும் இந்தி பிரச்சினையைப்பற்றி ஆராய்வதற்காக மாணவர்களும் மற்றவர்களும் கேட்டறிந்து, பெறத்தக்க நல்ல விளக்கங்களைப் பொதுமக்கள் பெறவுமான நிலையில் அமைந்தது கண்டு நான் மகிழ்கிறேன், மாணவ நண்பர்களைப் பாராட்டுகிறேன்.

மாநாட்டிலே பேசிய நண்பர்கள், 'போராட்டத்தில் கலந்து கொள்ள வாய்ப்புத் தாருங்கள்; நாங்கள் தயாராகிவிட்டோம்' என்று ஆவேசமாகக் கூறினர்கள். அவர்களுக்கெல்லாம் எனது மனமார்ந்த நன்றி!

வீட்டிலே ஒரு ரூபாய் இருந்தால் சட்டைப் பையிலே நாலணா வைத்துக்கொண்டு, அந்த நாலணாவைச் செலவிடுபவன்தான் புத்திசாலி! வீட்டிலே நாலணா இருக்கும்போது, சட்டைப் பையிலே ஒரு ரூபாய் வைத்திருப்பவன் அரசியல்வாதியுமல்ல—அறிவாளியுமல்ல!

அதைப்போலவே, எனக்கு நீங்கள் வீட்டிலே இருக்கும் ஒரு ரூபாயாக இருக்கிறீர்கள்! நீங்கள் என் நம்பிக்கைக்கு உரியவர்கள். உங்களை நம்பித்தான் நான் இருக்கிறேன்.

அதிலும் மாணவர்களாகிய நீங்கள், கிணறு போன்றவர்கள், ஒரு கிணற்றை அகன்றதாகத் தோண்டுவதைவிட ஆழமாகத் தோண்டினுல் அது கிணற்றுக்குச் சொந்தக்காரர்களுக்கு மட்டுமின்றி பக்கத்து வீட்டாருக்கும் தண்ணீர் தந்துதவும். அதையே இன்னும் அகலப்படுத்திக் குளமாக ஆக்கினுல், அது ஊர் முழுவதும் பயன்படும். அது ஆறுகப் பெருகினுல் உலகை உய்விக்கும். அதுபோல் மாணவர்களாகிய நீங்கள் உங்கள் அமைப்பு ஆறுகப் பெருகி உலகை உய்விக்க வேண்டும்.

அத்தனை பேரும் ஒரே நாளில் சிறைக்குச் சென்றுவிட்டால் பிறகு நிலைமையை வெளியே சொல்லக் கூட ஆளில்லாமல் போய்விடும்! அது, அறுபத்து மூவர் விழாவைப் போலாகிவிடும்.

அறுபத்துமூவர் விழாவன்று, அந்த ஒருநாள் மட்டும் அறுபத்து மூன்று சாமிகளும் வெளியே பவனி வரும்! அதைப்போல் நாம் இருந்துவிடக்கூடாது!

இங்கே பேசிய 50 மாணவர்களும், பேசவாய்ப்புக் கிடைக்காத காரணத்தால் பேசாதிருந்துவிட்ட மற்ற மாணவர்களும், நாங்கள் சிறைக்குச் சென்றபின், நாட்டு மக்களிடத்தில் பட்டி தொட்டிகளில் எல்லாம் சென்று நிலைமையை விளக்கவேண்டும்.

இவைகளை நீங்கள் செய்தால், 'என்னேடு சிறைக்கு வருவதை விடச் சிறந்த முறையில் பணியாற்றிய நண்பர்கள்' என்று நான் மனமாரப் பாராட்டுவேன்.''

—என்று குறிப்பிட்ட அண்ணா அவர்கள், மாணவர்கள் யாரும் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டியதில்லை — அப்படி கலந்துகொள்ளுபவர்கள் மாணவர் கழகத்தில் இருக்கக்கூடாது என்றும் அறிவுரை வழங்கினர்கள்.

பிறகு மாநாட்டுப் பொருளாளர் திரு. எம். எஸ். ராமமூர்த்தி நன்றியுரையுடன் மாநாடு இனிது முடிவுற்றது.

மாநாட்டில் கலந்துகொண்ட அறிஞர் அண்ணா, ஆச்சாரியார், காயிதேமில்லத், நாவலர் நெடுஞ்செழியன், சா. கணேசன் ஆகியோருக்கும், மாநாட்டுத் தலைவர், திறப்பாளர், பொதுச்செயலாளர் ஆகியோருக்கும் தி. மு. க. கிளைகள், சுதந்திர கட்சிக் கிளைகள், முஸ்லிம் லீக் கிளைகள் சார்பாக கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

மாநாட்டுக் கொட்டகையில் அறிஞர் அண்ணா அவர்கள் நுழையும்போது மாணவர்கள் அனைவரும், ''அறிஞர் அண்ணா வாழ்க! இந்தி ஆதிக்கம் ஒழிக'' என்று முழங்கிய காட்சி, மெய் சிலிர்க்கச் செய்வதாகும்.

மாநாட்டு இறுதிக் கட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசி முடித்ததும் ''அண்ணா வாழ்க'' என்ற முழக்கம் வானைப் பிளந்தது.

மாநாட்டில் ஏறத்தாழ 2500 ரூபாய் மீதம் என்று அறிவிககப் படடது!

மாநாட்டில் ஏராளமான தாய்மார்களும், திருமதி பொற்செல்வி இளமுருகு, வேலம்மையார் எம். எ. ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மாநாடு சிறப்புற நடைபெற திருச்சி மாவட்ட தி.மு.க. செயலாளர் அம்பில் தர்மலிங்கம் அவர்களும் மற்ற மாவட்ட நிர்வாகிகளும் உறுதுணை புரிந்தனர்.

மாநாட்டு நிகழ்ச்சிகளில், முஸ்லீம் லீக் பிரமுகர் ஜானிபாய் எம்.எல்.சி., மதுரை மாவட்டச் செயலாளர் எஸ். முத்து, திருச்சி மாவட்ட கழகத் தோழர்களான எஸ். எ. ஜி. ராபி, பண்ணை முத்துகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

மாநாட்டையொட்டி, திருச்சி நகரமே விழாக் கோலம் பூண்டிருந்தது என்ருல் மிகையாகாது!

மாநாட்டில் 50க்கும் மேற்பட்ட மாணவப் பேச்சாளர்கள் பங்குகொண்டு பேசினர்.

தென்னகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மாணவர் பிரதிநிதிகள் பங்கு கொண்டர்.

மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய ராசகோபாலாச்சாரியார் அவர்கள், மாணவத் தோழர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டு, ''இவ்வளவு அழகாகப் பேச மாணவர்கள் எங்கு கற்ருர்களோ தெரியவில்லை'' என்று பாராட்டியது குறிப்பிடத்தக்கதாகும்.

திருச்சியில் நடைபெற்ற மாணவர் இந்தி எதிர்ப்பு மாநாடு, தி. மா. மு. கழகத்தின் வலிவைத் திரட்டிக்காட்டும் வகையில் அமைந்தது என்று கூறினுல் மிகையாகாது!

''எலியென இகழ்ந்தோர் நடுங்கப் புலியென செயல் செயப் புறப்படு வெளியில்'' என்று முழக்கமிட்டு, திருச்சியில் கூடிய திராவிட மாணவர்கள், அறிஞர் அண்ணா அவர்கள் கூறிய அறிவுரைகளின்படி, உணர்ச்சி மிகு அத்தியாயங்கள் பலவற்றைத் தீட்டிக்காட்டும் எழுச்சி மிகு வீரர்களென செயலாற்றப் புறப்பட்டுவிட்டார்கள்!

திராவிடன் அடுத்த இதழ்

* சென்னை மாநாட்டு நிகழ்ச்சிகள்
* சொற்பொழிவுகள்
* அண்ணாவுடன் நான்

மற்றும் கதை — கவிதை — கட்டுரைகளுடன் 19—10—63 அன்று 16 காசு விலையில் வெளிவரும்.

—நிர்வாகி.



1938-ம் ஆண்டு மொழிகாக்கும் போரில் ஈடுபட்டு, உயிர்த்தியாகம் செய்த தாளமுத்து—நடராசன் நினைவுச்சின்னம்.

வெற்றி முரசொலிக்க . . .

ஒரு நாட்டிற்கு உயிர்நாடியாக இருப்பது அந்த நாட்டிலே வாழும் மக்கள் பேசுகின்ற மொழி தான். உலகத்தில் எத்தனையோ மொழி பேசும் மக்கள் வாழுகின்றனர். அவர்களுக்கென்று தாய் மொழி ஒன்று உண்டு. அந்தந்த நாட்டில் வாழும் மக்களின் தாய் மொழியில்தான் அவரவர்களது கலை, கலாச்சாரம், நாகரிகம், பழக்க வழக்கங்கள் அமைகின்றன. தாய்மொழி பற்றிலேதான் ஒரு நாடு சிறப்பையும், பெருமையும், அடைய முடியும்.

என் நாடு, என் மொழி, என்னுடைய நாகரிகம், என்னுடைய கலை என்று அவன் உலகத்திற்கு அறிவிக்கும்போது அவனின் தாய்நாட்டுப் பற்று, மொழிப்பற்று அவனையும் அறியாமலே மதிப்படைகிறது.

1940-ல் எச். ஜி. வெல்ஸ் ''நான் எதிர்நோக்குவேன்'' (My anticipation) என்ற நூல் எழுதியபோது, பிரஞ்சு மொழியே உலக மொழியாக விளங்கி வருமென்று எழுதினார். அவருடைய வாழ்நாளில் அது பொய்யாகி விட்டதைக் கண்டார். அவர் எழுதிய எண்ணம் ஏன் தோற்றது? ஏன் பொய்த்தது?

ஒரு காலத்தில் பிரான்சின் ஆதிக்கம் ஐரோப்பாவில் பரவி இருந்தது. பிரெஞ்சு மொழியின் செல்வாக்கு பல நாடுகளிலே சிறப்புற்று விளங்கியது. அதன் வாயிலாக உலக அரசியலில் செல்வாக்கு பெறக்கூடும் என்று அவர் எதிர்பார்த்தார்? பிரெஞ்சுக்காரர்கள் செல்வாக்கு பெற்றிருந்தால் இன்றைய உலக மொழி பிரெஞ்சு மொழியாகத்தான் இருந்திருக்கும்.

பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கம், செல்வாக்கு நாளுக்கு நாள் அழிந்து, ஆங்கிலேயர்களின் செல்வாக்கும் ஆதிக்கமும் தழைத்தோங்கலாயிற்று. அதனாலேதான் ஆங்கிலேயர்கள், ஆங்கில மொழியை உலக அரசியல் மொழியாக வளர்த்து ஆதிக்கம் செலுத்தி, இன்றைய தினமும் ஆங்கிலம் பேசாத நாடே யில்லை என்று சொல்லக் கூடிய அளவிற்கு உலக மொழியாக (International Language) விளங்குகிறது!

ஒரு நாட்டை மாற்றவேண்டுமானால்—ஒரு நாட்டின் மக்களை, மக்களின் எண்ணத்தை அழிக்க வேண்டுமானால்—கலை, கலாச்சாரத்தை, நாகரிக பழக்க வழக்கங்களை அழிக்கவேண்டுமானால்-முதலில் அந்தநாட்டின் மக்களின் மொழியை அழிக்கவேண்டும்.

ஆததால் மொழி அழிந்து பிற நாட்டுமொழி புகுந்தால் தானாக அந்நாட்டு கலை, கலாச்சாரம், நாகரிகம், பழக்க வழக்கங்கள் வேரூன்றி விடும் அதனாலேதான் ஆங்கிலேயர்கள் முதன் முதலில் இந்தியாவில் ஆதிக்கம் செலுத்தியபோது ஆங்கிலர் கற்றவர்களுக்குத்தான் உயர் பதவி, உயர்ந்த அந்தஸ்த்து, பட்டம், மதிப்பு கொடுத்து மெல்ல அவனுடைய ஆங்கில மொழி ஆதிக்கத்தை இந்திய துணைக்கண்டத்தில் வேரூன்றச் செய்தனர் என்பது கண்கூடு. ஒரு ஆட்சியை மாற்றக் கூடிய வலிவு மொழிக்கு இருக்கிறது என்பதாலே தான், வடநாட்டு இந்தி வெறியர்கள் இந்தி மொழியை கட்டாயமாக தமிழ்நாட்டு மக்கள் மீதும், இந்தி பேசாத மாநிலங்கள் மீதும், தத்

யாக அரியாசனத்தில் இந்தி மொழியை ஏற்றிவைக்க நாம் விடலாமா ? இந்தி மொழிக்கு என்ன தகுதி இருக்கிறது. இந்திக்கு என்ன யோக்யதை உண்டு. இதற்கு இலக்கணம் உண்டா ? இலக்கியமுண்டா?

இந்திய துணைக்கண்டத்திற்கு பதினான்கு மொழிகள் தேசிய மொழிகளாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றன. அவைகள் :- இந்தி, தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, காச்மீரம், மராட்டி, ஒரியா, பஞ்சாபி, சமஸ்கிருதம், உருது இவை இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 344, 351-வது பிரிவுகளின் கீழ் ஒப்புக்கொள்ளப்பட்ட மொழிகளாகும்.

பேன்'' என்று குரல் கொடுப்பார். மறு பக்கம் இந்திக்கு லாலி பாடுவார். இன்னொரு பக்கம் ஆங்கிலத்தை எதிர்ப்பேன் என்று மீசையை முறுக்குவார்!

அந்தந்தநாட்டவர்களுக்கு அந்தந்த வட்டார மொழிகள்த்தான் தேசிய மொழிகளாகும். இதனைக் கொஞ்சம் கூட சிந்திக்காமல், சட்டம் இயற்றி, நம்மை பயமுறுத்தி 1965க்குப் பிறகு இந்தியைக் கட்டாயமாகப் படிக்கவேண்டும். இந்திய தேசிய மொழி இந்தி தான் என்று இறுமாப்புடன் வடநாட்டு ஆதிக்கப் பீடம் நம்மை பயமுறுத்துகிறது. இந்த பயமுறுத்தலுக்கெல்லாம் அஞ்சுபவர்கள் அல்ல தமிழர்கள்.

இந்தி மொழிச் சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டும். அதுதான் சனநாயக முறையாகும். அதுவல்லாமல் வலுக் கட்டாயமாக இந்தியைத் திணிக்க முயன்றால், இலட்சக்கணக்கான தமிழ் வீரர்கள் மொழியைக் காக்கவும், உயிரையும் கொடுக்கவும், இரத்தம் சிந்தவும் தயங்கமாட்டார்கள்.

வீறு கொண்டெழுவோம்!

தம் அதிகாரத்தால் இந்தியை தேசியமொழி என்ற பெயரால் சட்டம் இயற்றி, நம்மையும், நம் தாய்மொழியையும் இழிவு படுத்த புனிதமான நம் கலை, கலாச்சாரத்தைக் கெடுக்க, அழிக்க, இந்தியைத் திணிக்க முயலுகின்றனர்.

இந்தி வெறி வல்லூறுகள், வாய்பிளந்து தமிழ்த் தாயின், தமிழ் மொழியின் பிணத்தைக் கொத்தித் தின்னக்காத்துக் கிடக்கின்றது. வாய் பிளந்துகிடக்கும் வடநாட்டு இந்தி வெறி வல்லூறுகளுக்கு நம் தாய் மொழியாகிய ''தமிழையா'' இரையாக்க விடுவது ? முடியாது ? முடியாது ? உயிரைக் கொடுத்தேனும் தமிழைக்காப்போம். அரசியல் மொழி

எனவே இந்திதான் தேசிய மொழியாக வேண்டுமென்பதல்ல. பதினான்கு மொழிகளையும் தேசிய மொழிகளாக்கலாம். நாட்டு மொழி (Nationa Language) என்பதும், அரசாங்க அலுவல் மொழி (Official Language) என்பதும் வெவ்வேறு என்பதை சிலர் நினைவு கொள்ளாமலேயே பேசுகின்றனர்

அறிஞர் அண்ணா அவர்கள் **பதினொரு மொழிகளை தேசிய மொழியாக்கலாம்** என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த எண்ணத்தை சிலர் கேலி செய்து கொண்டு இருக்கின்றனர். கேலி பேசுகின்றவர் யார் என்றால், ஒரு பக்கம் ''உயிரைக் கொடுத்தாகிலும் தமிழைக் காப்

அந்த வகையில் தென்னவர்களின் திறம்பாடும் பாடிவீடு —மொழிகாக்கும் மறவர் பாசறை சென்னை நுங்கம்பாக்கம் ஏரிக்கரையிலே கூட இருக்கிறது. அக்டோபர் திங்கள் 13-ம் நாள் நடைபெறும் அந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அறிவுலக மேதை அறிஞர் அண்ணா அவர்கள் கட்டளையிட இருக்கிறார்கள்.

போராட்ட நாள் குறிப்பிடப் போகிறார். அந்த போராட்டத்திலே அணிவகுத்து அண்ணா அவர்களின் சீரிய திட்டத்தை செயல்படுத்தி, தமிழைக் காக்க வீறுகொண்டு எழுவோம் !

— **கலைச்செழியன்**

ஆசைத்தம்பி சுற்றுப்பயணம்

அக்டோபர்

11	சென்னை 73 வது வட்டம்
12	புளியூர்
13	சென்னை மாநாடு
14	அயோத்திய பட்டணம்
15	குடியாத்தம்
19	நாப்புகழூர்
20	பாந்தமங்கலம்
24, 25, 26	கோவை

ஏஜெண்டுத் தோழர்களுக்கு

வணக்கம்,

செப்டம்பர்மாதம் முடிய பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. உடன் அதற்கான தொகையை தவறாது அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

நிர்வாகி: 'திராவிடன்'
16, இப்ராகிம் சேட் தெரு,
சென்னை-1.

நவம்பர் முதல் நாள்
எங்கும் கிடைக்கும்.

"திரு விளக்கு"

வார ஏடு.

ஆசிரியர் :

க. இராசாராம் பி.ஏ.,எம்.பி.

முன்பணம் கட்டும் விற்பனையாளர்கள் எங்கும் தேவை.

விவரங்களுக்கு :—

நிர்வாகி, திருவிளக்கு
2-142 மவுண்ட்ரோடு
சென்னை-6.

12-ம் பக்கத் தொடர்ச்சி.........

திக்கு உடந்தையாகவே இருப்பார்கள்.

1956ல் இந்திய அரசினரால் ஒரு புத்தகம் வெளியிடப்பட்டது. அதில் வங்கத்தைச் சேர்ந்த சுனித்குமார் சட்டர்ஜி என்பவரும், காலஞ்சென்ற டாக்டர் சுப்பராயனும் ஒரு குறிப்பு எழுதியுள்ளார்கள்.

1951-ம் ஆண்டு கணக்குப்படி இந்தியாவில் 36 கோடி மக்கள் இருந்ததாக கணக்கு தரப்பட்டது. அதில் இந்தி அல்லாத மொழி பேசுவோர் 21 கோடி பேர்கள். இந்தி, இந்துஸ்தானி, பஞ்சாபி, உருதுமொழி பேசுவோர் 15 கோடி பேர் என்று கணக்கு கொடுத்திருக்கிறார்கள். இந்த நான்கு மொழி பேசுவோர் தான் 42 சதவிகிதம் பேர், இதைத் தான் அரசாங்கம் 42 சதவிகித மக்கள் இந்தியைப் பேசுவதாக நம்மிடம் புள்ளி விபரம் காட்டுகிறார்கள்.

உருதும், இந்தியும் ஒரு மொழியா? ஒரு மொழிதான் என்றால், பாகிஸ்தான் ஏற்படுமா? பாகிஸ்தான் ஏற்பட்டதற்கு காரணங்களில் ஒன்று மொழிப் பிரச்சினையும்தானே. பல பிணங்களை சாய்க்கவில்லையா? ரத்த ஆறு அங்கே ஓடவில்லையா? எப்படி உருதும் இந்தியும் ஒன்றாக முடியும்.

பஞ்சாபியும் இந்தியும் ஒரு மொழிதானா? ஒன்று என்றால் பஞ்சாபி சுப ஏற்பட்டிருக்குமா? பஞ்சாபியை ஆட்சி மொழியாக ஏற்படுத்து, உருது மொழி வேண்டாம் என்ற குரல் தாராசிங் மூலமாக எழுமா?

இந்தியும் இந்துஸ்தானியும் ஒன்றா? உருது சொற்கள் இந்துஸ்தானியிலே அதிகம் இருக்கின்றன. உருது பக்கமா இந்துஸ்தானி; அல்லது இந்தி பக்கமா இந்துஸ்தானி— என்றால், உருது பக்கம் தானே இந்துஸ்தானி; சேரும். இதுதானே 42 சதவிகித மக்கள் பேசும் மொழிகளின் உண்மை?

பெரும்பான்மையோர் இந்தி பேசுகிறார்கள் என்கிறார்கள். 42 சதவிகிதம் பெரும்பான்மையா? மூன்றாவது மொழியுடன் இந்தியைச் சேர்த்துப் பேசும் 42 சதவிகித மக்கள் மெசாரிட்டியாம். மற்ற 58 சதவிகித மக்கள் பேசுவது மைனாரிட்டியாம். அந்த வழியில் பார்த்தாலும் இந்தி பேசுவோர் மெசாரிட்டியல்லவே!

இந்தி பரவலாகப் பேசப்படும் மொழி என்கிறார்கள். வங்கத்தில் பேசப்படுகிறதா? ஆந்திரத்தில் பேசப்படுகிறதா? மராட்டியம்-கேரளம்-கருநாடகம்-அசாம்-குஜராத்தி மாநிலங்களிலும் பரவலாகப் பேசப்படும் மொழியா இந்தி? இந்தி பரவலாகப் பேசப்படும் மொழியா என்றால் அதுவும் இல்லை. 4 மாநிலங்களில் மட்டும் இந்தி மெசாரிட்டி மொழி என்கிறார்கள்.

4 மாநிலங்களிலும் இந்தி மெசாரிட்டி மொழியா என்றால் அதுவுமில்லை. பன்னிரண்டரைகோடி மக்களால் அதை பேசப்படுகிறதா என்றால் இல்லை. அந்த மாநிலங்களிலேயும் 81 மொழிகளை அங்கே உள்ள மக்கள் பேசுகிறார்கள். இந்த 81 மொழிகளிலே ஒன்று கடிபோலி இந்தி-கடிபோலி இந்திதான் ஆட்சிமொழியாக்கப்பட்ட மொழி இந்த மொழி மெசாரிட்டி மக்களால் பேசப்படுகிறது என்றால், மக்கள் ஏற்பார்களா?

சுனித்குமார் சட்டர்ஜி வங்க அறிஞர்—மொழி நூல் நிபுணர்—பன்மொழிப் புலவர் — இரத்தனாகரா என்ற பட்டத்தைப் பெற்றவர் — இராசஸ்தான் அரசால் பரிசு வழங்கப்பட்டவர்— இந்தியில் வல்லுநர்—தமிழும் அறிந்தவர். என்னுடைய இளவல் செழியனுக்கு ஒரு புத்தகத்தை அன்பளிப்பாகத் தரும்போது, "இரா. செழியன் அவர்களுக்கு அன்பளிப்பு" என்று தமிழில் எழுதி சுனித்குமார் சட்டர்ஜி என்ற அவரது பெயரை "நன்னெறி முருகன்" என்று தமிழில் மொழி பெயர்த்து எழுதி ஒருபுத்தகத்தை கொடுத்தவர். அவர் இந்தி ஆட்சிமொழியாக வரத் தகுதியற்றது என்றார்.

இந்தி மெசாரிட்டியாகப் பேசப்படும் மாநிலங்கள் என்று கூறப்படுகின்ற 4 மாநிலங்களிலே பேசப்படும் 81 மொழிகளில், முக்கியமானவை என்று தேர்வு செய்யப்பட்ட மொழிகள் 12. அந்த 12 மொழியும் இடத்திற்கு இடம் வெவ்வேறு வார்த்தைகளை இந்தியின் பெயரால் வழங்கி வருகிறது.

உதாரணமாக ஒன்று கூறுகிறேன். "நீ என்ன செய்கிறாய்" என்ற தமிழ் வாக்கியத்தை ஆங்கிலத்திலே கூறினால், வாட்டுயூடு என்று கூறுவோம். அதை கடிபோலி இந்தியில் கூறுகின்ற போது, "கியா கர்த்தே ஹோ" என்று கூறுகிறார்கள் அதையே பிரஜ்பாஷ இந்தியில் "காகர்த்துவா" என்பார்கள். காசியைச் சுற்றியுள்ள இடங்களிலே வழங்கப்படும் அவதி இந்தியிலே "காகாத்ரகத்பா" என்று சொல்லுகிறார்கள். அதையே பீகாரி இந்தியிலே காகார்டே ஹோ" என்று கூறுகிறார்கள், அதையே அமிர் சரஸ் மாநிலத்தில் பேசப்படும் இந்தியில் கீகரண்டா என்றும் அதையே வங்கத்திலுள்ளவர்கள் பேசும் இந்தியிலே "கீ கோரிச்சே" என்றும் இராசரஸ் இந்தியிலே அதைக் கூறும்போது "தும்கின் கரி" என்றும் மாறி மாறி வழங்கப்படுகிறது.

"கியா கர்த்தே ஹோ" என்று ஆரம்பிக்கப்பட்ட இந்தி, தும் கின் ஹை ஹோ"யிலே முடிகிறது என்றால், இந்த மொழியா ஆட்சி மொழி?

எனவே, எந்த அளவுக்கு தமிழில் புது சொற்களை கண்டு பிடிக்கமுடியுமோ அந்த அளவுக்குக் கண்டுபிடிக்கப்பட வேண்டும். அதற்கு ஆர்வம் அவசியம்.

"உலகெல்லாம் தமிழைப் பரப்பச் செய்வோம்" என்ற பாரதியின் கனவை வெற்றி பெற வைப்போம்.

முதலில் தமிழகத்திலே தமிழ் மணத்தை மேலும் பரப்புவோம். பிறகு ஆங்கிலம் எக்காரணம் கொண்டாவது அகற்றப்பட வேண்டிய நிலை ஏற்பட்டால், தமிழ் அந்த இடத்தைப்பற்றி உலகத்தோடு தொடர்புகொள்ளுமளவிற்குப் புதுச் 'சொற்களை உருவாக்கி தமிழன் பெருமையைத் திக்கெட்டும் முழக்குவோம்.

இரு மொழிக் கொள்கையே போதும்; மும்மொழிகள் நமக்குத் தேவையில்லை, முதல் மொழி நமது தாய் மொழி; இரண்டாவது மொழி அகில உலக மொழி ஆங்கிலம்.

ஆங்கிலத்தை ஆகற்றிவிட்டால் வேறு எந்த மொழி இருக்கிறது அறிவை வளர்க்க? தமிழோடு ஆங்கிலத்தைப் பயன்படுத்த மாணவர்கள் முன்வர வேண்டும்.

ஏனோ தானோ என்று சிலர் இருப்பார்கள்-நமக்கென்ன என்று சிலர் இருப்பார்கள்—நாமுண்டு சோறுண்டு என்றிருப்பவர்களும் உண்டு. ஒரு சிலர்தான் கால நிலையை மாற்றியமைப்பார்கள். தமிழில் புது திருப்பத்தை உண்டுபண்ண - புதுச் சொற்களை கண்டுபிடிக்க மூன்றரை கோடி மக்களும் திறந்துகாட்ட வேண்டுமென்பதில்லை—ஆற்றல் மிக்க 6 பேர் போதும். அந்த 6 பேர் ஆற்றலும் 6,60,600 ஆக வளருமேயானால் நாடு திருந்தும். அந்த எண்ணிக்கை மாணவர் சமுதாயத்திலிருந்து தான் புறப்பட வேண்டும்.

கடாரம் சென்று வென்று மீண்ட தமிழ்—கங்கை சென்று வென்று மீண்ட தமிழ்-இமயம் வென்ற தமிழ்-ரோமாபுரியிலே பொன்னும் மணியும் பெற்று ஓங்கு புகழ் பெற்ற தமிழ்-வீரத்தோடும் --கீர்த்தியோடும் சீரோடும் — சிறப்போடும் ஈடுமெடுப்புடனும் இருந்த தமிழ் ஆட்சிமொழியாகவும்—அதற்கு ஆங்கிலம் உறுதுணையாகவும் இருக்க மாணவர் தமிழ் மன்றங்கள் பயன்பட வேண்டும்.

எண்ணியார் "திண்ணியரானால் எண்ணியது எண்ணியபடி நடக்கும்." பொங்கு தமிழருக்கு இன்னல் விளைவித்தால் சங்காரம் நிசமென சங்கே முழங்கு, என்று உறுதி கொள்வோம்.

இந்தியினை விரட்ட வாரீர்!

மொழிகாக்க முன்தமிழர் இனத்தைக் காக்க
மூவேந்தர் வழிவந்த கலையைக் காக்க
வழிவழியில் வந்தபெரும் பண்பைக் காக்க
வரலாற்றை இலக்கியத்தின் உரிமை காக்க
விழியெனவே போற்றிவரும் தமிழைக் காக்க
வீரத்தை மானத்தை மாண்பைக் காக்க
செழிப்புமிகு தாயகமாம் நாட்டைக் காக்க
செருமுனையில் இந்தியினை விரட்ட வாரீர்!

இன்றல்ல நேற்றல்ல இந்தி யரக்கி
இருபத்தைந் தாண்டுகளாய் அன்னை மொழியை
வென்றுவிட எண்ணுவதும் விரட்டி யடித்தால்
வெந்தணலில் விழ்ந்ததொரு புழுவாய்த் துடித்துச்
சென்றதுபோல் நடிப்பதுவும்; திரும்பி நாட்டில்
திண்மையுடன் நுழைவதுமாய் இருக்கு தன்றோ?
கொன்றழித்துப் பகைமுடித்துத் தமிழைக் காக்க
கூடுகின்ற போர்களத்தை நோக்கி வாரீர்!

அன்னைநிகர்த் தமிழ்மொழியை அரியா சனத்தில்
ஆட்சியென்னுங் கட்டிலிலே சரியா சனத்தில்
விண்ணளந்த தமிழ்மொழியை உலகை ஆண்ட
வேந்தர்களின் கால்வழியில் வந்த தமிழன்
தன்னுயிரை உடமையெலாம் தமிழுக் கீந்து
தமிழ்த்தாயைக் காப்பதற்கே துணிந்து விட்டான்
என்னருமைத் தமிழர்களே இந்திப் பேயின்
இடுப்பொடித்துத் தமிழ்மொழியைக் காக்க வாரீர்

மறைமலையும் பெரியாரும் திருவி. கவும்
மகேசுவரம் பிள்ளைநா வலர்பா ரதியும்
திறமைமிகு சுப்பிரமணிய பிள்ளை யோக,
சிந்தனையில் (சு)ஆனந்த பாரதியும்; ஏட்டில்
உறைகின்ற அறிஞர்முதல் எழுத்தாள ரெல்லாம்
உரைத்திட்டார் இந்திவரின் தமிழழிவு மென்றே!
கறைபடிந்த இந்தியினை விரட்டிக் கன்னிக்
களங்கமிலாத் தமிழ்த்தாயைக் காப்போம் வாரீர்!

சிறையென்றால் ஏகிடுவோம் அஞ்ச மாட்டோம்
செந்தமிழைக் காப்பதற்கே உயிரைத் தருவோம்
உறையிட்ட வாளெடுத்தே உரிமை காப்போம்
உறுமுகின்ற சிங்கமெனக் கர்ச்சித்தே நாம்
பறைகொட்டிக் கொம்பூதிப் படையைத் திரட்டிப்
பாசறையை அமைத்தேநல் தமிழைக் காப்போம்
முறைகெட்ட மூளிமொழி இந்திப் பெண்ணை
முச்சந்தியில் நிறுத்திக் கொள்ளி வைப்போம்!

சோ.ர. எழிலன்

திராவிடன்

தாய் பிறன் கைபடச் சகிப்பவரில்லை!

10-ம் பக்கத் தொடர்ச்சி

யார்; கொடி ஏற்றிவைத்தவர் திருமதி. மீனும்பாள் சிவராஜ், மாநாட்டைத் துவக்கி வைத்தவர் பண்டிதை நாராயணி அம்மையார்; வரவேற்பாளர் திருமதி தாமரைக்கண்ணி அம்மையார். இராமாமிர்தத்தம்மையார், மலர்முகத்தம்மையார், திருமதி இராணி அம்மையார் (அண்ணு அவர்களின் துணைவியார்) ஆகியோர் மாநாட்டின் தீர்மானங்களை விளக்கிப் பேசி முக்கிய பங்கேற்றனர். இந்த மாநாட்டில்தான் பெரியாருக்கு "பெரியார்' என்ற சிறப்புப் பட்டம் அளிக்கப்பெற்று, அந்தப் பெயராலேயே அவர் இன்றளவும் வழங்கப்பெறும் நிலையேற்பட்டது.

மாநாட்டிற்கு அடுத்த நாள் 14-11-1938இல் தாய்மார்கள் சிறையேற்புச்சகாப்தம் தொடங்கிவிட்டது. டாக்டர் தருமாம்பாள், இராமாமிர்தம்மையார், மலர்முகத்தம்மையார், பட்டம்மாள், சீதம்மாள் ஆகிய ஐந்து வீராங்கனைகள் மறியல் செய்வதற்காக இந்து தியலாஜிகல் பள்ளிக்கு ஊர்வலமாகப் போகும் வழியிலேயே சிறைபிடிக்கப்பட்டனர். அனைவருக்கும் ஆறு வாரச் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது. இவர்களை அடுத்து, 21—11—38-ல் திருமதி உண்ணுமலை அம்மையார் (புலவர் அருணகிரிநாதர் துணைவியார்) திருமதி புவனேஸ்வரி அம்மையார் (என். வி. நடராசன் துணைவியார்) போன்ற வீராங்கனைகள் சிறை வாழ்வுக்குத் தொடர்ந்தனர். ஒவ்வொரு வாரமும் தாய்மார் கூட்டம் மறியலில் கலந்து கொண்டு இந்தியைத் துரிதமாக ஓட்டுவதற்குத் துணைபுரிந்தது. இப்படிச் சிறைசென்ற தாய்மார் தொகை 73; அவர்களுடன் சிறைசென்ற குழந்தைகள் 32.

தாய்மார்க் கூட்டமும் போராட்டத்தில் கலந்துகொண்டு விட்டதைப் பார்த்த அரசாங்கத்திற்குப் பெருங்கிலி பிடித்துப் போய், பெரியார் இராமசாமி அவர்களைச் சிறையில் போட்டால் எதிர்ப்பின் தன்மை தணிந்துவிடும் என்று நினைக்கத் தொடங்கியது. நினைத்ததை 6-12-38இல் அவருக்கு ஒன்றரையாண்டு சிறைத் தண்டனை அளிந்துத் தீர்த்துரி கொண்டது. பெரியாருக்கு அளிக்கப்பட்ட சிறைத்தண்டனைக் கொடுமையைப் பார்த்து, கொதித்துப் போன தமிழர் சமுதாயத்திற்கு ஒரு திங்களுக்குள்ளாகவே வேறு பெரிய இழப்பும் பேரதிர்ச்சியும் இணைந்துத் தொடர்ந்து வந்தன. இந்தி எதிர்ப்புப் போரில் சிறைத் தண்டனைப் பெற்றிருந்த மாவீரன் நடராசன் 15—1—39-இல் ஆட்சியாளரின் கொடுமையால் பிணமானர். மொழிப்போர் முதல் இரத்தப் பலி வாங்கிக்கொண்டது! பழந்தமிழர்க் குடியைச் சார்ந்த அந்தப் பெருமகன் தன் இனத்திற்காக—தனது மொழிக்காகப் போராடி மறைந்தார். நடராசனைப் பலி கொடுத்ததால் தமிழர்தம் உள்ளத்தில் ஏற்பட்ட பச்சைப்புண் வலி ஓய்வதற்குள் மற்றெரு போராட்ட வீரர்—நாடார் குல விளக்கு தாளமுத்து 12—3—39-இல் மறைந்தார். தமிழனது மொழிப்பற்றின் நினைவுச் சின்னமாக—அவனது வீரப் போராட்டத்தின் வரலாற்று நாயகர்களாக—உள்ளத்திண்மைக்கு மற்றெருரு சிறப்புப் பெயராக இவர்கள் பெயர் நிலைத்துவிட்டது. தியாகி தாளமுத்துவின் இளம் மனைவி கதறக்கதற, அவரது வயதுமுதிர்ந்த பெற்றோர் குமுறிக் குமுறியழ—தியாகி நடராசனின் உடல் புதைக்கப்பட்ட இடத்தருகே தாளமுத்துவின் உடலும் வைக்கப்பட்டது. தாளமுத்துவின் உடல் புதைக்கப்பட்டதும் நடந்த இரங்கற்கூட்டத்தில், தமது நெஞ்சடைக்க—நாத்தழுதழுக்க—கண்களில் நீர்பெருக—அறிஞர் அண்ணு அவர்கள் பேசியதாவது :—

"சாக்கோட்டையில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் நாடார் சமூகச் சகோதரர்களும் தமிழர் அறப்போரில் கலந்துகொள்ள வேண்டுமென அழைப்பு விடுத்தேன். அதற்கேற்ப அங்கிருந்து நாடார் தோழர்கள் வந்தனர். அந்த வீரமரபைச் சார்ந்த தாளமுத்துவும் வந்தார். மறைந்துவிட்டார். முன்பு இறந்த நடராசன் மணமாகாதவர்; தாளமுத்து மணமானவர். நடராசன்—தாளமுத்துவை நாம் இழந்தோம். கண்ணீர் விட்டோம்; நெஞ்சு துடித்தோம்; நிலைதடுமாறினேம். இனி இந்தி படிக்கும் மாணவர்கள் இவ்விருவர் உடலைத் தாண்டித்தான் படிக்கச் செல்லவேண்டும்"

என்று குறிப்பிட்டார். அண்ணு அவர்களின் இந்தப் பேச்சு கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களை நெக்குருகச் செய்துகொண்டிருந்த வேளையில், காங்கிரஸ் ஆட்சி மேலும் களப்பலி வாங்கத் தயாராக—மேலுமேலும் இரத்தப் பசியுடன் ஆணவமாக வீற்றிருந்தது.

18—1—39-இல் சென்னை சட்டசபையில், சிறையில் இறந்த தோழர் நடராசனைப்பற்றி விவாதம் நடந்தது. காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தோழர் கத்தே.

புவனேசுவரி-நடராசன்

டாக்டர். தருமாம்பாள் அம்மையார்

ரங்கைய நாயுடு 'அந்தக் கைதி இறந்ததின் காரணம் என்ன?' என்று கேட்டார். 'நடராசன் என்பவர் படிப்பு வாசனையறியாத ஒரு அரிஜன்' என்று ஆச்சாரியார் பதிலளித்தார். 'படிப்பில்லாத காரணத்தால்தான் நடராசனுக்கு மரணம் நேர்ந்ததா?' என்று அப்துல் அமீத்கான் என்ற மற்றெருரு உறுப்பினர் ஆச்சாரியாரை மடக்கினர். 'படிப்பில்லாததால்தான் அந்தக் கைதி மறியல் செய்ய நேர்ந்தது; சிறையில் அவர் இறந்து போனர்' என்று ஆச்சாரியார் குத்தலாகத் தெரிவித்தார். இந்தப் பதிலைக் கேட்டுப் பல காங்கிரஸ் உறுப்பினர்கள் அப்போது சிரித்தார்களாம். வேதனையான நிகழ்ச்சியொன்றைப்பற்றி விபரீதமாகப் பதில் சொன்ன ஆச்சாரியாரின் பேச்சில் எதைக்கண்டு அப்போது காங்கிரஸ் உறுப்பினர்கள் சிரித்தார்களோ?

அதே இடத்தில் முதலமைச்சராக ஒரு கிழமைக்கு முன்பு அமர்ந்திருந்த காமராசரும் இதே மாதிரிப் பேசியதைக் கண்டு நமக்கு வேதனை ஏற்படுவதைச் சொல்லித்தான் ஆகவேண்டும்.

'கல்வி அறிவு இல்லாததால்தான் நடராசன் இந்தி எதிர்ப்பு மறியலில் கலந்துகொண்டார்' என்று ஆச்சாரியார் சொன்னர். இப்போது, கல்வி கற்றேர்ப் பிரச்சினைதான் இந்தி எதிர்ப்பு என்று காமராசர் சொல்கிருர். அதாவது மறியல் போன்றவற்றில் கலந்துகொள்ள வேண்டியவர்கள் ,படித்தவர்களே: பாமரர் அதில் கவனஞ் செலுத்தவேண்முய அவசியம் இல்லை என்பது காமராசர் வாதம். ஒரே பிரச்சினை—ஒரே பதவி—இரு வேறுபட்ட வாதம். ஐயோ தமிழகமே, இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னுலும் உன்னை ஆளப் புகுந்தவர் தரமும் மனமும் வளரவில்லையே!

ஆச்சாரியாரின் விபரீதமான வாதம் தமிழர்களை மேலும்மேலும் உறுதி படைத்தவர்களாக ஆக்கிற்று. இவ்வளவு ஆணவம் படைத்த ஒருவரைத் தொடர்ந்து பதவியில் இருக்க வைக்கக் கூடாது என்பதில் வைர உறுதி பெற்று வந்தனர். இந்த உறுதி, பெரியாரை விடுதலை செய்யுமாறு கேட்பதிலும், இந்தியை மேலும் தீவிரமாக எதிர்ப்பதிலும் எதிரொலித்தது.

எத்தனையோ தடுமாற்றமான பேச்சுக்களைப் பேசி, தோல்வியைத் திடீரென ஒப்புக்கொள்ள முடியாத ஜம்பத்துடன் நடந்துகொண்ட ஆச்சாரியார் இறுதியாக, எதிர்ப்பின் சூடு தாங்க மாட்டாமல், 22-5-1939ல் பெரியாரை நிபந்தனையின்றி விடுதலை செய்தார். பதினெட்டு மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பெரியார், மக்களின் உறுதியான போராட்டத்தின் காரணமாக 167 நாட்கள் சிறைவாசம் புரிந்த நிலையில் விடுதலை செய்யப்பட்டார். இவ்வளவு விரைவில் பெரியார் விடுதலை ஆனதற்குக் காரணம், மக்கள் மட்டுமல்ல, அறிஞர் அண்ணு அவர்களின் பேனவும் பேச்சுத் திறனும் பெருந்துணை புரிந்தன வென்பது உண்மை.

விடுதலையடைந்த பெரியார்

தமிழினை மறக்கும் தமிழனுமில்லை!

தாய்மை சிறையேகி தமிழினைக் காத்தது!

பேய் மகள் இந்தி புதைகுழி ஏகட்டும்!

அவர்களை திராவிடத்தின் ஒவ்வொரு பகுதியும் போட்டியிட்டு வரவேற்று உபசரித்தன; இயக்க நிதியாகப் பணமுடிப்பு அளித்து மகிழ்வித்தன.

18—6—39-இல் சென்னை நகரில் பெரியாருக்கு அளித்த மாபெரும் வரவேற்பு நிகழ்ச்சியில், அந்த ஆண்டுப் போராட்டத்தில் 1001 பேர் சிறைபட்டதற்கு அறிகுறியாக, அறிஞர் அண்ணு அவர்கள் 1001 ரூபாயைச் சென்னைத் தமிழர்கள் சார்பாகப் பெரியார் அவர்களிடம் அளித்தார். தொகையைப் பெற்றுக்கொண்ட பெரியார், 'இந்த ஆண்டு 1001 தமிழர் சிறை சென்றதால், 1001 ரூபாய் பெற்றேன். அடுத்த ஆண்டும் என் அருமை நண்பர் ஆச்சாரியார் கருணை இருந்தால் 10001 ரூபாய் பெறுவேன்' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினுர்.

அடுத்த ஆண்டு 10001 பெறுவதற்கு ஆசைப்பட்ட பெரியாரின் பேராசை நிறைவேறவே இல்லை. ஏனென்ருல், 27—10—39-இல் ஆச்சாரியார் மந்திரிசபை கவிழ்ந்துவிட்டது.

ஆச்சாரியார் மந்திரிசபை கவிழ்ந்ததும், அடுத்துவரும் ஆட்சியாளருக்கு அவகாசம் கொடுக்கும் வகையிலும் மற்ற காரணங்களுக்காகவும் மறியலை கொஞ்ச நாளைக்கு நிறுத்திவைக்க முடிவுசெய்யப்பட்டு, அதன்படியே மறியலும் நிறுத்தப்பட்டது. மறியல் ஓத்திவைக்கப்பட்டபோது அதுவரை சிறை புகுந்திருந்த தமிழர் தொகை 1271. இதில் ஆண்கள் 1166. பெண்கள் 73. குழந்தைகள் 32.

ஆச்சாரியார் அமைச்சரவை கவிழ்ந்த 15 நாட்கள் கழித்து, 11—11—39-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத் தலைவர்களால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டது. மறியல் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதை விளக்கி, இந்தி எதிர்ப்பு காரணமாகச் சிறையில் இருப்பவர் அனைவரும் விடுதலை செய்யப்பட்டு கட்டாய இந்தி ஒழிக்கப்பட வேண்டும் என்று அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

15—11—39-இல் இந்தி எதிர்ப்பு சம்பந்தமாக சிறைத் தண்டனை பெற்றிருந்த அனைவரையும் அரசாங்கம் விடுதலை செய்தது. இவர்களை விடுவித்ததற்குத் தமிழர் சார்பில் நன்றி தெரிவித்துக்கொண்டும், அவர்கள் எந்தக் காரணத்திற்காக காராக்கிருக வாசம் அனுபவித்தனரோ அந்த இலட்சியம் இன்னும் நிறைவேறவில்லை என்பதைக் குறிப்பிட்டும், கட்டாய இந்தி போகாதவரை தமிழ் மக்களுக்குச் சாந்தியோ ஓய்வோ ஏற்படாது என்றும் அனைவரும் விடுதலை செய்யப்பட்டபோது இந்தி எதிர்ப்பியக்கத் தலைவர்கள் அறிக்கை விடுத்தனர். அந்த அறிக்கையில் கையெழுத்திட்டவர்களில், தற்போது காங்கிரஸ் சீமானுகக் கருதப்படும் குமார ராஜா முத்தையா செட்டியாரும ஒருவர்.

இந்தி எதிர்ப்புத் தொண்டர்கள் விடுதலை செய்யப்பட்டாலும் கட்டாய இந்தி அதிகாரபூர்வமாக இன்னும் தொலையவில்லை. இதனைக் கண்ட தலைவர்கள், மீண்டும் 31—12—39-ல் காஞ்சியில் கூடி ஆலோசித்தனர். இறுதியில் மேலால் ஆனவற்றைக் கவனிக்கவும், அவசியமானல் மீண்டும் போராட்டத்தைத் துவக்கவும், அறிஞர் அண்ணு அவர்களைச் செயலாளராகக்கொண்ட 16 பேர் அடங்கிய இந்தி எதிர்ப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இந்தக் குழு, இந்தி கட்டாயமாக இருப்பதில் காணப்படும் ஆபத்துக்களையும், இந்தித் திணிப்புத் திட்டத்தைக் கைவிட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியும் பெரும்பணி ஆற்றிற்று. வடநாட்டுச் சுற்றுப்பயணம் சென்றிருந்த பெரியாரும் அண்ணு அவர்களும் சென்னை திரும்பி, 18—2—1940-இல் சென்னை கோகலே மன்றக் கூட்டத்தில் அரசாங்கத்திற்கு இறுதியாக எச்சரிக்கை விடுத்தனர்.

இந்தக் கூட்டம் நடைபெற்ற 3 நாள் கழித்து, 21—2—40 இல் கட்டாய இந்தி தொலைந்துவிட்டதாக அரசாங்கம் அறிக்கை விடுத்தது. 'சட்டாய இந்திமுறை பொதுமக்களில் பெரும்பாலோரிடை எதிர்ப்பையும் அதிருப்தியையும் விளைவித்திருக்கிறது. முதல் மூன்று பாரங்களில் தேர்வு எதுவுமில்லாமல் இந்தியைக் கட்டாயமாக மட்டும் கற்றுக்கொடுப்பதால், மாணவர்களுக்கு அந்த மொழியில் போதிய அறிவோ திறமையோ ஏற்படாதென அரசாங்கம் கருதுகிறது. ஆகவே, இந்திக் கட்டாயத்தை உடனே எடுத்துவிடுவதென முடிவு செய்துவிட்டது' என்று 21—2—40-ஆம் நாளிட்ட அரசாங்க அறிக்கை தெளிவாகக் கூறி, கட்டாய இந்தியை கல்லறைக்கு அனுப்பியது.

ஆபத்து நிரம்பிய இந்தி—எப்படியும் திணித்துவிட வேண்டும் என்று அதிகாரவர்க்கத்தால் முயற்சி செய்யப்பட்ட இந்தி—அன்ருேடு ஒழிந்தது.

அன்று தமிழர்களின் ஒருமித்த போராட்டத்தின் காரணமாகத் தோல்வியுற்று ஓடிப் பதுங்கிய இந்திப் பேய் மீண்டும் இங்கு நுழைந்து ஆதிக்கத்திற்கு அலையத் தொடங்கிவிட்டது!

என்ன செய்யவேண்டும் என்பது தமிழர் சமுதாயத்திற்குச் சரியாகத் தெரியும். ஏனென்ருல், இந்தியை எதிர்ப்பதில் அவர்களுக்கு ஒரு பாரம்பரியம் உண்டு!

அன்று தோற்ருேடிய அதே இந்தி அதிக பலத்துடன் இப்போது நுழைகிறது!

அதனை அன்று முறியடித்த அதே பெருந்தலைவர் அறிஞர் அண்ணு அவர்கள் பெரும் பலத்துடன் எதிர்த்து நிற்கிருர்கள்.

அறிஞர் அண்ணு அவர்களின் வெற்றியைப்பற்றி யாருக்கும் ஐயமில்லை. காரணம் காந்தியப் படையை-அறப்போராட்டத்தை-முற்றிலும் வெற்றிகொண்ட சக்தி உலகத்தில் இல்லை!

வாழ்க தமிழ்! வாழ்க அண்ணு!

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
வெண்சங்கு சீயக்காய்த் தூள்
எங்கும் கிடைக்கும்.
மணத்தில் மிகுந்த
செல்வம் ராணி ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்.



தயாரிப்பாளர்கள் :
வெண்சங்கு சீயக்காய்த்தூள் பாக்டரி
3037—38 டபீர்குளம் ரோடு, தஞ்சை

'திராவிடன்' சந்தா விவரம்

ஓராண்டு	...	ரூ. 8.
ஆறு மாதம்	...	ரூ. 4.
தனிப்பிரதி	...	16 காசு.

நிர்வாகி: திராவிடன், சென்னை

இந்தி எதிர்ப்பு அறப்போர்

அறிஞர் அண்ணாவின் விளக்கம்!

இந்தியை எதிர்த்துக் கழகம் நடத்தவிருக்கும் போராட்டம் தொண்டர்கள் போராட்டமாக அமையாமல், தலைவர்கள் நடத்தும் போராட்டமாக இருக்கும். சில போராட்டங்களில் தொண்டர்கள் ஈடுபட்டுச் சிறை செல்வார்கள். இந்தப் போராட்டத்தில் கழகத் தலைவர்கள் சிறைக்குப் போவார்கள், தொண்டர்கள் வெளியே யிருந்து கழகத்தைக் கட்டிக் காப்பார்கள். இந்தத் திட்டத்தை எனது கூட்டுச் செயலாளர்களைக் கலந்து முடிவு கூற இருக்கின்றேன்”

—என்று அறிஞர் அண்ணா அவர்கள் சென்னைக் கூட்டத்தில் கருத்தறிவித்திருக்கிறார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது :—

நீங்கள் போராட்டம் நடத்தப் போகிறீர்களா? அப்படி நடத்தினால் கட்சி அழிந்து விடாதா?” என்று காங்கிரஸ்காரர்கள் கேட்கிறார்கள்.

இந்தியை எதிர்த்து நாம் போராட்டத்தை நடத்தினால் கழகத் தோழர்களும்—தலைவர்களும் சிறை சென்றுவிட்டால் — கட்சி கலகலக்கும்— அதன் சக்தி குன்றிவிடுமே என்று நான் கூட நினைத்தேன்.

ஆனால், காமராசர் கழகத்தை அழிப்பேன் என்று கூறுகின்ற பொழுது அதற்கான செயல் முறைகளில் அவர் இறங்கி விட்டார் என்ற நிலை இருக்கும்போது —நான் கட்சியை வளர்க்கத் திட்டம் செய்து விட்டுத்தான் போவேன்.

இரண்டுக்கும் உங்களிடம் ஆள் உண்டா என்றால், உண்டு. அதற்குரிய வழிகளைச் செய்துவிட்டு சிறை செல்வதுதான் கடமை என்ற நிலை கழகத்திற்கு ஏற்பட்டு விட்டது.

தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவராக, கிருஷ்ணசாமி நாயுடு இருக்கிறார். காங்கிரஸ் ஆட்சியின் முதலமைச்சராக பக்தவத்சலம் இருக்கிறார். இவர்கள் இருவரையும் இரண்டு பொறுப்புகளுக்கு நியமித்து விட்டு — காங்கிரசைக் காப்பாற்ற காமராசர் என்றால், என்ன பொருள்?

இவர் பெரிய பெண்ணிற்கு புருஷன்—அவர் சிறிய பெண்ணிற்குக் கணவன்—என்று கூறிவிட்டு, நடுவிலே ஒருவரைக் காட்டி இவர்தான் எனது மருமகன் என்பதா?

பக்தவத்சலம் முதலமைச்சராக இருக்கிறார். கிருஷ்ணசாமி நாயுடு தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவராக இருக்கிறார்—இவர்கள் இருவரும் திருமணமானவர்கள். காமராசர் திருமணமாகாதவர். அவரை மருமகன் என்று காட்டுவானேன்?

அவர்கள் இருவரும் காங்கிரசுக்குத் தலைவராக இருக்கும்போது காமராசர் காங்கிரசைக் காப்பாற்றப் புறப்பட்டிருப்பதுதான் விசித்திரமாக இருக்கிறது.

கிருஷ்ணசாமி நாயுடுவால் காங்கிரசைக் காப்பாற்ற முடியாது என்ற நம்பிக்கை இருக்குமானால், அவரை ஏன் காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்வு செய்யவேண்டும்? பக்தவத்சலத்தாலும் கிருஷ்ணசாமி நாயுடுவாலும் காங்கிரசைக் காப்பாற்ற முடியாதா? முடியாது என்றால் அவர்கள் காங்கிரஸ் பொறுப்புகளுக்குத் தலைவராக இருக்கத் தகுதி பெற்றவர்களா?

இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஆயிரமாயிரமாகத் தோழர்கள் திரள வேண்டுமென்று என். வி. நடராசன் கூறினார்.

இந்தியை எதிர்த்துப் பேரராட தோழர்கள் அணி அணியாகத் திரள வேண்டும். கழகத்தோழர்கள் அங்கங்கே 4 பேர், 5 பேர் வீதம் கூடிப் போராட வேண்டும்—நீண்ட காலம் நடைபெற வேண்டும். போராட்டம் போகப் போகச் சூடு பிடிக்க வேண்டும். போராட்டம் வாண வேடிக்கையைப் போல—வர்ண ஜாலம் காட்டும் வகையானதாக அமையக் கூடாது.

காங்கிரஸ்காரர்கள் கூட போராட்டம் இவ்வளவுதானா? ஏதோ அதிகம் பேர் கலந்துக் கொள்வார்கள் என்று நினைத்தோமே என்று எண்ணக்கூடும். அந்த அளவுக்கு போராட்டத்தின் அளவு சிறியதாகவும் இருக்கக் கூடும்.

ரிசர்வ் பாங்கியில் கூட பணத்தை ரிசர்வ் செய்து வைப்பார்கள். அதுபோல ரிசர்வ் பட்டாளம் தனியாக நம்மிடம் இருக்க வேண்டும். அதற்குரிய மூல பலத்தைக் கட்சியைக் காப்பாற்ற விட்டுவிட்டு இந்தியைத் தடுத்து நிறுத்த — இந்திப் போராட்டத்தை உலகம் வியந்து பார்க்குமளவுக்கு போராடப் பலர் இருப் இருப்பார்கள்.

இந்தப் போராட்டம் தொண்டர்கள் நடத்தும் போராட்டமாக அமையாமல், தலைவர்கள் நடத்தும் போராட்டமாக இருக்கும்,

சில போராட்டங்களில் தொண்டர்கள் சிறைக்குப் போவார்கள். இந்திப் போராட்டத்தில் தலைவர்கள் சிறைக்குப் போவபர்கள்— தொண்டர்கள் வெளியே யிருந்து கழகத்தைக் காப்பார்கள்.

கழகமும் காக்கப்பட வேண்டும். போராட்டத்தின் விளைவுகள் மக்களுக்கு எடுத்து விளக்கப்படவும் வேண்டும்—தேர்தல் வந்தால் அதிலும் கழகம் ஈடுபட வேண்டும். அதே நேரத்தில் இந்தியையும் எதிர்த்தாக வேண்டும். எனவே நாம் இருவிதமாகப் போராடியாக வேண்டும்.

அறப்போராட்டமும் நடைபெற வேண்டும்—அதே நேரத்தில் காங்கிரஸ்காரர்கள் இந்தியை எதிர்த்த பயல்கள் எல்லாம் சிறை உள்ளே போய் விட்டார்கள் என்று சந்தோஷப்படவும் விடக் கூடாது.

தெருக்கூத்து கிராமங்களில் நடைபெறும்போது வீட்டிலிருப்பவர்கள் அனைவரும் போய்விட மாட்டார்கள். கிழங் கெடுகளாவது வீட்டில் இருப்பார்கள். எல்லோரும் போய்விட்டால், வீட்டிற்குள் புகுந்து கொள்ளையடித்து விடுவார்கள். அதுபோல கழகத் தோழர்கள் அனைவரும் சிறைக்குள் போய்விட்டால் பூட்டை உடைத்து விடலாம் என்று காங்கிரஸ்காரர்கள் கருதுகிறார்கள்.

கதவும் திறந்தே இருக்கும்— காவலும் பலமாக இருக்கும். போராட்டமும் நடைபெறும்— கட்சியும் கட்டுக் கோப்போடு காக்கப்படும். கலகலக்குமளவிற்கு கட்சியை நாங்கள் விட்டு விட மாட்டோம்.

கழகத் தோழர்கள் இந்தியை எதிர்க்க—எந்தத் தியாகத்தையும் ஏற்கத் தயாராக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இக்கூட்டத்தில் அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன், அப்துல் சமத், தொழிற்சங்கச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி, அ. பொ. அரசு, சென்னை மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் ஆகியோர் பேசினர்.

மறவர் படை!

சா. பொன்னிவளவன்

○

பொதுவுடமைச் சீனாவின் பயமுறுத்தலால் நாட்டின் கவனமெல்லாம் போர்முனையில் இருந்தது. இன்னும் அந்த அச்சம் விட்டபாடில்லை. இவ்வாறு இருக்கும் நிலையில்தான் இந்திய துணைக்கண்டத்திலுள்ள இந்தி பேசாத 58 விழுக்காடு மக்களுக்கு மேலும் ஒரு பேரிடி வந்திருக்கிறது.

துணைக்கண்டத்து அரசியல் சட்டத்தில் 1965-ம் ஆண்டிற்குப்பின் இந்திதான் இந்தியாவின் ஆட்சிமொழி என்று வரையறை செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் உருவாக்கப்படும்பொழுது ஒரே ஒரு வாக்கு வித்தியாசத்தில்தான் நிறைவேற்றப்பட்டது என்பதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். அதுவும் தலைவரின் வாக்கின் மூலம்தான்.

ஆங்கிலேயர்களின் ஆளுகையில், அதாவது 1938-ல் இந்தியைத் திணிக்கும்பொழுது, அதுவும் இப்பொழுது இந்தியை வெகு தீவிரத்துடன் எதிர்க்கும் இராசாசி அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது தமிழகத்தில் பெரும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார், திரு. வி. க., சாமி அருணகிரிநாதர், ஈழத்துச் சிவானந்த அடிகள், பெரியார், அண்ணா ஆகியோர் போர்க்கொடி உயர்த்தினர். அதன் மூலம் இந்தித் திணிப்பு மட்டந் தட்டப்பட்டது. நடைபெற்ற போராட்டத்தில் நடராசன்-தாளமுத்து ஆகிய இரு வீரர்கள் பலியாயினர்.

அதன் பின்னர் 1947-ல் இந்தியா விடுதலை பெற்ற பொழுது, இந்தியாவின் ஆட்சிமொழியாக இந்தியைக் கொண்டுவருவதற்கு மறைமுக ஏற்பாடு நடைபெற்றது. இம்முறையும் இந்தி விரட்டப்பட்டது. அறிஞர் அண்ணா தளபதியாக நின்று அறப்போர் நடத்தினர்.

1965-க்குப்பின் இந்தி மொழி ஆட்சி மொழி என்ற நிலை ஏற்பட்டபின், பலமாக எதிர்ப்புக் கிளம்புவதைக் கண்ட பண்டிதர் நேரு அவர்கள், 1959-ஆம் ஆண்டு செப்டம்பர் 4-ஆம் நாள் பாராளுமன்றத்தில், "1965-ம் ஆண்டிற்குப் பின்பும், இந்தி ஆட்சிமொழியானலும் ஆங்கிலம் துணை ஆட்சி மொழியாக இருக்கும்" என்று உறுதி மொழி கொடுத்தார். மேலும் அவர் கூறுகையில், "ஆங்கிலம் 1965-ம் ஆண்டிற்குப் பிறகும் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதை, இந்தி பேசும் மக்களல்ல, இந்தி பேசாத மக்களே முடிவு செய்யவேண்டும்" என்றும் அறிவித்தார்.

'இந்தி பேசாத மக்களின் மீது இந்தியைத் திணித்தால் இந்தியாவிற்கு ஆபத்து' என்று இராசகுமாரி அமிர்தகவுரி என்ற அம்மையார் அவர்கள் அசோக் மேத்தா கமிட்டிமுன்பு சாட்சியம் அளித்தார்கள். பண்டிதர் நேரு அவர்களின் உடன் பிறந்த சகோதரி திருமதி விசயலட்சுமி பண்டிட் அவர்கள் கல்கத்தா பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில், "ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்பது, தேசிய உணர்வுப் பூர்வமான விவகாரமாகிவிட்டது; மக்கள் ஓரளவிற்கு அமைதியான சூழ்நிலையைப் பெற்றால்தான் மனநிறைவளிக்கும் ஒரு முடிவைக் காண முடியும். ஆங்கிலம் நீடிக்க வேண்டுமென நான் வலியுறுத்த விரும்புகின்றேன். பாராளுமன்ற சனநாயக முறையைக் கடைப்பிடித்து வரும் சுதந்திர நாடாக நமது நாடு இருப்பதற்குக் காரணமாக அமைந்திருப்பது ஆங்கிலம் தாம்" என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இவர் மட்டுமல்லாது முன்னாள் உள்துறை அமைச்சர் பந்து அவர்களும், முன்னாள் குடியரசுத் தலைவர் பிரசாத் அவர்களும் "ஆங்கிலம் நீடிக்கும்" என்று உறுதி மொழி கொடுத்தனர். நேரு அவர்கள் பாராளுமன்றத்தில் கூறியது மட்டுமல்லாமல் பல பொதுக்கூட்டங்களிலும் உறுதிமொழி அளித்துள்ளார். டில்லி 'சானகிதேவி மகா-வித்யாலயா' என்ற நிறுவனத்தில் பேசும்பொழுது "பலாத்காரமாக இந்தி திணிக்கப்பட்டால் இந்தியாவின் ஒற்றுமை பாழாகும்" என்று நேரு கூறியுள்ளார்.

1960-ம் ஆண்டு. அப்பொழுது குடியரசுத் தலைவராக இருந்த பிரசாத் அவர்கள், 1965-ம் ஆண்டிலிருந்து இந்தியை மத்திய ஆட்சி மொழியாக்குவதில் தீவிரம் காட்ட வேண்டும்" என்று மாநிலங்களுக்குத் தாக்கீது அனுப்பினர். இதை உணர்ந்த தி. மு. கழகத்தின் பொதுக்குழு குமாரபாளையத்தில் கூடி ஒரு முடி செய்தது. அதன் பலனாக சென்னையில் நடைபெற்ற மாநாட்டில், தமிழகம் வரும் குடியரசுத் தலைவருக்கு கருப்புக்கொடி காட்டுவது எனது முடிவு எடுக்கப்பட்டது. அறிஞர் அண்ணா அவர்கள், கழகத் தலைவர்களுக்கும் சென்னை மேயர் உட்பட யாவருக்கும் கருப்புக்கொடி எதிர்ப்புக் காட்ட வேண்டுமென்று கழகச் சார்பில் அன்புக்கட்டளையிட்டார்கள். அந்த நேரத்திலும் நேரு, பிரசாத், பந்து ஆகியோர் ஆட்சி மொழியாக ஆங்கிலம் நீடிக்கும் என்று உறுதி தந்தனர்.

இந்த உறுதி மொழிகளால் இந்தி பேசாத மக்கள் ஓரளவு மன அமைதி பெற்றிருந்தனர். ஆங்கில நீடிப்பு மசோதாவும் பாராளுமன்றத்தில் வந்தது. ஆவலோடு மசோதாவின் வாக்கியங்களைப் படித்துப்பார்க்கும் பொழுது மத்திய அரசின் வஞ்சக தன்மை தெளிவாகப் புரிந்தது. நேருவின் உறுதிமொழி மாறுதல் அடைந்திருந்தது. ஆங்கிலம் துணை ஆட்சிமொழியாகக்கூட குறிப்பிடப்பிடப்படவில்லை. இந்தி பேசாத மக்களுக்கு இது ஒரு கண்துடைப்பு மசோதாவாகும்.

"ஒரு சட்டம் நாட்டு மக்களின் எண்ணத்தை எந்தக் கணத்தில் பிரதிபலிக்கவில்லையோ, அந்தக் கணத்திலே அந்தச் சட்டம் வலிவிழந்துவிடும்" என்று ஓர் அறிஞர் கூறியுள்ளார். இந்த ஆங்கில நீடிப்புச் சட்டமும் மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்காததால் வலிவிழந்துவிடும். தானாக வலிவிழக்காவிட்டாலும் திராவிட முன்னேற்றக் கழகம் அதை வலிவிழக்கச் செய்யும் என்ற நம்பிக்கை நாட்டு மக்களுக்கு உண்டு. முன்பு உறுதிமொழி கூறிய தலைமையமைச்சர் நேரு அவர்கள் "முன்புதான் கூறியது உறுதிமொழியன்று; என்கருத்து" என்று கூறுகிருர். பிரதமரே இப்படிக் கூறுகிருர் என்ருல் யார் கூறுவதை நாம் நம்ப முடியும். இவர் இவ்வாறு கூறியது இந்தி வெறியர்களின் பயமுறுத்தலேயாகும்.

இந்தச் சட்டம் பாராளுமன்றத்தில் வந்தவுடன் தென்னக மக்கள் வாளாயிருந்துவிடவில்லை. பாராளுமன்றத்தில் தி. மு. க. உறுப்பினர்களும், அண்ணா அவர்களும் பிராங் அந்தோணி போன்ற சுயேச்சை உறுப்பினர்களும் தங்களின் கண்டனக் குரலை எழுப்பினர். அறிஞர் அண்ணா அவர்கள் மாநிலங்கள் அவையில் சொற்பெருக்கு ஆற்றுகையில், "இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் ஒரு பெரும் போராட்டத்தைச் சந்திக்க நேரும்" என்று போர்ப்பரணி பாடினர்கள்.

இந்தச் சட்டத்தைப்பற்றி கூறுகையில் மைசூர் முதன்மந்திரியவர்கள், "இந்தி பேசாதோர்மீது, குறிப்பாகத் தென்னாட்டினர்மீது இந்தியைத் திணிக்கும் தவருன வழி இது" என்ருர். 'தென்னிந்தியாவில் உள்ள இந்தி பேசாத மக்கள் மீது இந்தியைத் திணிக்க வேண்டுமென்று வடநாட்டிலுள்ள சிலர் காட்டும் பேரார்வத்தால், தென்னாட்டு மக்களுக்கு இந்தி மீது ஒரு வகை வெறுப்பை எற்படுத்திவிட்டது" என்று கேரள முதன்மந்திரி சங்கர் அவர்கள் கூறியுள்ளார். ஆந்திர முதன் மந்திரியும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

ஆங்கிலம் வட இந்தியாவிற்கும் தென் இந்தியாவிற்கும் ஓர் இணைப்புப் பாலமாக இருந்தது. அந்த இணைப்பைத் தகர்ப்பதாக உள்ளது இப்பொழுது கொண்டு வரப்பட்டுள்ள 'ஆட்சி மொழி மசோதா' இந்தி திணிக்கப்பட்டால் பழைய பண்பாடு பாழாகிவிடும் நமக்கென ஒரு பண்பாடு இருந்ததாகவே பின்னல் தெரியாமற் போய்விடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தென்னாட்டுத் தலைவர்கள் மட்டுமில்லாமல் தென்னக செய்தித் தாள்களும் இம்மசோதாவை சாடின. "இந்தியாவிற்கு ஒரு பொதுமொழி தேவையென்ருல் அது யாருக்கும் எவ்வித அனுகூலத்தையும் தராத பொதுவான மொழியாக இருக்கவேண்டும். அப்படியிருக்கும் தகுதி பெற்றது ஆங்கிலம் ஒன்றுதான்" என்று 'இந்து' என்னும் ஆங்கில நாள் ஏடு குறிப்பிட்டது.

டெல்லியின் இந்தி ஆதிக்கக் கொடுமையிலிருந்து விடுபட நிரந்தரப் பரிகாரம் பிரிவினை! பிரிவினை! பிரிவினைதான்! என்று விடுதலை கூறினது. 'இந்தி பேசாத மக்களுக்கு இழைக்கப் பெற்றுள்ள மாபெரும் அநீதி' என்று நவமணி தீட்டியது. 'இலக்கிய இலக்கண வளமற்ற கொச்சை இந்தியைப் பேரரசின் தனி ஆட்சி மொழியாக்குதல் எக்காலத்திலும் பொருந்தாது' என்று தமிழ்நாடு சொல்லியது. 'இம்மசோதா நமது பிரதம மந்திரியின் உறுதிமொழிக்குத் தெளிவான ஒரு அவமதிப்பாகும்' என்று மித்திரன் செப்பியது.

5 இலட்சம் உறுப்பினர்களையும் 51 சட்டமன்ற உறுப்பினர்களையும் 8 பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஒப்பற்ற தலைவர் அறிஞர் அண்ணாவையும் அவர்கள்கொண்டுள்ள தென்னகத்தின், வழிகாட்டி, திராவிடத்தின் விடுதலை இயக்கம், அறிவுப் பாசறையான திராவிட முன்னேற்றக் கழகம் போர்ப்பரணி பாடுகிறது. தமிழகத்து மக்களையும், கேரள. கன்னட ஆந்திர மக்களையும் தட்டி எழுப்புகின்றது. அதன் பலனாக பொதுக்குழுவின் முடிவுப்படி சேலம், தஞ்சை, நெல்[redacted], ஆகிய இடங்களில் இந்திஎதிர்ப்பு மாநாடு நடந்து முடிவுற்றது. போராட்டக் குழுத் த[redacted]வர் கருணாநிதி அவர்களும் அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் போராட்டத் தொண்டர்களை தயார்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இது மொழிப் பிரச்சினையல்ல. அரசியல் பிரச்சினை. இந்தியா ஒன்ருக இருக்கும்வரை காங்கிரசு ஒழியும்வரை இந்தியும் ஒழியாது. எனவே இந்தி துரத்தப்படும் வரை போராட வாரீர்! என்று அண்ணன் அழைத்துவிட்டார். அவர் அழைப்பு எம் போன்ருேரின் காதில் தேனைப் பாய்ச்சியதைப் போல் இருக்கிறது. எம் தோள்கள் எல்லாம் விம்மித் தினவெடுக்கின்றன. 'வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள்கள் எங்கள் வெற்றுத் தோள்கள்" என்று மறவர் படை திரண்டுவிட்டது. வாழ்வா? சாவா? எது வந்தாலும் ஏற்றுக் கொள்ள இந்நாட்டு மறவர் படை தயார்! தயார்! இந்தி வீழ்க! தமிழ் வாழ்க! அண்ணா வாழ்க!

○

தமிழகமே எழுந்திருப்பாய்!

கோவை. க. இரத்தினம்

திராவிட முன்னேற்றக் கழகம் இன்று இந்தியை எதிர்த்து போர்க்கோலம் பூண்டுள்ளது. இது ஏதோ வெறும் உணர்ச்சியால் உந்தப்பட்டு எழுந்த கிளர்ச்சியா? அல்ல. கிளர்ச்சியின் நோக்கம், அதன் தன்மை, அந்த நோக்கத்துள் புதையுண்டு கிடக்கும் இந்தி பேசாத பகுதி மக்களின் எதிர்காலம் எல்லாம் இன்றைய அரசியல் சூழ்நிலைகளை நன்கு உன்னிப் பார்ப்பவர்களுக்குத் தெரியும்.

ஒரு நாட்டிலே ஆட்சி மொழிப் பிரச்சினை பற்றிய எண்ணம் எழும்போது, அந்த நாட்டினுடைய மொழிகள், இனங்கள், கலை, கலாச்சார, நாகரீகங்களையும் ஆழ அறிந்து வைத்திருப்பது அவசியமாகும். உதாரணமாக இந்தியத் துணைக் கண்டத்தை எடுத்துக் கொண்டோமானுல், இங்கு பல்வேறு இன மக்கள் வாழ்கின்றார்கள். நூற்றுக்கணக்கான மொழிகளை அவர்கள் பேசுகின்றனர். அவர்களுடைய கலைகளும், நாகரீகங்களும், உட்பிரிவுகளுமோ எண்ணற்றவை. இப்படிப்பட்ட ஒரு நாட்டிற்கு ஒரு பொது மொழி அவசியமா? 'தேவையில்லை' என்கின்றனர் நாட்டின் நடப்புகளை நன்குணர்ந்த பலர்.

'ஆம்' என்று கூறி, அதற்குத் தகுதியானது இந்திதான் என்கின்றனர் வேறு பலர். இவர்கள் வாதத்திலே உண்மை உண்டா? ஆட்சி மொழியாக இருக்கும் தகுதி இந்திக்கு உண்டா என்பதையும் நாம் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

'இந்தி இலக்கிய வரலாறு' என்ற நூலில் இராமச்சந்திர சுக்லா என்பவர், "இந்தி மொழியானது 1800-ல்தான் புழக்கத்துக்கு வந்தது; அதன் இயல் நடை இலக்கியம் 1860-ல்தான் தொடங்கியது" என்கிருர்.

இதைப் போலவே பல கற்றறிந்த இந்தி மேதைகளுடைய கருத்துக்களும் இந்தி மொழிக்கு எதிரிடையாகவே இருக்கிறது. இந்தி என்பது இப்போதுதான் பிறந்துள்ள ஒரு அறியாக் குழந்தை! ஆட்சிப் பொறுப்பு என்ற பெரும் சுமையை அதனுல் சுமக்கமுடியுமா என்ருல் நிச்சயம் முடியாது!

அதுமட்டுமல்ல, மிகமிகத் தொன்மையான மொழிகள் — இவள் என்று பிறந்தவள், என்று வளர்ந்தவள் என்றுணுராதவளாம் எங்கள் தாய் என்று பேசப்படும் தமிழ் மொழி—அதன் கூட்டு மொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம் போன்ற திராவிடக் குடும்ப மொழிகள், வங்க மொழி போன்ற பழம் பெருமையும், சிறப்பும் வாய்ந்த மொழிகள் எல்லாம் இருக்கும்போது இந்திக்கு மட்டும் ஏன் இந்த ஏற்றம்? இத்தனை உயர்வு இந்திக்குத் தரலாமா என்ருல் கூடாது—என்பதுதான் நியாயபுத்தி படைத்தவர் பதிலாக இருக்கமுடியும்!

ஆட்சி மொழியாக ஒரு மொழி இருக்கவேண்டும் என்ருல் அதற்கு அத்தகுதி உண்டா என்பதை ஆராய்ந்துணர வேண்டும். அரசியல், சட்டத்துறை, வணிகத்துறை, பொருளாதாரம், தொழில்துறை, கலை, தத்துவம், விஞ்ஞானம் போன்ற மனித வாழ்வின் பல்வேறு துறைகளையும் ஊடுருவி நிற்கும் ஒரு மொழிதான் ஆட்சியாக இருக்கத் தகுதி படைத்ததாக இருக்கமுடியும்.

ஆனுல் இப்படிப்பட்ட தகுதிகள் இன்று திணிக்கப்படும் இந்திக்கு உண்டா என்ருல் நிச்சயம் இல்லை. இந்தியில் பண்டைய இலக்கியமே இல்லை. சொற்பஞ்சமானது இந்திக்கு இருப்பதைப் போல வேறு எந்த மொழிக்கும் கிடையாது! பிற மொழி நூல்களை இந்தியில் மொழி பெயர்த்து, அதை இந்தி இலக்கியங்கள் என்று தம்பட்டம் தட்டிக்கொண்டிருக்கின்றனர் அவர்கள்.

இந்தியின் மிகப் பெரும் இலக்கியம் 'துளசிதாசர்இராமாயணம்' என்று பேசப்படுகிறது. ஆனுல் உண்மை அதுவா என்ருல் நிச்சயம் இல்லை. சமஸ்கிருதம் கலந்த அவதி மொழியில்தான் துளசிதாசர் அதை எழுதினுர். இந்தியின் இலக்கிய வறுமை, அதை தன் குழந்தை என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறது!

இப்படிப்பட்ட ஒரு மொழி எப்படி ஆட்சி மொழியாக இருக்கும் தகுதி வாய்ந்ததாகும்? இதை நாம் சொல்லும்போது நாளடைவில் இந்தியை வளர்ச்சியுறச் செய்துகொள்ளலாம் என்று சிலர் பதில் கூறுகிருர்கள். மொழி வளர்ச்சி என்பது இயற்கையாக ஏற்பட வேண்டிய ஒன்றே தவிர, அது உருவாக்கப்படக் கூடியதல்ல!

இந்தி ஆதரவாளர்கள் இன்னென்று கூறுகின்றனர். அது அந்நிய மொழி. நம்மை அடக்கியாண்ட வெள்ளையன் மொழி. அந்த மொழியை நாம் ஏற்றுக் கொள்வது அடிமைத்தனத்துக்கு வித்திடுவதாகும் என்று கூறுகின்றனர். அத்துடன் அவர்கள் நிற்பதில்லை. தி. மு. கழகம் திராவிட நாடு பிரச்சினையைக்கூட விட்டுவிட்டு இந்திமொழி பிரச்சினையில் தீவிரம் காட்டுவது ஏன்? என்ற வினுவையும் எழுப்புகின்றனர்.

உலக வரலாற்றின் சுதந்திரப் போராட்டச் சரித்திரங்களை ஆழப் படித்துவரும் நண்பர்கள் இந்தக் கூற்றை நிச்சயம் ஏற்கமாட்டார்கள். உதாரணமாக அயர்லாந்தின் விடுதலைப் போராட்டச் சரித்திரத்தை எடுத்துக்கொள்வோம். இந்தியத் துணைக்கண்டத்தின் விடுதலைப் போருக்கு சிறிதளவும் குறைந்ததல்ல அயர்லாந்தின் விடுதலைப் போர்.

"எங்கள் தலைவிதியை எங்கோ இருக்கும் தேம்ஸ் நதிக்கரை முடிவு செய்வதா?" என்று கொதித்தெழுந்த சுதந்திர வீரர்கள் ஆயிரக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டனர். ஆங்கில ஏகாதிபத்தியவாதிகளின் காட்டு தர்பார் முழுதும் அங்குதான் கட்டவிழ்த்து விடப்பட்டது என்று சரித்திரம் பேசுகிறது! நாமோ ஒன்றரை நூற்றுண்டுகளே ஆங்கில ஆதிக்கத்தில் உழன்ருேம். ஆனுல் அயர்லாந்து மக்களோ ஏழு நூற்றுண்டுகள் அவ்வாட்சியில் அவதிப்பட்டனர்.

அதுமட்டுமா? அவர்களது ஒரே தாய் மொழியான 'காலிக்' மொழி படிப்பதைத் தடைசெய்தது ஆங்கில ஆட்சி. அயர்லாந்து மக்கள் அனைவரும் ஆங்கில மொழிதான் படிக்கவேண்டும் என்று சட்டம் போட்டது. அது கண்டு கொதித்தெழுந்தனர் விடுதலை வீரர்கள். ஏமன் டிவேலரா, காலின்ஸ் மைக்கேல் போன்ற புரட்சிவாதிகள் மொழி நமது விழி! அந்த விழியை இழந்து நாம் வாழ்ந்தாலென்ன? அன்றி வீழ்ந்தாலென்ன? என முழக்கினர்!

"ஒவ்வொரு மனிதனுக்கும் மூன்று தாய்மார்கள் உண்டு. மொழித் தாய், நாட்டுத் தாய், பெற்றெடுத்தத் தாய்! இதில் முதல் தாயான என் மொழித் தாயைக் காப்பாற்றுவதற்காக நான் தாயக விடுதலைப் போரைச் சிறிது காலம் நிறுத்திவைத்திருக்கிறேன்" என்று முழங்கினுன் ஏமன் டிவேலரா!

அத்துடன் அவன் நின்றுவிடவில்லை. ஆட்சியினர் சட்டம் பொடிபட அவனே தன் நாட்டு மக்களைக் கூட்டிவைத்து தாய் மொழியான 'காலிக்' மொழியைக் கற்பித்தான்!

அப்படிப்பட்ட அயர்லாந்து—சுதந்திர அயர்லாந்து—இன்று தன் தாய்மொழியான காலிக்குடன் ஆங்கிலத்துக்கும் சம அந்தஸ்து கொடுத்துவைத்திருக்கிறது! அன்னிய மொழி, ஆதிக்க மொழி என்று நாம் கூறுவதைவிட அழகாக, ஆதாரத்துடன் ஆயிரமாயிரம் காரணங்களைக் கூறி ஆங்கிலத்தை நிராகரித்திருக்க முடியும் அயர்லாந்து. ஆனுல் ஏன் செய்யவில்லை? ஆங்கிலத்தின் அவசியத்தை அவர்கள் உணர்ந்திருப்பதுதான் காரணம்!

நமக்கு உலக நாடுகளுடன் உறவு வேண்டும் என்ருல்—விஞ்ஞானத் துறையில் நாமும் முன்

தி. மா. மு. க. இந்தி எதிர்ப்பு மாநாட்டுத் தீர்மானங்கள்

——(0)——

1. (அ) இந்தியத் துணைக் கண்டத்துப் பிரதமர் பண்டித நேரு அவர்கள், ஆட்சி மொழியைப் பற்றி 1960ல் தி. மு கழகத்தின் மூலம் தென்னக மக்களுக்கு அளித்திருந்த வாக்குறுதியை மீறியதற்காக இம்மாநாடு நேருவையும் அவரது அரசியலையும் வன்மையாகக் கண்டிக்கிறது.

(ஆ) 1963 ஏப்ரலில் டில்லி பாராளுமன்றத்தில் ஆட்சி மொழியைப்பற்றிச் சட்டம் நிறைவேற்றி இந்தியை ஆட்சிமொழியாகத் திணிப்பது மொழி ஏகாதிபத்தியம் அரசியல் எதேச்சதிகாரம் என்பதால் அதை எதிர்த்து நிற்பது சனநாயகவாதிகள் தலையாய கடமை என்பதை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

(இ) திணிக்கப்படும் இந்தியைத் தடுக்கும் நியாயமான முயற்சிகளுக்கு திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் வரவேற்பு நல்குவதோடு, தன்னுடைய ஒத்துழைப்பினையும் வழங்குவதென இம்மாநாடு தீர்மானிக்கிறது.

முன்மொழிதல் :
டி. கே. பொன்னுவேலு பி.ஏ.

வழிமொழிதல் :
என். வி. என். சோமு பி. ஏ.
மைனர் மோசசு பி.ஏ.,பி.எல்.

2. தட்சிண பாரத இந்தி பிரச்சார சபா என்ற பெயரில் இயங்கிவரும் அழைப்பு தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்று பாராளுமன்றத்தில் தீர்மானித்திருப்பது சட்டத்தின் துணைகொண்டு இந்தி மொழிக்கு தனிச் சலுகை தருகின்ற வகையிலும் இந்தி மொழி ஏகாதிபத்தியத்திற்கு வலியூட்டுகின்ற வகையிலும் அமைவதால் தென்னக மக்கள் அனைவரும் இந்த அமைப்புக்களைப் புறக்கணிக்க வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன்மொழிதல் :
தீர்த்தாரப்பன் எம்.ஏ.

வழிமொழிதல் :
சா. அப்பர்சுந்தரம் எம்.ஏ.பி.டி
மாணவி சிந்தாமணி ரஞ்சிதம்
திரு. ராசாமணி

—திருச்சி அக். 5, 6

னணிக்கு வரவேண்டும் என்ருல் —நமக்கு ஆங்கிலம் அவசியம். ஏன்? உலகத்தில் வெளியாகும் விஞ்ஞானப் பத்திரிகைகள், புத்தகங்களில் சுமார் ஐம்பது சதவிகிதம் இன்று ஆங்கிலத்தில்தான் வெளியாகிறது. உலக முழுதும் ஒலிபரப்பப்படும் ரேடியோ செய்திகளில் ஐந்தில் மூன்று பங்கு ஆங்கில மொழியில்தான் நிகழ்த்தப்படுகிறது. ஆங்கில ஞானத்தின் துணையின்றி மனிதகுலத்தின் அறிவு வளராது என்று உலகம் புரிந்துகொண்டுவிட்டது. ஆனல் அதை டெல்லியில் உள்ள சிலர் மட்டும் ஏனே அறிந்துகொள்ள மறுக்கிருர்களே!

வெள்ளையன் இந்நாட்டில் அடியெடுத்து வைத்தபோது, அன்று தமிழகத்தில் வாழ்ந்த கட்டபொம்மன், 'சின்ன மருது, பெரிய மருது, ராணி வேலு நாச்சியார் போன்ற எண்ணற்ற பல குறுநில மன்னர்கள் அவர்களை எதிர்த்துக் கொடி நாட்டினர். பின் ஏற்பட்ட விளைவுகள் என்ன? வீரன் கட்டபொம்மனின் கோட்டை இடித்து தரைமட்டமாக்கப்பட்டது; கோட்டை இருந்த சுவடே தெரியாதபடி உழுது ஆமணக்கு விதைக்கப்பட்ட மற்ற கோட்டைகளும் சிதைக்கப்பட்டது. ஏன்? அடிமைப்பட்டுக் கிடக்கும் மக்கள், நிமிர்ந்து நிற்கும் அக்கோட்டைகளைக் காணும்போது அவர்கள் வாழ்ந்த இனத்தின் பெருமை தெரியும். அந்தக் கோட்டை கொத்தளங்களில் குடியிருந்து கோலோச்சியவர்கள் எந்த லட்சியத்திற்காகப் படுகொலை செய்யப்பட்டார்கள் என்ற அருமை தெரியும். அதுமட்டுமா? இன்றுள்ள சிறுமையும் தெரியும். ஒருகாலத்தில் ஓங்கிப் புகழ் படைத்து வாழ்ந்த நாம் ஏன் இன்று இந்த இழிநிலையில் வாழ்கின்ருேம் என்ற ஏக்கப் பெருமூச்சு பிறக்கும்; அந்தப் பெருமூச்சு ஒரு நாள் புயலாக மாறிவிடும் என்பதை வெள்ளையன் கண்டான்! வரலாற்றுச் சின்னங்களை அழித்தான்!

பின்னர் படிப்படியாகத்தான் மொழியைத் திணித்தான். ஆங்கிலம் படித்தவர்களுக்குத்தான் வேலை வாய்ப்பு என்ற நிலைமை உருவாக்கினன். - அந்த நிலை இன்று மீண்டும் வடநாட்டவர்களால் நம்மீது திணிக்கப்படுகிறது. தென்னக மக்களின் விடுதலை உணர்வைத் தடுத்துநிறுத்த ஒரே நாடு என்று பேசப்படுகிறது! ஒரே உடை, ஒரே உணவு என்ற பேச்சும் கேட்கிறது! அதன் விளைவு இந்த மொழித் திணிப்பு!

இதனை நன்கு உணர்ந்துதான் திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி மொழியை எதிர்த்தே தீர்வது என்று முனைந்து நிற்கிறது. எந்தத் தியாகம் புரிந்தேனும் என்ன விலை கொடுத்தேனும்—இந்தி ஆதிக்கம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்!

ஆகவே தமிழகம் இதனைப் புரிந்துகொண்டு, முன்னேற்றக் கழகத்தின் இந்திப் பெரும் போராட்டத்திற்கு நல்லாதரவு தரவேண்டும்!

○

3-ம் பக்கத் தொடர்ச்சி………

கூட சுவான் தயங்கவில்லை. இவனது கத்தோலிக்க மதவெறியின் நெருப்புகங்குகள்தான் இன்று எண்ணற்ற புத்தபிட்சுக்களை சுட்டெரிக்கின்றன. நடன கேளிக்கைகள், மிருகச்சண்டை, அரை நிர்வாண உடை இவற்றை தடை செய்த சுவான் வெளிப்படையாகவே தன் மஞ்சள் மேனி தெரிய நீச்சல் குளங்களுக்கு வருவதுண்டு.

புத்தமதத்தவர்களான பெரும்பான்மையான மக்களை, மைனாரிட்டியான சத்தோலிக்கர்கள் அடக்கி ஆள்வதற்கு இவளே காரணம் என்று மக்கள் நினைக்கிருர்கள். புத்தமதத்தவர்களுக்கு, கத்தோலிக்கர் போலவே உரிமைகள் கிடைக்க சுவான்தான் பெருத்த தடையாக நிற்கிருள். ஆர்ப்பாட்டங்களுக்கு சிறிது விட்டுக் கொடுத்தால், பிறகு வீழ்ச்சிதான் என்பது சுவானின் நினைப்பு. கம்யூனிஸ்டுகள் தான் பௌத்தர்களைத் தூண்டிவிட்டிருப்பதாகவும் சொல்கிருள்!

பிட்சுக்களின் போர்வையில் உலவும் புரட்சிக்காரர்களின் மீது அடக்குமுறையை ஏவிவிட தியாம் தயங்கும்போதெல்லாம் சுவான் அவனுக்கு உற்சாகமூட்டுகிருள்; ஆத்திரத்தோடு வசைபாடுகிருள்! பௌத்தர்களை பிடித்துவைத்து' தினமும் மூன்று முறை கடினமாக அடித்து சித்திரவதை செய்தால் அவர்கள் வழிக்கு வந்து விடுவார்கள் என்பது பிரசித்தமான அடக்குமுறைத் திட்டங்களில் ஒன்று.

பௌத்தர்களுக்குநீதிவேண்டி பிட்சுவான துவாங்டக் தம்மைத் தாமே நெருப்பு வைத்துக் கொண்டு சாம்பலான போது ஒரு நிருபரிடம் சுவான் தெரிவித்த கருந்து இது;

ஐயோ, அநியாயமே! பௌத்தர்கள் தங்கள் பிட்சுவை போதை ஏறும்படி குடிக்கவைத்து, வேக வைத்திருக்கிருர்கள்! அதுவும் அந்நிய நாட்டிலிருந்துவந்த பெட்ரோலை ஊற்றிக்கொண்டுதான் செய்திருக்கிருர்கள்!

பௌத்தர்களின் கிளர்ச்சிக்கு அந்நிய நாட்டினரின் தூண்டுதலினலேயே நடக்கிறது என்ற சுவானின் கருத்தும் இதில் பிரதிபலிக்கிறது. இவளது இரக்கமற்ற குரூர நடவடிக்கைகள் கண்டு வருந்தி அமெரிக்கதூதர் பதவியைத் துறந்த டிரான்வான் சுங்வைப் பார்த்து சுவான் 'கோழை' என்று திட்டித்தீர்த்தாள்! இந்த டிராஸ்வா சுங் வேறுயாருமல்ல; சுவானின் தந்தைதான்!

இவர்களிடையே முன்னரே தகராறு இருந்து வந்திருக்கிறது. பெற்றவர்களிடமும், உடன்பிறந்தவர்களிடமும் இரக்கமற்று நடந்துகொண்ட சுவான் ஏழு வருடங்களுக்கு முன்பே தந்தையின் சொத்துக்களை பறிமுதல் செய்ய தியாமைத் தூண்டிவிட்டாள்!

தென் வியட்நாமை கம்யூனிஸ்ட் எதிர் முகமாக வைத்திருக்க அமெரிக்க அரசு படாத பாடுபட்டு வருகிறது. தினமும் பத்துலட்சம் டாலர் இதற்காக செலவிடப் படுகிறது. பதினுலாயிரம் அமெரிக்க வீரர்கள் கம்யூனிஸ்டு வியட்நாமிற்கு எதிராக போராட அங்கே குவிந்து கிடக்கிருர்கள்! சுவானின் சொல்லிலே ஆடும் தியாமின் அரசை காப்பாற்றிக் கொண்டு, அதே போது, கம்யூனிஸ்டுகளோடும் போராடுவது அமெரிக்காவுக்கு பெரிய தலைவலியைக்கொடுத்திருக்கிறது. தியாம் அரசு சீர்பெறும் என்ற நம்பிக்கையும் அமெரிக்காவுக்கு இல்லை!

தியாமின் ஆட்சியை வைத்துக்கொண்டு வியட்நாமில் அமைதியை நிலை நிறுத்த முடியாது என்று கென்னடி வெளிப்படையாகவே தெரிவித்துவிட்டார்!

இன்றைய நிலையில் தியாமின் அரசு பிளவுபட்டே நிற்கிறது. பௌத்தர்களின் கிளர்ச்சியை ஒடுக்குவதில் தியாம் போதுமான வேகத்தை காட்டாமலிருக்கிருன் என்று சுவானுக்கும், அவள் கூட்டத்தாருக்கும் ஒரு குறைபாடு இருக்கிறது. சுவான்—திருமதி நூ தனது கணவனையே ஜனதிபதியாக்க முயற்சிப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஏதேச்சாதிகாரியும், கொடுமையாளனுமான நூவின் கையில் ஆட்சி பீடம் சிக்குவது, குரங்கு சாராயம் குடித்த கோலாகலத்தை உண்டாக்கிவிடும்! அதைவிடத் தியாமே தேவலை என்றுகூட அமெரிக்காவுக்குப் படுகிறது.

"நான் தெய்வத்தை நம்புகிறேன். ஏனென்ருல் என் விருப்பங்களை தெய்வம் அப்படியே ஏற்றுக்கொள்கிறது." என்று சொல்லும் திருமதி நூவையும், தியாமின் அரசையும் பளபளக்கும் கண்களோடு இன்று உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது! காற்று எந்த திசையில் அடிக்கப் போகிறது என்பதை தெளிவாக்கும் வியட்நாம் சரித்திரம் இனி மேல்தான் எழுதப்படவேண்டும் ……

அடிமை நீங்கி ஆடுவோம்!

——(0)——

எழுத்துமில்லை பொருளுமில்லை
எல்லாமிரவல் சரக்கடா!
வழுத்துகின்ருர் வாழ்வளிக்க
வந்தால் பெருந் தீங்கடா!

அடிமைகொள்ளத் தமிழர் நாட்டை
அடியெடுத்து வந்ததோர்
கொடிய நஞ்சு உறவினுலே
குடியிழப்போம் எண்ணடா!

சட்டமென்ற வல்லைக் காட்டிச்
சரித்திரந்தை மறைக்கிருர்;
திட்டமிட்டுக் 'குரங்கை'க் கொண்டு
திருவிடத்தை மாய்க்கிருர்!

கற்றறிந்தோர் ஒன்று சேர்ந்த
கருத்தில் இனிமை தந்தவள்
உற்ற பெருமை உருச்சிதைந்தும்
ஊமையாகி இருப்பமோ?

ஊனிசைந்த உடல்விளங்கி
உருபநத்து வாழ்வதின்
தேனிசைந்த செந்தமிழ்க்குத்
தீமை மாய்த்து மாளுவோம்!

கத்தி முனையில் பேசும் வீரம்
காட்டுகின்ற தீரமே
முத்தமிழ்க்குத் தகுதியென்று
முத்திரையால் ஏற்றுவோம்!

காலம் விட்ட குறையை நாளை
காரியத்தில் ஆற்றுவோம்!
ஞாலம் வென்ற மொழியின் நேர்மை
நமதுவென்றே போற்றுவோம்!

பகை வளர்க்கும் புன்மை இந்திப்
பாடைதன்னைச் சாடுவோம்!
குகை வளர்ந்த அடிமை நீங்கிக்
குறையில் இன்பம் ஆடுவோம்!

கடலூர் தமிழ்மணி

அன்னைத் தமிழும் அந்நிய மொழியும்!

என். வி. என். செல்வம்



விலைவாசி குறைப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு பலியான மாவீரர் கோ. சு. மணி

ஒவ்வொரு மனிதனும் தனது தாய் நாட்டையும் தனது தாய் மொழியையும் காக்க முற்படுவது இயற்கையே. தனது தாய் மொழி தான் உலகத்திலேயே சிறந்த மொழியாக ' இருக்கவேண்டும் என்று ஒவ்வொருவனும் விரும்புவான். அத்தகைய விருப்பம் எல்லா நாட்டவனுக்கும் அவசியமானாலும், அந்த விருப்பத்தினால் வேறு நாட்டின் தாய்மொழியை ஆதிக்கம் கொள்ள முற்படுவது அறிவுலகம் போற்றத்தக்க நெறியும் அல்ல—நேர்மையுமல்ல ! அத்தகைய வெறிச் செயலில் இன்று இந்தி ஆதிக்க வெறியர்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் வளம் அற்றதும், இலக்கணம், இலக்கியச் செறிவற்றதுமாகிய இந்தி மொழியை திணித்துத் தனது ஆதிக்க வெறியை நிலை நாட்டிக்கொள்ள நினைக்கின்றனர்.

இந்தியை நம்நாட்டில் திணிப்பது என்பது தமிழகத்தின் உணர்ச்சியை தூண்டுவதும் முறையற்ற செயலுமாகும்.

தமிழ்நாட்டில் உள்ள அனைவரையும் மொழிப்பற்று அற்றவர்கள் என்று கருதி; இந்தி வெறியர்கள் தம்மொழியைத் திணிக்கும் செயலில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதே உண்மை !

தமிழ் மொழியின் சிறப்பையும், தமிழ் நாட்டின் பெருமையையும் தமிழ்நாட்டில் உள்ள மக்களின் மொழிப்பற்றையும் அறியாத இந்தி ஏகாதிபத்தியம் இந்தியை திணிக்கும் செயலில் இறங்கும்போது அதைத்தடுத்து நிறுத்தி நமது தாய்மொழியை காக்கும் பணியில் ஈடுபடவேண்டியது தமிழர்தம் தலையாய கடமையாகும்.

இந்தி ஏகாதிபத்யம் தமிழ் மொழியை அழிக்க மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலுக்கும் தமிழ் நாட்டில் பலத்த எதிர்ப்பு இருந்து வருகிறது என்பது உலகறிந்த உண்மையாகும்.

இந்தியைத் திணிக்கும் நேரு சர்க்கார் இந்திக்கு என்ன தகுதி உண்டு என்பதை முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும்.

அதை விட்டு ஜனநாயகக் காவலர்கள் என்று கூறி பறை கொட்டுபவர்கள், இந்தியைத் திணிப்பது எத்துணை அளவில் முரண்பட்ட செயல் என்பதை அறிய மறந்து விடுகின்றனர். நேரு அவர்கள் உலகத்தில் உள்ள பல தலைவர்களாலும் போற்றப்படுபவர் அத்தகைய சிறந்த அரசியல்வாதியான அவர் இந்தியின் பலவீனத்தையறிந்து தனது முடிவை மாற்றிக் கொள்வதே சிறந்த சனநாயக முறையாகும். தான் கொடுத்த வாக்குறுதியை அவர் கடைப்பிடித்து செயல்படுவார் என்று தமிழகம் நம்பிக்கை பெற்றிருந்தது. ஆனால் இன்று நடைபெறும் செயல்கள் வாக்குறுதி தவறியோர் பட்டியலில் சேர்ந்தவர் என்று எண்ணும் அளவுக்கு மொழிப் பிரச்சினையில் தமதுவாக்குறுதிக்கு முரணாக நடக்கிறார்.

எனவே இந்தி வெறியர்களின் ஆதரவாளரான அவரை நம்புவதில் பயனில்லை. ஏனென்றால் நாம் எடுத்துக்காட்டியுள்ள விவரங்களும் விளக்கங்களும் கணக்கில் அடங்கா. ஆதலின் அவர்கள் இந்தியைக் கட்டாயமாகத் திணிக்கும்போது அதை எதிர்ப்பதே நமது உயிர்ப் பிரச்சினை ஆகும்.

உலகத்திலேயே சிறந்த மொழியாகிய ஆங்கிலமும், அருந்தமிழும் இருக்கும்போது எத்தகைய திறனுமற்ற இந்தியின் தேவைக்கு இடம் இருக்க முடியாது. ஆங்கிலம் தமிழ் ஆகிய இரு மொழிகளைவிட இந்திக்கு என்ன தகுதி திறன் இருக்கிறது என்பதை நாடாள்வோர் உணரவேண்டும். ஆகவேதான் தகுதியில்லா மொழியும், இந்தியாவிலேயே குறைந்த சதவிகிதம் மக்களால் பேசப்படும் மொழியாகிய இந்தியை இந்நாட்டில் கொண்டு வந்து திணித்து தமிழ் போன்ற மொழிகளை அழிக்க நினைக்கும் எண்ணம் என்றும் வெற்றியைத் தராது என்பது உறுதி! உறுதி!

வலிவும், பொலிவும், பொருந்தியவர்கள், மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும் மிக்கவர்களாகிய தமிழர்கள் தமிழ்மொழிக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை நினைத்து நொந்திருக்கும் வேளையில் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதைப் போன்று இந்தி வெறியர்கள் மீண்டும் தமிழுக்குத் தீங்கு இழைக்கத் துணியும் செயல் தகாததாகும்.

அத்தகைய செயலில் அவர்கள் ஈடுபடுவதை உடனே நிறுத்திக் கொள்வது சாலச் சிறந்ததாகும். தமிழ்நாட்டார் தாய்மொழியைக் காக்கும் பணியில் உடல், பொருள், ஆவி அனைத்தும் இழக்கத் துடிப்பரே அன்றி இந்தியை ஏற்று உயிர் வாழ ஒரு நாளும் சம்மதியார்!

பெற்ற அன்னையைப் போன்ற தமிழ் மொழி இருக்க மாற்றாந்தாயாகிய இந்தி எள்ளளவும் ஏற்கத் தகுதியற்றது. தமிழர். அன்னைத் தமிழின் அணைப்பில் வாழ்ந்தால்தான் வாழ்வர்—இன்றேல் இன்னுயிர் ஈந்தேனும் அழிவர்.

தமிழுக்குத் தொண்டாற்றும் தகைசால் அண்ணாவின் அணியில் இன்று தரணியே திரண்டு நிற்கிறது. அவனியோரே அன்னைத் தமிழினைக் காக்க விரைந்து வாரீர்! தாயகத்தோரே தாய் மொழியைக் காக்க வாரீர்! வாரீர்!

அண்ணாவின் நெறியினில் செல்வோம்!

அன்னை மொழியின் பகையினை வெல்வோம்!



1938-39 இந்தி எதிர்ப்புப் போரில், பங்குகொண்டு அயராது பணியாற்றி தாய்மொழி காத்த பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்களும் அவரது தமக்கையார் மலர்முகத்தம்மையார் அவர்களும்.

ஒரு கொடியில் இரு மலர்கள்!

தமிழகத்திலும் மற்றும் இந்தி பேசாத மாநிலங்களிலும் இந்திக்கு ஏன் எதிர்ப்பு என்று வடவர்கள் கேட்கிருர்கள்? நாமும் அதையே அவர்களை கேட்கிருேம். இந்தி பேசாதவர்கள் பலரின் உள்ளங்களைப் புரிந்துகொள்ளாமல் ஏன் இந்தியை புகுத்துகிறீர்கள்? இல்லை இந்தியை புகுத்தவில்லை இந்திய அரசியல் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவருகிருேம் என்று அவர்கள் பதிலளிக்கிருர்கள். என். எம். சாமி [முன்ஞள் காங்கிரஸ் எம். பி.] 7-8-59ல் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டதை அவர்கட்கு காணிக்கையாக்குகிறேன்.

"நம்முடைய அரசியல் சட்டத்தில் எந்த இடத்திலும் ஆங்கிலத்தை முற்றிலும் நீக்கிவிட்டு அந்த இடத்தை இந்திக்கு அளிக்கவேண்டும்என்று சொல்லவில்லை என்பதையாவது உணரவேண்டும்" என்ருர்.

ஆந்திரத்தைச் சார்ந்த திருமதி வேதகுமாரி எம்.பி. [காங்கிரஸ்] குறிப்பிட்டுள்ளதை அவர்கள் கவனிப்பார்களா?

'அரசாங்க மொழி எது என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு இந்தி பேசாத மக்களிடம்தான் விடப்படவேண்டும்' என்ருர். இவ்வாறு நாம் பலரை சாட்சிக்கு அழைக்கலாம். இவ்வளவு ஏன் இந்திய ஒருமைப்பாட்டு குழுவின் தலைவராக இருந்த சர். சி. பி. இராமசாமி ஐயர் அவர்களே இந்தியை நுழைக்காதே என்று கையொப்பமிட்ட பலருள் ஒருவர் ஆயிற்றே!

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் ஒரு விஞவுக்கு விடையிறுத்துள்ளார் அஃது கவனிக்கற்பாலது.

உலகத்துக்கு ஆங்கிலமொழி அவசியம் என்ருல் இந்தியாவுக்கு இந்தி மொழி அவசியம் இல்லையா?

நாற்பது இலட்சம் ரூபாய் விலையில் உலகத்தைச் சுற்றிப்பார்க்க ஒரு ஆகாயக் கட்பல் வாங்கினேன் என்று ஒருவர் சொன்ஞர், அவர் மனைவிஒப்பிஞள். மற்ருெரு நாள் ஒன்றரைஇலட்சம் விலையில் இந்தியாவைச் சுற்றிப்பார்க்க ஒரு ஆகாயக்கப்பல் வாங்கப் போகிறேன் என்று சொன்ஞர். அதற்கு மனைவி கேட்ட கேள்வி இதுதான்: உலகத்தைச் சுற்றும் ஆகாய கப்பலைக் கொண்டு இந்தியாவைச் சுற்றமுடியாதா? என்பது. உலகத்தோடு தொடர்பு கொள்ள ஆங்கிலத்தைப் பயன்படுத்துகிருேம், ஏன் அதே ஆங்கில மொழியை இந்தியாவில் பயன்படுத்தக்கூடாது என்பதே அவர் கேட்கின்ற விஞவாகும்?

உலகத்தோடு தொடர்பு கொள்ள ஆங்கிலமும். இந்தியாவின் மற்ற இடங்களில் தொடர்பு கொள்ள இந்தியும் கற்க வேண்டுமென்ருல் அதற்கு மேலே கூறிய உதாரணம் மெத்த பொருத்தமானதன்ருே!

எதைச் சொல்லி வடவர்களின் வன்நெஞ்சை மாற்ற இயலும்? ஜனநாயக முறையில் அரசியலை மாற்றிஞல்தான் தானே மற்ற மற்றவை நிகழும். இதையேதான் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே பிளேட்டோ சொன்ஞர்.

'Most of the political and social ill from which you suffer are under your control Given or the will to changethem, you can live in another wiser fashion"

"பெரும்பாலானஅரசியல், சமுதாய குறைபாடுகளினின்று நீங்கள் விடுபட வேண்டுமாஞல், நீங்கள் உங்களை திடப்படுத்திக் கொண்டு, அரசியலை மாற்றி அமைத்தால் நீங்கள் சுகமாக வாழலாம்" என்ருர்.

இந்திவளம் பெருத மொழி என்பதால் மட்டும் நாம் எதிர்க்கவில்லை, அன்னிய மொழி என்பதால்மட்டும் எதிர்க்கவில்லை, நம் மொழியை சிதைக்கச் செய்து நம்மை ஆட்கொள்ள ஆளவரும் மொழி என்பதாலேயே எதிர்க்கின்ருேம்! இந்தியை 42 சதவிகித மக்கள் பேசுவதாலேயே நாம் அதனை பொதுமொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமா? 52 சதவிகிதத்தினர் நிலை என்ன ஆவது? ஜனநாயகத்திற்கு இது ஏற்புடையதா?

இந்தி நுழைவதைக் கண்டுவாளா இருப்பவர்களை என்ன என்பது வருடக்கணக்கில் நீர்பாய்ச்சி வளர்த்த தென்னை வளைந்து தோட்டத்திற்கு வெளியே வருவோர் போவோர்க்கு பயன் தந்தால் என்னென்பது முடத்தெங்கு என்போம் அதே போல் தமிழகத்தில் தமிழாலேயே வளர்ந்து தமிழுக்கே இடர் என்னும்போது வாளா இருப்பவர்களை என்னென்பது?இந்த நேரத்திலேதான் நாம் நம்முடைய மொழியின்தொன்மையையும், பெருமையையும் எண்ணிப்பார்த்து நம்மை நாமே உற்சாகப் படுத்திக் கொண்டு நம்மொழியை காக்க உறுதி கொள்ள வேண்டும்.

ஆகவே தாய்மொழி தமிழும் உலக மொழி ஆங்கிலமும் நமக்கு போதும். ஆங்கிலமே உலகத் தொடர்புகளுக்கும் இந்தியத் தொடர்புக்கும் பயன்படும்,

ஒரு மொழியால் இரு பலன்கள்!
ஒரு கொடியில் இரு மலர்கள்!

O

தோப்பூர்
திருவேங்கடம் எம். ஏ.

10—6—63 அன்று சென்னையில் நடைபெற்ற பொதுக்குழுவில் அமைக்கப்பட்ட போராட்டக் குழுவின் தலைவர் கலைஞர் மு. கருணநிதி எம். எல். ஏ. அவர்கள்.

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி-நடராசன்—சோமு அச்சகம், 16, இப்ராகிம் சேட் தெரு, சென்னை-1